296



N43·2·5
199788

வசந்தம்

விலை
12
அணா

சுபானு ஆவணி
ஆகஸ்ட் 1943

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜு செட்டியார் பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

தந்திவிலாசம் : FLOWER. டெலிபோன் நெ. 175.

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,
அவனசி ரோடு, கோயமுத்தூர்.

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையருக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங் க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

அற்புதமான கதை! மகோன்னதமான பேசும் படமாக வெளி வருகிறது! காதலை வெறும் கற்பனை என்று உதறி விட்டு, சாந்தியை நாடிச் சென்ற ஒரு மன்னனின் வாழ்வை தத்ரூபமாகச் சித்திரிக்கும் அதி அற்புதக் கதை!

கலைவாணி பிலிம்ஸ்:

பர்த்ருஹரி

(தமிழ்)

சாமா
ஜெயம்மா
என். எஸ். கிருஷ்ணன்
டி. ஏ. மதுரம்
காளி. என். ரத்தினம்
சி. டி. ராஜகாந்தம்

டைரக்ஷன்:

கே. சுப்ரமண்யம்
பி, ஏ; பி, எல்.

உணர்ச்சிச் சித்திரங்கள்
திடுக்கிடும் சம்பவங்கள்
கருணுமிர்த கானங்கள்
வனப்புமிக்க வசனங்கள்
அபூர்வ கலை நுணுக்கம்
நிறைந்த இதற்கு முன்
திரை உலகம் காணுத
அபாரமான படம்.

தயாராகி வருகிறது:

சோல்டிஸ்ட்ரிபியூடர்ஸ்:

ஸ்வர்ணு பிலிம் கம்பெனி
கச்சேரி ரோடு மைலாப்பூர், சென்னை.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக்கலந்து ஆலோசிக்கவும்

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனா பஜார், மதராஸ்.

சிசிலி

வெற்றிக்கு முதற்படியாகும்

எனவே,

கவர்னர்

யுத்த நிதிக்கு

மீண்டும் உதவி செய்வதன் மூலம்

வெற்றிக்குரிய நாளை

துரிதப்படுத்துங்கள்.

OFFICE OF THE REGISTR...
8 - MAY 1944
MADRAS

இண்டோ - கமர்ஷியல் பாங்கு, லிமிடெட்

1943-ஆம் ஜூன்-மீ 30-உய கணக்கு விவரம்.

பொறுப்புகள்.

	ரூ. அ. பை.	ரூ. அ. பை.
மூலதனம்		
அதிகாரம் பெற்றது ...	25,00,000 0 0	
ரொக்கத்திற்கு கோரப்பட்ட மூலதனம் ...	21,25,000 0 0	
கோரப்பட்டு செலுத்தப்பட்டது ...	18,75,000 0 0	
இதில் வசூல் பாக்கி ...	448 11 10	18,74,551 4 2
ரிசர்வ் நிதி ...		1,05,000 0 0
எதிர்பாராத செலவு இனங்கள் நிதி ...		17,500 0 0
முதலீடு ரிசர்வ் ...		5,000 0 0
வருமான வரிக்கு ஏற்பாடு ...		40.000 0 0
பொறுப்புகள்:—		
டிபாசிட்டுகள்; பிக்சட் கரண்ட் சேவிங்ஸ் பாங்கு, மாதாந்தர ரொக்க சர்டிபிகேட், சிப்பந்தி க்ஷேமநிதி, பிராவிடெண்ட் மான்ய நிதி முதலிய இதர பொறுப்புகள் ...		1,52,07,850 15 3
பாங்கி பற்று ...		இல்லை

இருப்புகள்.

	ரூ. அ. பை.	ரூ. அ. பை.
கடன் — பற்று உண்டியல் பேரில் கொடுக்கல் வாங்கல், வாங்கின உண்டியல்கள், பிராமிசரி நோட்டுகள், மற்றும் இதர அட்வான்சுகள் ...		60,36,073 13 2
1913-ஆத்து இந்திய கம்பெனி சட்டத்தின் 7-வது பிரிவின்பிரகாரம் உள்ள இனங்கள்:—		
(1) பாங்கிக்கு பூரண நம்பிக்கை என்று சொல்லக்கூடிய கடன்கள் ...	40,64,638 15 7	
(2) பாங்கியின் வசமுள்ள கடன்களில் பூர்ண நம்பிக்கையுள்ளவை என்று சொல்லக்கூடியவை:—		
(a) ஜாயிண்டு புரோநோட்டுகளும் இதர புரோநோட்டுகளும் ...	5,75,411 0 11	
(b) தனித்தனியாக பலர்பேரில் உள்ள புரோநோட்டுகள் ...	3,93,507 15 6	
(c) உண்டியல்களும் டிராப்ட்களும்	9,68,315 1 0	
(d) புரோநோட்டு இல்லாமல் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அதிகப்பற்று ...	16,849 4 11	
(3) சந்தேகாஸ்பதமான அல்லது வசூலாகாத கடன் விவரம் ...	17,351 7 3	
(4) டைரக்டர்கள் இதர ஆபீசர்கள் பற்றில் உள்ள கடன் விவரம் ...	இல்லை	
இந்த வாய்தா காலத்தில் டைரக்டர்களுக்கு கடனாகவோ அட்வான்ஸாகவோ கொடுத்த தொகை, இல்லை.		
பாங்கி கட்டிடம் பெறுமானம் ...	24,379 3 5	
31—12—42 வரை தள்ளப்பட்ட தேய்மான பெறுமானம் போக ...	3,600 0 0	20,779 3 5

எடுக்காத டிவிடெண்டுகள் ...		2,695 4 9
வசூலாகவேண்டிய பில்கள் ...		10,01,871 9 8
கிளை ஸ்தாபன பற்று வரவு தீர்வு ...		6,04,953 11 9
டிராப்டுகள், T. T. கள் கொடுபட வேண்டியது ...		1,88,316 11 8
சில்லரை இனம் ...		59,736 4 11
லாப நஷ்ட கணக்கு:—		
	206 4 2	
நாளது ½ வருஷத்து முன் இருப்பு நிகர லாபம் ...	1,24,597 2 7	1,24,803 6 9
* வரியில்லாத சேர்த்து வைக்கக்கூடாத விசேஷ டிவிடெண்டுகளுக்கு (வருஷத்துக்கு 6%) உள்ளவற்றிற்கு மேற்கண்ட குறியீடு:—		
மொத்தம் ...		1,92,32,279 4 11

கஜானா பெட்டி, நாற்காலி மேஜை சாமான்கள் பெறுமானம் ...	1,03,160 10 5	
இந்த ½ வருஷத்தில் அதிகப்படியாக வாங்கியது ...	363 4 2	
	1,03,523 14 7	
இந்த ½ வருஷத்து தள்ளுபடி போக ...	2.100 15 6	
	1,01,422 15 1	
30—6—43 வரை தள்ளுபடி செய்யப்பட்ட தேய்மான இனம் போக ...	31,782 3 10	69,640 11 3
கணக்கு புத்தகங்கள், கடுதாசி முதலிய ஸ்டாக்கு வகையரு ...		44,490 3 2
வசூலிக்கவேண்டிய பில்கள் ...		10,01,871 9 8
சில்லரை இனங்கள் ...		2,08,363 15 5
முதலீடுகள் ...		
*சர்க்கார் கடன் பத்திரங்கள் பெறுமானம் ரூ. 48,42,700 0 0 மார்க்கட் விலைபடி ரூ. 49,23,741 6 0	49,46,204 15 3	
ரிசர்வ் பாங்கு பங்குகள் ...	500 0 0	
டிபன்சர்கள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி பங்குகள் (மார்க்கெட் பெறுமானம் ரூ. 46,000—0—0)	38,200 0 0	
ஷெட்யூல் பாங்குவசம் டிபாசிட் செய்யப்பட்ட சிப்பந்தி செக்யூரிட்டிகள்	15,725 0 0	
ஸ்தாவர சொத்துக்கள் ...	21,866 6 2	50,22,496 5 5
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி இனம்		
கைவசம் ரொக்கம் ...	34,62,551 5 3	21,796 1 6
பாங்கியில் கரண்ட் அகௌண்டிலுள்ள ரொக்கம் ...	33,44,216 0 8	68,06,767 5 11
* சர்க்கார் கடன் பத்திரங்கள் ரூ. 57,500—0—0 பெறுமானம் உள்ளவை சிப்பந்திகளின் பிராவிடெண்டு மான்ய நிதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது		
மொத்தம் ...		1,92,32,279 4 11

P. S. சுப்ரமணிய அய்யர், B. A., G. D. A., R. A.,

ரிஜிஸ்டர்டு அகவுன்டென்ட், ஆடிட்டர்,

S. N. N. சங்கரலிங்க அய்யர்,

நிர்வாக டைரக்டர்.

டெலிபோன் : 100. தந்தி: "தாஸ்கௌட்"

N. தாசேகவுண்டர் & கோ.

ஏஜண்டுகள்: அண்டர்வுட் டைப்ரைட்டர், பேவர் லூபா, மெரிடின, ஒமெகா, டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும் மற்ற வகை கடியாரங்களுக்கும்.

மருந்து வகைகள், வைத்தியக் கருவிகள், நூதன சாமான்கள், எனமல் கண்ணாடி சாமான் தினுசுகள் முதலியவைகளுக்கும் சிறந்த இடம்.

இன்னும்,

உங்கள் தேவைகளுக்கு எங்களை விசாரியுங்கள்.

N. Dasai Gownder & Co.,

CHEMISTS & DRUGGISTS,

Avanashi Road, Coimbatore

ஸ்ரீ இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், எஸ்பிளனேட், மதராஸ்.

பிராஞ்சுகள்:

ஆலப்புழை, பம்பாய், கண்ணனூர், கோயமுத்தூர், தேவக்கோட்டை, காரைக்குடி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சேலம், சிவகெங்கை.

வெளியிடப்பட்டு வசூலான மூலதனம்	ரூ. 50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 22,27,000
ரிஸர்வ் நிதி	ரூ. 7,00,000

கனம் எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார், சேர்மன்.

பிக்ஸட் டிபாசிட்டுகளும் கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்

6—மாதத்துக்கு	2%
12 ,, ...	$2\frac{1}{4}$%
24 ,, ...	$2\frac{1}{2}$%

எல்லாவித பாங் அலுவல்களும் ஏற்றுக் கொண்டு நடத்தப்படும்

எஸ். டி. சதாசிவம், ஜெனரல் மேனேஜர்.

மலர் 2 வசந்தம் இதழ் 5

பொருளடக்கம்

வாழ்க முதலியார்	...	
மார்க்குக் கொடுக்கும் விதம் ...	டி. கே. சி	10
அன்பும் வெறுப்பும்	ராஜாஜி	13
பணமும் பஞ்சமும்	ஆர். கே. எஸ்	18
கலைக் கோயில்	சுத்தானந்த பாரதி	22
இலையுதிரத் தளிர் துளிர்க்கும் ...	"சுகி"	30
சுந்தரி	கே. விஜயராகவன்	35
பயம்	ரா. அ. பத்மனாபன்	41
அழகியின் ஆசை	ஆர். சரஸ்வதி	46
சிரித்த முல்லை	அ. கிருஷ்ணமூர்த்தி	55
தேவானை	ரா. வெங்கடாசலம்	58
சிற்பியின் கனவு	கே. பி. கணபதி	64
பொழுது போக்கு	"ரதி"	70
சிலப்பதிகாரம் ...	சர். சண்முகம் செட்டியார்	72
பச்சைப் பாவாடை ...	ஜெயலட்சுமி ஸ்ரீனிவாசன்	76
புத்தக ஆராய்ச்சி	ஆர். டி	80
சுபா	ஆர். சண்முகசுந்தரம்	81
மலர் மணம்	... ...	87

விலை 12 அணா

சென்னை-6

ஸ்தாபகர்.

A. P. ராமசாமி செட்டியார்

உத்திரவாத நல்லெண்ணெய் ஸ்டோர்ஸ்

புது மார்க்கட், கோயமுத்தூர்.

எமது ஸ்டோரில் தயாராகும் உத்திரவாத நல்லெண்ணெய் 30, ஆண்டுகளாக இலக்ஷக்கணக்கான ஜனங்களால் உபயோகித்து நன்மதிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எங்களது நல்லெண்ணெயின் குணங்கள்.

கலப்பற்றது, கசப்பற்றது, கழுறற்றது, மணமுற்றது, நோயற்றது என உத்திரவாதத்துடன் பொது ஜன நன்மையை கருதி சப்ளை செய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்களைக் கருதியே சென்னை கவர்மெண்ட் கைத்தொழில் இலாகாவால் தயாரிக்கப் பட்ட "பிண்டோ" செக்கினல் தயாரிக்கப்பட்டு உடனுக்குடன் வெளியூர் ஆர்டர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். ஒரு முறை எண்ணெயை உபயோகித்தால் உண்மை விளங்கும்:-

R. L. சுப்பிரமணிய செட்டி

ஜெனரல் செகரெட்டரி.

A. P. R. Oil Mills,

Fort, COIMBATORE.

இந்தியன் பாங்க் லிமிடெட்.

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்

நார்த் பீச் ரோட்,

மதருஸ்.

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம் ரூ. ... 1,00,00,000

வழங்கி வாக்களிக்கப் பட்ட மூலதனம் 60,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—43) 27,55,229

ரிஸர்வும் மற்ற நிதிகளும் (25—5—43) 29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

செக்ரடரி:

N. கோபால அய்யர்.

நீண்ட தமி ழால்உ லகை
நேமி யின்அ ளந் தான்

—கம்பர்

வாழ்க முதலியார்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைத் தமிழ் உலகு ரொம்ப நன்றாக அறியும். முதலியார் அவர்களின் தமிழ்ச் சேவையைப் பாராட்டாத தமிழர்கள் இருக்க முடியாது. கலைக்கும், தேசத்துக்கும் பெரும்பணி புரிந்த தமிழ்ப் பெரியாரை யாவரும் போற்றுவதில் வியப்பில்லை அல்லவா?

திரு. வி. க வுக்கு அறுபதாண்டு நிறைவு விழா என்று கேட்ட மாத்திரத்தில் உள்ளத்தில் ஆனந்தம் பொங்குகிறது. இந்த சந்தர்ப்பத்தில் முதலியார் அவர்கள் செய்துள்ள அரிய காரியங்களை ஞாபக மூட்டிக் கொள்வது அவசியம். இந்த இதழ் முகப்பிலுள்ள அவரது உருவைப் பார்த்தாலே சாந்தம், அமைதி முதலிய உணர்ச்சிகள் நம் உள்ளத்திலும் உதிக்கும். தோற்றத்தைப் போலவே அவருடைய இதயம் ரொம்பவும் பண்பட்டதுதான்.

அந்தக் காலத்திலே, பத்து இருபது வருஷங்களுக்கு முன், தமிழை வளர்ப்பதற்கு, முதலியார் அவர்கள் அரும்பாடு பட்டு, இன்னல்களைப் பொருட் படுத்தாது தமிழ் மணத்தை அனைவரும் அனுபவிக்கச் செய்தார்.

இயற்கையிலே இறைவனைக் கண்டார். எல்லா மதங்களையும் சமரசமாகக் கொண்டார். யாருக்கும் நல்லதைச் செய்வது என்னும் பெருநோக்குடனே வாழ்ந்து வருகிறார். அவருடைய எழுத்திலும் பேச்சிலும் இதையே காண்கிறோம். இப்பேர்ப்பட்ட சிறந்த அறிஞர்களைப் பாராட்டக் கொடுத்து வைத்தது பாக்கியமாகும்.

மார்க்குக் கொடுக்கும் விதம்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

சிஷ்யன் குருவினிடம் கற்க வந்தான். எத்தனையோ காரியங்களை குருவும் சொல்லிவந்தார். குருவை விட்டுப் பிரியும் போது நான் எல்லாவற்றையும் கற்றுவிட்டேனா என்று கேட்டான் மாணவன்.

"இல்லை அப்பா. நீயே இனிக் கற்றுக்கொள்ள வேண்டியது தான். அதுவும் எவ்வளவோ இருக்கிறது" என்றார் குரு.

"எப்போது எனக்கு எல்லாவற்றையும் கற்றேன் என்று தெரிய வரும்" என்று கேட்டான் மாணவன்.

"எப்போது அறிந்ததும் அறியாததும் ஒன்று என்று உனக்குப் படுகிறதோ அப்போது தான் எல்லாவற்றையும் கற்றவன் ஆவாய்" என்றார் குரு.

[நமக்கு அறிவு தத்துவம் கிடையாது: கடவுள் தானே நமக்குள் அந்தர்யாமியாய் இருந்து எல்லாவற்றையும் அறிகிறார், அது பற்றி அறிந்ததையே அறியாது என்று தான் நாம் கருதவேண்டும். இது தான் குரு சொன்ன வார்த்தையின் பொருள்.]

மாணவன் ஊருக்குப் போனான். ஒரு மாசம் இரண்டு மாசம் சுற்றியடித்தான். பிறகு புதுப் புஸ்தகங்களையே எடுத்துப் பார்க்க ஆரம்பித்தான். ஒன்றும் விளங்கவில்லை. அவைகளை வைத்துவிட்டு குரு சொல்லிக் கொடுத்த புஸ்தகங்களையே எடுத்துப் பார்த்தான். அவைகளிலும் ஒன்றும் விளங்கவில்லை.

மாணவனுக்கு என்றுமில்லாத சந்தோஷம் உண்டாய்விட்டது. அப்படியே தகப்பனாரிடம் போனான். ஒரே எக்களிப்போடு கூத்தாடிக்கொண்டு நின்றான்.

"என் இவ்வளவு சந்தோஷம்?" என்று தகப்பனார் கேட்டார்.

"எல்லாப் படிப்பும் எனக்கு வந்துவிட்டது" என்று சொன்னான் மகன்.

"அது எப்படி" என்று கேட்டார் தகப்பனார்.

"தெரிந்ததும், தெரியாததும் ஒன்றாக மனசுக்குப் படவேண்டும் என்று குரு சொல்லியிருக்கிறார்" என்று சொன்னான்.

கதை முடிந்துவிட்டது. பூர்வமான கதையுந்தான்.

யோசித்துப் பார்த்தால், தற்காலத்திய நம்மை நோக்கி எழுதிய மாதிரியிருக்கிறது கதை. இது தெரிந்தது, இது தெரியாது என்று நாம் பகுத்துணர உலகமே இடங்கொடுக்க மாட்டேன் என்கிறது. எப்படி என்று பார்ப்போம்.

தெற்கு ஜில்லாவிலுள்ள டிரெயினிங் ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்டர் வந்தார். டிரெயினிங் ஸ்கூல் மாணவர் ஒருவரைப் பார்த்து "காண்டா மிருகத்தைப் பார்த்திருக்கிறீரா" என்று கேட்டார்.

"பார்த்திருக்கிறேன்" என்று சொன்னார் அவர். "எங்கே பார்த்திருக்கிறீர்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

மாணவர் அப்படியே அந்த அறையை விட்டு ஓடினார். சிறிது நேரங்கழித்து ஒரு புஸ்தகத்தை

எடுத்துக்கொண்டு வந்தார் புஸ்தகம் படமில்லாத ஒரு குட்டித் தமிழ் அகராதி. வெகு எக்களிப்புடன் 'கா' பக்கத்தை திருப்பி இன்ஸ்பெக்டர் முன் வைத்து, "இங்கேதான் பார்த்தேன்" என்று காண்டாமிருகம் என்ற வார்த்தையை நகத்தால் அழுத்திக் காட்டினார். கடுதாசி கிழியாதது தான் பாக்கி. அவ்வளவு அழுத்தமாய்க் காட்டினார் மாணவர்!

அகராதியில் வார்த்தைக்கு அர்த்தம் போட்டிருந்தது. அதாவது "மிருக இனத்தைச் சேர்ந்தது" என்று.

அந்த மாணவர் நமக்கு நல்ல வழிகாட்டி, அபூர்வமான வழி காட்டி: எத்தனை விஷயங்களை இந்த முறையில் 'அறிந்தோம்' என்பதாக யோசனை பண்ணச் செய்கிறார்!

அறியவில்லை என்கிற உணர்ச்சியே நமக்கு வருகிறதில்லை.

பூகோள சாஸ்திரத்தில் அமெரிக்காவைப் பற்றிப் படித்துவிட்டு, எல்லாம் தெரிந்துவிட்டதாக இறுமாப்பு அடைகிறோம். நயகாரா தெரிந்துவிட்டது. மிஸிஸிபி நதி தெரிந்துவிட்டது. அமெஸான் நதி தாம்பிரபருணியை விடப் பெரிது, காவேரியை விடவும் பெரிது என்று தெரிந்துவிட்டது! நூறு மைல் அகலமுள்ள நதியல்லவா தெரிந்துவிட்டது. ஷார்ட்டு ஸைட்டுக்காக கண்ணாடி போட்ட கண்ணுக்கல்லவா தெரிந்துவிட்டது. சரி, இன்னொன்றைப் பார்ப்போம்.

இங்கிலாந்துக்குப் போகாமலே பைன் மரம், பைன் காடு இதையெல்லாம் தெரிந்ததாக பாவனை. ஆசிரியர் ஸ்காட் எழுதிய நாவல்களைப் படித்துவிட்டு ஸ்காட்லாண்டிலுள்ள மலைப்பிரதேசங்களையும் கோட்டைகளையும், கோட்டைகளின் வாசல்கள் என்ன தாழ்வாரங்கள் என்ன, சந்து பொந்து என்ன, எல்லாவற்றையும் தெரிந்துவிட்டதாகவே எண்ணம்.

இங்கிலாந்தின் பண்பாட்டுச் சரித்திர புஸ்தகமொன்றை வாசித்துவிட்டு பூர்வ பண்பாடும், இடைக்காலத்துப் பண்பாடும், தற்காலப் பண்பாடும் அடடா! எப்படியிருக்கிறது! என்று வியக்கிற காரியத்தை என்ன என்று சொல்ல. ஆங்கிலேயருக்கே அதெல்லாம் எளிதில் விளங்காது. இங்கிலாந்து தேசத்தில் கால் எடுத்து வையாத நமக்கா விளங்கிவிடப்போகிறது!

இதெல்லாம் போக, கன்றாவியிலும் கன்றாவி என்னவென்றால், ஆங்கிலக் கவியே நமக்குத் தெரிந்துவிட்டதென்ற எண்ணந்தான். ஏதோ ஒரு கவியின் வெறும் சாராம்சத்தை அறிந்து கொள்ளுகிறது, அப்படியும் இப்படியுமாகப் பொழிப்புரை ஒன்றை எழுதுகிறது, அல்லது எடுத்துச் சொல்லுகிறது. வார்த்தைகளுக்கு இலக்கண அமைப்பை சொல்லிவிடுகிறது. இதெல்லாம் கவியை உணர்ந்ததாக ஆகுமா? கவிப்பண்பை உணர்ந்ததாக ஏற்படுமா? பாவம், அதற்கான உள்ளுணர்ச்சி இவைகள் தெரிந்தால் அல்லவா கவி தெரிந்தது என்று ஆகும். அல்லாத பக்ஷம் கரும்புச்சாற்றை விட்டுவிட்டு, வெறும் சக்கையைச் சுவைக்கிற காரியந்தானே!

இந்த ஏமாற்றமும் ஏமாளித்தனமும் நம்மை விட்டு என்றைக்குப் போகுமோ தெரியவில்லை. ஆனாலும் இவைகளைப் போக்கடிக்கிறதற்கு ஒரு வழியிருக்கிறது:

பள்ளிக்கூடத்தில் பரிக்ஷைகள் நடக்கும்போது மாணவர்களைத் தங்களுக்குத் தெரிந்தது இன்னது என்றும் தெரியாதது இன்னதென்றும் பகுத்தறியும்படி தூண்ட

வேண்டும்; இடங்கொடுக்கவா வது வேண்டும். பத்திரிகைகளை யும் புஸ்தகங்களையும் வைத்துக் கொண்டு இடங்கொடுக்கமாட் டேன் என்றுதான் சொல்லுகிறது உலகம். ஆனல் அவர்களோடு நாம் முரண்ட முடியுமா: முடி யாது.

பள்ளிக்கூடமும் ஆசிரியர்களும் சேர்ந்து ஒத்துழைத்தால் ஒருவகை யாகக் காரியம் சித்தியாகும்.

கேள்விகளுக்கு ஒரு பையன் விஷயம் தெரிந்தே எழுதலாம். (யானை ஒன்றைப் பார்த்துவிட்டு எழுதலாந்தானே) அவனுக்கு ஐம் பது மார்க்குக் கொடுக்கவேண் டும். மற்றொரு பையன், காண்டா மிருகத்தைப்பற்றி புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்தான். படங்களைப் புரட்டிப் பார்த்தான். ஆசிரியரு டைய பிரசங்கத்தையுங் கேட்டுப் பார்த்தான். கடைசியில் கேள் விக்கு விடை எழுதும்போது தெரியாது என்று எழுதிவிட் டால், அவனுக்கு நூறு மார்க்கு கொடுக்கவேண்டும். தெரியாது என்று உண்மையைச் சொல்லுவ தற்கு மார்க்கு அதிகமாகக் கொடுக்கிறது என்ற சம்பிரதாயம் ஏற்பட்டுவிட்டால், வயசான காலத்தில் அமெரிக்கா தெரிந்து விட்டது,... ஆங்கிலக்கவி தெரிந்து விட்டது என்றெல்லாம் எண்ண மாட்டார்கள். கூசாமல் அப்ப டிச் சொல்லவும் முன் வரமாட் டார்கள். பிறர் அப்படிச் சொல் வதைப் பார்த்தால் லஜ்ஜைப்படு வார்கள்.

கண்டதுதான் காட்சி காணுதது காட்சி அல்ல.



எங்கெல்லாம் தேடி—கண்ணே நான்
ஏமாந்து நிற்கையிலே—இந்த
மங்காத நல்த்தேவி—கண்ணே உனை
வரம் கொடுத்த வான் பொருளோ!

அன்பும் வெறுப்பும்

(ஒரு காப்பிப் பொடிக் கதை)

[சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்]

சபேசன் காப்பி என்றால் ஒரு காலத்தில் ராஜதானி யெல்லாம் பிரசித்தம். வெள்ளைக்காரர்கள் கூட அதைத் தேடி வாங்குவார்கள். நம்மவர்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. கொட்டை வாங்கி எவ்வளவு ஜாக்கிரதையாக வீட்டிலேயே வறுத்துப் பொடி பண்ணினாலும், டப்பாவுக்குள் போட்டு மூடிய சபேசன் காப்பிப் பொடிக்கு சமானமாகாது என்று மைலாப்பூர் தியாகராஜ நகரிலுள்ள எல்லாப் பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்டுகளும் சொல்லுவார்கள்.

1925-ம் வருஷத்தில் சபேசய்யர் காப்பி வியாபாரத்தை ஆரம்பித்தார். இரண்டு வருஷம் கஷ்டமில்லாமல் காலக்ஷேபம் செய்வதே கடினமாக இருந்தது. 1928-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் சுப்புக்குட்டி, சபேசய்யரிடம் குமாஸ்தாவாகச் சேர்ந்தான். அது முதல் சபேசன் காப்பிக்கு நல்ல அதிர்ஷ்டம். ஆறு மாதத்திற்குள் வியாபாரம் மும்மடங்கு ஆயிற்று. அதன் பின் மளமளவென்று ஏறிற்று. இது சபேசய்யருக்கே வியப்பாக இருந்தது. எல்லாம் சுப்புக்குட்டியின் அதிர்ஷ்டம் என்று அவனிடத்தில் அவருக்கு அளவு கடந்த அபிமானம். சம்பளம் வருஷத்தில் இரண்டு தடவை உயர்த்தினார். வேண்டாமென்றாலும் அவனுக்கு அளவுக்கு மிஞ்சி சவுகர்யங்கள் செய்து கொடுத்து வந்தார். சுப்புக் குட்டியின் தங்கைக்கு, கலியாணச் செலவு எல்லாம் தானே செய்து, நல்ல இடத்தில் விவாகம் முடித்தார். அவனைத் தன்னுடன் ஒரு கூட்டாளி என்றே பாவித்து வந்தார். வெறும் குமாஸ்தாவாக எண்ணவில்லை.

சுப்புக்குட்டியின் தாயார் அவனுக்கு ஒரு ரகசியம் சொல்லித் தந்திருந்தாள் காப்பிப் பொடி அறைப்பதில். அவ்வாறு அறைத்த காப்பிப் பொடியைப் போட்டு இறக்கிய காப்பி மிக சுவாரஸ்யமாக இருக்கும். சுப்புக் குட்டி சபேசன் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்த தருவாயில் ஒரு நாள் சபேசய்யர் சுப்புக் குட்டி வீட்டு காப்பி சாப்பிட்டார்.

"உங்க வீட்டுக் காப்பியைப் போல் நான் எங்கேயும் சாப்பிட்டதே கிடையாது" என்றார்.

வறுப்பதில் ஏதாவது தனி முறையா அல்லது காப்பிக் கொட்டை உயர்ந்த வகையா? இல்லை, காப்பி வடிப்பதில் சாமர்த்தியம் ஏதேனுமா—என்றெல்லாம் சபேசய்யர், சுப்புக் குட்டியின் தாயாரைக்கேட்டு விசாரித்தார். அவள் விவரத்தைச் சொல்லாமல் "அந்த ரகசியம் சுப்புக் குட்டிக்குத் தெரியும்" என்றாள்.

"இது நம்ம ஆபீசில் காப்பி அறைக்கும்போது செய்ய முடியுமோ?" என்று கேட்டார். "ஆகா, செய்யலாம்" என்றாள் சுப்புக் குட்டியின் தாயார்.

அதன் பிறகு சபேசய்யரின் வேண்டுகோளின்படி, ஆலையில்

காப்பிப்பொடி அறைக்கும்போது யாருக்கும் தெரியாதபடி சுப்புக் குட்டி போய் செய்யவேண்டிய தைச் செய்வான். இரகசியம் சபேசய்யருக்குக்கூட தெரியாது. ஏதோ ஒரு சிறு டப்பாவில் தன் வீட்டிலிருந்து கொண்டு வந்து அறைக்கும் கொட்டையில் அதைச் சேர்க்கிறான் என்பது மட்டும் தெரியும். அது என்னவென்று அவர் கேட்கக் கூடாது. இது அவர்களுக்குள் ஏற்பாடு.

வியாபாரம் வெகு வேகமாக வளர்ந்தது. கொள்ளை லாபம். சென்னையில் முதல்தர வியாபாரி களுக்குள் சபேசய்யரும் ஒருவ ராகக் கருதப்பட்டார். வியாபா ரச் சங்கங்களிலும், பெரிய மனிதர் களுடைய கிளப்புகளிலும் சபே சய்யர் ஒரு மெம்பராக எடுக்கப் பட்டார்.

இரகசியத்தை அறிய சில சம யம் சபேசய்யர் பிரயத்தனப் பட் டார். ஆனால் சுப்புக்குட்டியிடம் அவன் தாயார் சபதம் வாங்கி யிருந்தாள். யாருக்கும், சபேசய் யருக்குக்கூடச் சொல்வதில்லை என்று சத்தியம் செய்திருந்தபடி யால் அவன் சொல்லவில்லை. சபே சய்யரும் வற்புறுத்தவில்லை.

1936-ம் வருஷத்தில் சபேசய் யருக்கு எல்லாச் செலவும் போய் மாதம் ரூ. 2000 வருமானம் கிடை த்து வந்தது. சுப்புக்குட்டிக்கு மாதம் ரூ. 250 சம்பளம். சபே சய்யருடைய மோட்டார் வண்டி யில், சுப்புக்குட்டி வீட்டுக்குப் போவான். சுப்புக்குட்டியிடம் மிக அன்பு பாராட்டி வந்த பழைய நண்பர்களுக் கெல் லாம் இப்போது அவன் மேல் பொறாமை ஆரம்பமாயிற்று. இல்லாத குற்றமெல்லாம் அவனி டம் கண்டார்கள். சபேசய்ய ருக்கும் சுப்புக்குட்டிக்கு மிடை யில் விரோதம் தூண்டிவிடப் பார்த்தார்கள். ஆனால் அது முடிய வில்லை. வரவர அவர்களுக்குள் நம்பிக்கையும் பிரியமும் வளர்ந்து கொண்டே போயிற்று.

இவ்வாறு இரண்டு வருஷம் சென்றது. ஒரு நாள் சபேசய் யரும் மர வியாபாரி ஒருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"உங்கள் வியாபாரமெல்லாம் நன்றாய்த்தான் நடக்கிறது. ஆனால் உங்கள் மானேஜர் சுப்பு கிருஷ் ணய்யர் தனியாக ஒரு காபி வியா பாரம் ஆரம்பிக்கப் போகிறாராமே அது ஏன் ?" என்றார்.

"அவ்வாறு பிரஸ்தாபம் ஒன் றும் இல்லையே, யார் சொன்னார் கள்?" என்று கேட்டார் சபேசய் யர்.

"அவரே சிலரிடம் பேசி யிருக் கிறார்" என்றார் மரக்கடை ஜெய ராம நாடார்.

"அப்படி யொன்றும் காணோ மே ? இருந்தால் என்னிடம் சொல் லியிருப்பாரே!" என்றார் சபேசய் யர்.

"இல்லை, நான் சும்மா சொல்ல வில்லை. விசாரித்துப் பாருங்கள்" என்றார் ஜெயராம நாடார்.

பிறகு ஒருநாள் சுப்புக்குட்டியும் விசுவநாத ராவ் என்ற கந்து வியா பாரியும் காபி அறைக்கும் யந்தி ரச் சாமான்களைப் பற்றி விசாரித் துக் கொண்டிருந்ததாக வேறொரு நண்பர் சபேசய்யரிடம் பிரஸ்தா பித்தார். சபேசய்யருக்குச் சந் தேகம் ஊர்ஜிதமாயிற்று. வியா பாரம் இவ்வளவு மும்முரமாக நடந்து வருவதும் தன்னுடைய செல்வாக்கும் அந்தஸ்தும் எல் லாமே சுப்புக்குட்டியின் கையில் அல்லவா இருக்கிறது, காப்பிப் பொடியின் ரகசியம் அவனிடம் தானே இருக்கிறது? இதற்கு

என்ன செய்கிறது, என்று சபேசய்யருக்கு கவலை அதிகரித்தது. வர வர சுப்புக் குட்டியினிடம் ஒரு அர்த்தமற்ற வெறுப்பும் கோபமும் உண்டாகி வளர்ந்து கொண்டே போயிற்று. தன் வேலைக்காரார்கள் எல்லோரும் சுப்புக்குட்டியைத்தான் எஜமானனுக மதிக்கிருர்கள், தன்னை மதிக்கவில்லை என்று அவருக்குத் தோன்ற ஆரம்பித்தது. குமாஸ்தாவான சுப்புக் குட்டியிடம் எஜமானருக்கு ஒரு வித பொருமை உண்டாயிற்று.

"என்ன சுப்புக்குட்டி, வேலைக்காரர்களுக்கு ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டியதாயிருந்தால் என்னிடம் சொல்வதை விட்டு உன்னிடம் ஏன் பிரியாது செய்கிருர்கள்? உன் சிபார்சை நான் ஒப்புக்கொள்ள முடியாது" என்ருர். ஒரு வேலைக்காரன் விஷயமாக இந்தப் பேச்சு. இப்படியே பல சந்தர்ப்பங்களில் நேரிட்டது.

ஒரு நாள், சுப்புக்குட்டி "நான் ஒரு மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கிறேன். அப்புசாமி அய்யர் திருவாரூருக்கு வந்து சில நாள் இருக்கச் சொல்லி வருகிருர். எனக்கு லீவு கொடுக்க வேண்டும்" என்ருன்.

"முடியாது" என்ருர் சபேசய்யர்.

இதென்ன, இவ்வளவு நாள் என்னிடம் பிரியமாக இருந்தவர் ஒரு காரணமுமின்றி இவ்வளவு கடினமாகவும் வெறுப்பாகவும் இருக்கிருர் என்று சுப்புக்குட்டிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏதோ கெட்ட தெசை தன் ஜாதகத்தில் ஏற்பட்டிருக்கிறது, என்று நினைத்துத் தன் வேலையை மட்டும் வழக்கப்படி செய்து வந்தாலும் மனச் சாந்தியற்றவனுக நாட்களைக் கழித்து வந்தான். பிறகு உடம்பில் நோய் கண்டது. மருந்து சாப்பிட்டதில் சொஸ்தமாகவில்லை. கட்டாயம் இரண்டு மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் சொன்னுர்கள். சபேசய்யரைக் கேட்டதற்கு காப்பிப் பொடியில் செய்து வரும் ரகசியம் சொன்னுலொழிய லீவு கொடுக்க முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்.

"ராஜிநாமா செய்து விடு. ஏதோ நம்ம அதிர்ஷ்டம் இவ்வளவு நாள் நடந்தது. நல்ல நாள் வந்த பிறகு நாமே வியாபாரம் சின்னதாக ஆரம்பிக்கலாம். தெய்வம் விட்டபடி ஆகட்டும்" என்று தாயார் பொடியின் ரகசியத்தை சபேசய்யருக்கு சொல்ல வேண்டாம் என்று கண்டிப்பாய் தடுத்து விட்டாள். சுப்புக்குட்டியின் ராஜிநாமாவை சபேசய்யரும் அங்கீகரித்து அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்.

கொஞ்ச நாள் வரையில் சபேசய்யரின் வியாபாரம் இதனுல் குறையவில்லை. டப்பாவின் மேல் பதியப்பட்ட நடராஜப் படத்தின் கவுரவமும், காப்பிக் கொட்டையின் இயற்கை குணமும் பழைய பெயரும் சேர்ந்து வியாபாரத்தை தாங்கியே வந்தது.

"காப்பி என்ன கொஞ்சம் மட்டம் இன்னிக்கு?" என்று யாரேனும் ஒருவர் சொல்லுவார்.

"ஏதோ வடி கட்டும் துணியில் பிசகு, அல்லது டப்பா திறந்து வைத்து வாசனை போய்விட்டிருக்கலாம். அதே சபேசன் காப்பி தான்" என்று வீட்டில் சொல்லுவார்கள்.

ஒரு மாதம் இரண்டு மாதமான பின் "வேண்டுமென்று குமாஸ்தா சுப்பு கிருஷ்ணய்யர் தன் முதலாளிக்கு விரோதமாக திண்ணைப் பிரசாரம் செய்து வருகிருர். அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதினுல்

காப்பி பொடி கெட்டு விடுமா?'' என்று சபேசய்யருடைய நண்பர்கள் பிரசாரம் செய்து வந்தார்கள்.

சிலர் வீட்டிலேயே கொட்டை வறுத்து பொடி செய்யவும் ஆரம்பித்து "என்ன வானாலும் வீட்டில் வறுத்த மாதிரி இருக்குமா?'' என்றும் சொல்லத் தொடங்கினார்கள். மொத்தத்தில் சுப்புக்குட்டி வேலையிலிருந்து நீங்கிய ஐந்தாறு மாதங்களுக்குள் சபேசய்யர் வியாபாரம் குறைந்து விட்டது.

சுப்புக்குட்டியின் நண்பர் விசுவநாதராவ் சுப்புக்குட்டியைத் தன் கூடச் சேரச் சொன்னார். சேர்ந்து தன் வியாபாரத்தில் பாதி லாபம் சுப்புக்குட்டி எடுத்துக் கொள்ளலாம், எல்லாச் செலவும் தன் பொறுப்பு என்று சொன்னார். சபேசய்யரே தன்னைத் திரும்பக் கூப்பிடுவார் என்று ஓரிரண்டு மாதம் சுப்புக்குட்டி காத்திருந்தான். பிறகு விசுவநாதராவின் ஏற்பாட்டை ஒப்புக் கொண்டு வேலை துவக்கினான்.

சாதுவாயிருந்த சுப்புக்குட்டிக்கு இப்பொழுது ஒரு புது ஆத்திரம் பிறந்தது. எப்படியாவது சபேசய்யருக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென்ற எண்ணம் சுப்புகுட்டியின் மனதைப் பிடித்துக் கொண்டது. சபேசன் காப்பிக்கு போட்டியாக 'நடேசன் காப்பி' என்று எதுகையாக பெயரிட்டு, இரகசியக் கலப்பை ஒன்றுக்கு ஒன்றரையாகக் கலந்து அதே நடராஜ படத்தின் இடது காலை வலது காலாக்கி விசுவநாதராவின் கம்பெனியில் காப்பிப் பொடி உண்டாக்கப் பட்டது. சுறுசுறுப்பான ஏஜெண்டுகள் சேர்ந்தார்கள். வியாபாரம் வேகமாக முன்னேறிற்று. விசுவநாதராவும் ஏராளமாக பணம் செலவு செய்து விளம்பரங்கள் தாராளமாகச் செய்து வந்தார். அவர் சுப்புக்குட்டிக்கு உற்சாகம் ஊட்டி சபேசய்யர் பேரில் அவனுக்குள்ள கோபம் தணியாமலிருக்க எல்லா விதத்திலும் வேலை செய்து வந்தார்.

பிறகு சபேசய்யர் ஹைகோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்—டப்பாக்களின் வடிவம், பெயர், படம் எல்லாம் தன் காப்பிப் பொடி டப்பாக்களின் உருவமே. இதனால் ஜனங்கள் ஏமாந்து தன் வியாபாரம் கெட்டுவிட்டது என்று. தடை உத்தரவுக்கும், நஷ்ட ஈட்டுக்கும் வழக்கு ஹைகோர்ட்டில் ஒரு வருஷம் நடந்தது. முடிவில் சபேசய்யர் ஜெயித்தார். கோர்ட்டில் தீர்ப்புக் கொடுத்த தினம் சபேசய்யருக்கு கடுஞ்சுரம். தீர்ப்பைப் பற்றி சமாசாரம் தெரிந்த சந்தோஷத்தில், படுத்திருந்தவர் எழுந்து மோட்டார் வண்டியில் ஏறி,—ஓட்டுகிறவன் அப்போது இருக்கவில்லை—தானே வக்கீல் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு போனார். ஜப்தி நடவடிக்கைகள் உடனே ஆரம்பிக்கச் செய்தார். சிதம்பரம் கோயிலில் பெரிய அபிஷேகம் நடத்தவும் ஏற்பாடு செய்தார்.

சுப்புக்குட்டியின் தாயார் உலகமே கவிழ்ந்து விட்டதாக துயரக் கடலில் ஆழ்ந்தாள். "பகவானே, நீ தான் இந்த சபேசய்யரைக் கொண்டுபோக வேண்டும். என் மகனைக்கெடுத்த அவனை நீ தான் பார்த்துக் கொள்ள வேண்டும் ஈசனே'' என்று தன் இஷ்ட தேவதையை வேண்டிக் கொண்டாள். வேண்டிக் கொண்டபடியே சபேசய்யர் தீர்ப்பு ஆன எட்டாவது நாள் டாக்டர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக மாரடைத்து இறந்து போனார். சிதம்பரத்தில் அபிஷேகம் நடக்கவில்லை.

ஹைகோர்ட்டு தீர்ப்பின் உயிர் சபேசய்யர் உயிருடன் தீர்ந்து போயிற்று. விசுவநாதராவ் கம்பெனியார் தம்

பொடியை எவ்வித குந்தகமு மின்றி இனி விற்கலாம் என்று விசுவநாதராவின் வக்கீல்கள் வியாபாரச் சட்டத்தை விளக்கிச் சொன்னர்கள். தவிர டப்பாவின் மேலுள்ள நடராஜப் படத்தை காளிங்க மர்த்தனமாக மாற்றிவிட்டால் ஆட்சேபணை முற்றும் தீர்ந்துவிடும் என்று வக் கீல்கள் சொன்னர்கள்.

இதைக் கேட்டு, "ஐயோ, வழக்கு என் பக்கம் தீர்ப்பான பின் னும் வீணுயிற்றே" என்று அல றிற்று சபேசய்யரின் ஆவி.

"அலறிப் பயனில்லை மைந்தா" என்றது திருமூலர் குரல்.

* * *

அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்

மடக்கொடியாரொடு மந்தனம் புகுந்தார்—

இடப்பக்க மிறை நொந்ததே என்ருர்

கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந் தாரே

* * *

வக்கீல்கள் சொன்ன அபிப்பி ராயம் கேட்ட விசுவநாதராவுக் கும் சுப்புக் குட்டிக்கும் அளவு கடந்த ஆனந்தம் உண்டாயிற்று. உலகத்தையே மறுபடியும் ஜெயித் ததாக மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனல் காப்பிப் பொடி ரகசியம் எப்படியோ வெளியாய் விட்டது!

ஊரெல்லாம் "இந்த சபேசன் காப்பிப்பொடி சிக்காய்ப் பொடி கலப்பாமே?" என்று பேச ஆரம்பித்தார்கள். "ஒரு டப்பாவில் கால் பங்கு சீக்காய்ப் பொடியாமே" என்று சொல்லிக் கொண்டார்கள். பிறகு, "சபே சன் காப்பி" "நடேசன் காப்பி" இரண்டுமே ஜனங்களுக்குப் பிடி க்கவில்லை. டப்பாப் பொடி போட்டுச் செய்த காப்பியைக் குடித்தவர்கள் தேகத்தில் பலவித அசௌகரியங்கள் காண ஆரம் பித்தார்கள். சிலருக்கு வயிறு சிக்கல் உண்டாயிற்று. சிலர் பேதியாயிற்று என்ருர்கள். சிலர் குடித்தவுடன் வாந்திகூட எடுத்து விட்டார்கள். இதன் விளைவாக பெரிய மனிதர்கள் எல்லாரும் வீட் டிலேயே கொட்டை வறுத்து பொடி பண்ண ஆரம்பித்து விட் டார்கள். உண்மையில் சுப்புக் குட்டி சேர்த்து வந்தது ஒரு டப்பா காப்பிப் பொடிக்கு ஒரு சிறு தேக் கரண்டி சீக்காய்ப் பொடிதான். இவ்வளவு நாள் நன்ருயிருந்த தென்று குடித்தவர்களுக்கு இப் போது ஏனே அதைத் தாங்க முடியவில்லை. மூளையில் உண்டா கும் எண்ணங்களுக்கு அபார சக்தி உண்டு. இதையும் செய்யும், இதற்கு மேலேயும் செய்யும்!



பணமும் பஞ்சமும்

சர். ஆர். கே. எஸ்

[ஆறுமுகம் செட்டியாருடைய பங்களாவில் ஒரு விசாலமான அறை. இந்த அறை மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. அறையின் நான்கு பக்கத்துச் சுவரிலும் புத்தகங்கள் நிறைந்த அலமாரிகள். அலமாரிகளெல்லாம் சுவரோடு சேர்த்து வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சுமார் 3000 புத்தகங்கள் இருக்கலாம். அறையின் ஒரு புறத்தில் பெரிய மேசை. அன்றலர்ந்த ரோஜா மலர் மேசையை அலங்கரிக்கிறது. வெகு நேர்த்தியான பச்சைத் தோலினல் மூடிய பெரிய நாற்காலிகள் இங்குமங்கும் இருக்கின்றன. எங்கே பார்த்தாலும் சுத்தமாயும், மனதிற்கு ரம்மியத்தைக் கொடுப்பதாகவுமே இருக்கின்றது. செட்டியார் ஒரு நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிருர். நேரம், காலை பத்து மணி.

வேலுசாமி நாயுடு வெகு அவசரமாக அறைக்குள் வருகிருர். காகிதத்தில் சுருட்டிய ஏதோ ஒரு சின்ன சாமான் நாயுடு கையில் இருக்கிறது. அதை மேசையின் மேல் வைத்து விட்டு அவரும் ஒரு நாற்காலியில் உட்காருகிருர்]

ஆறுமுகம் செட்டியார்: என்ன வேலுசாமி நாயுடு, உலகத்தையே வெறுத்து விட்டவர் போலிருக்கிறதே உங்கள் முகத்தைப் பார்த்தால். என்ன சமாச்சாரம்?

வேலுசாமி நாயுடு: சரிதான் சார்! இப்படியே போய்க்கொண்டிருந்தால், சனங்கள் எப்படிப் பிழைப்பதோ தெரியவில்லை. பல்ப்பொடி ஒரு டப்பி வாங்கக் கடைக்குப் போயிருந்தேன். இதோ மேசையின்மேல் வைத்தேனே அதுதான். முன்பு ஒரு ரூபாய் விலைக்கு விற்ற ஒரு டப்பி இப்போது நாலு ரூபாய்!

செட்டியார்: அடடா! இதற்குத் தானு இவ்வளவு சலிப்பு. சண்டை சமயத்தில் சாமான்கள் கிடைப்பதென்ருல் கஷ்டம் தான்.

நாயுடு: வெளிநாடுகளிலிருந்து சாமான்கள் வருவது குறைந்து விட்டபடியால் அவைகளுக்கு விலை ஏறுவது நியாயமென்று ஒப்புக் கொள்ளுகிறேன். உள்நாட்டு சாமான்களுக்கும்கூட ஏன் இப்படி விலை அதிகமாக வேண்டும்?

செட்டியார்: சண்டை சமயத்தில் பொதுவாக விலைவாசிகள் அதிகமாவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. (1) பட்டணங்களின் தேவைக்கும், நம்முடைய பக்கம் சண்டை செய்யும் நேச நாடுகளுக்கு அனுப்புவதற்கும் நம்முடைய சர்க்காரே கோடிக் கணக்காக சாமான்கள் வாங்குகிருர்கள். அதனல் பொது ஜனங்களுக்கு வேண்டிய அளவு சாமான் கிடைப்பதில்லை. (2) ஜனங்களிடத்தில் பணம் அதிகமாய் விட்டது. கையில் பணம் ஏராளமாயிருக்கும்போது, ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்க போட்டி ஏற்படுகிறது. கிடைக்கும் சாமான்களோ கொஞ்சம் தான். அவைகளை

வாங்குவதற்கு போட்டி அதிகம் முடிவில் விலை ஏறிவிடுகிறது.

நாயுடு: சர்க்கார் அவ்வளவு சாமான்கள் வாங்குகிறார்களா என்ன?

செட்டியார்: சண்டை ஆரம்பத்திலிருந்து, அதாவது 1939 வருஷம் செப்டம்பர் மாதத்திலிருந்து 1942 வருஷம் டிசம்பர் மாதம் வரையில் சர்க்கார் சப்ளை இலாக்கா மூலமாக 455 கோடி ரூபாய்க்கு சாமான்கள் நம் நாட்டில் வாங்கியிருக்கிறார்கள். இப்போதும் மாதம் ஒன்றுக்கு சுமார் 20 கோடி ரூபாய்க்கு சாமானங்கள் வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

நாயுடு: அப்படியா! சர்க்காரே மாதம் 20 கோடி ரூபாய்க்கு சாமான் வாங்கினால், ஜனங்கள் பாடு திண்டாட்டம்தான். அது இருக்கட்டும் சார்! விலைகள் ஏறி விட்டதற்கு இன்னொரு காரணம் இருக்கிறதென்று பத்திரிகைகளில் எழுதுகிறார்களே, அதாவது சர்க்கார் கரன்சி நோட்டுகளை ஏராளமாய் அச்சுப் போட்டு வெளியிட்டு விட்டார்களென்று சொல்லுகிறார்களே, அந்த விவரம் என்ன?

செட்டியார்: அதுவும் உண்மைதான். 1939 வருஷம் ஜனவரி மாதக் கணக்கைப் பார்த்தால் அப்போது 203 கோடி ரூபாய் நோட்டுகள்தான் ஜனங்கள் கையிலிருந்தன. இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுகள் உபயோகத்திலிருக்கிறது.

நாயுடு: ரொம்ப பேஷ்! நமக்குப் பணம் தேவையானால் கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டும். சர்க்காருக்குப் பணம் வேண்டுமானால் நோட்டுப் போட்டுக் கொண்டால் போதும் போலிருக்கிறதே!

செட்டியார்: அப்படியில்லை நாயுடு காரு. சர்க்கார் இஷ்டப்பட்டபோதெல்லாம் நோட்டுகளை அச்சடித்து எடுத்துக்கொள்ள முடியாது. சர்க்கார் அச்சுப் போடும் ஒவ்வொரு நோட்டுக்கும், கஜானாவில் ஆதாரம் இருக்க வேண்டும்.

நாயுடு: அது என்ன ஆதாரம் சார்?

செட்டியார்: சொல்லுகிறேன் கேளுங்கள். எவ்வளவு நோட்டுகள் சர்க்கார் வெளியிடுகிறார்களோ, அவ்வளவுக்கும் தங்கம் வெள்ளி, நாணயங்கள், கவர்மெண்டு பாண்டு — இப்படிப்பட்ட ஆதாரம் வேண்டும். இவ்விதமான ஆதாரங்களில்லாமல் ஒரு நோட்டுக்கூட வெளியிட சர்க்காருக்கு அதிகாரமில்லை. இதைப் பற்றி ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை சர்க்கார் மீறி நடக்க முடியாது. இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுகள் வெளியிலிருக்கிறதென்று சொன்னேனல்லவா? இதற்கு ஆதாரமாக இந்தத் தேதியில் சர்க்கார் கஜானாவில் 45 கோடி ரூபாய் தங்கம், 15 கோடி ரூபாய் வெள்ளி நாணயங்கள், 120 கோடி ரூபாய் பெறுமான இந்தியா கவர்மெண்டு பாண்டுகள், 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்மெண்டு பாண்டுகள் — இவைகளெல்லாம் ஆதாரமாயிருக்கின்றன.

நாயுடு: அப்படியா சமாச்சாரம்! அது இருக்கட்டும். இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுகள் வெளியிலிருக்கிறதென்று சொன்னீர்களே, எதற்காக இவ்வளவு நோட்டுகளை சர்க்கார் வெளியிட்டார்கள்?

செட்டியார்: பிரிட்டிஷ் கவர்மெண்டின் சார்பாக நமது

இந்தியா கவர்மெண்டு கோடிக் கணக்காக நம் நாட்டில் சாமான்கள் வாங்க வேண்டியிருக்கின்றது. இந்த சாமான்களுக்கெல்லாம் கிரயம் கொடுக்க பணம் வேண்டுமல்லவா? பிரிட்டிஷ் கவர்மெண்டாரல்லவா கிரயப் பணம் கொடுக்க வேண்டும். பிரிட்டிஷ் கவர்மெண்டாரிடத்தில் அவர்கள் தேசத்து நாணயம் தானே இருக்கிறது. நம்முடைய நாணயத்திற்கு ரூபாய் என்று பெயர். அவர்களுடைய நாணயத்திற்கு ஸ்டர்லிங் என்று பெயர். ஒரு ஸ்டர்லிங் என்றால் சுமார் ரூ. 13—4—0. பிரிட்டிஷ் கவர்மெண்டுக்காக நம்முடைய சர்க்கார் 13,250 ரூபாய்க்கு பஞ்சு வாங்குகிறார்களென்று வைத்துக் கொள்வோம். பிரிட்டிஷ் கவர்மெண்டு இந்தப் பஞ்சுக்காக 1000 ஸ்டர்லிங்கை லண்டனில் இந்தியா மந்திரியிடம் கொடுத்து விடுகிறார்கள். இந்த 1000 ஸ்டர்லிங்கை ஆதாரமாக வைத்துக் கொண்டு 13,250 ரூபாய்க்கு நோட்டுகள் அச்சு அடித்து பஞ்சின் கிரயத்தை நம்ம வியாபாரிகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள். நம்முடைய நோட்டுகளுக்கு இப்போது 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்மெண்ட் பாண்டுகள் ஆதாரமாயிருக்கிறதென்று சற்று முன்னே சொன்னேனல்லவா; இந்த விதமாய்த்தான் இந்த பாண்டுகள் ஆதாரமாக வந்து சேர்ந்தது.

நாயுடு: அப்படியானால், சண்டை முடிவாகும் வரையில் பிரிட்டிஷ் கவர்மெண்டார் நம்ம நாட்டில் இன்னும் சாமான்கள் வாங்கிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் சாமான்கள் வாங்க, வாங்க நோட்டுகளும் அதிகமாய்க் கொண்டே போகும் போலிருக்கிறதே!

செட்டியார்: நீங்கள் சொல்லுவது உண்மைதான். 1942 வருஷம் ஜூன் மாதத்திலிருந்து 1943 வருஷம் ஜூன் மாதம் வரையில் ஒரு வருஷத்தில் 285 கோடி ரூபாய் நோட்டுகள் அதிகமாய் விட்டன. இப்போதும் மாதம் ஒன்றுக்கு 12 கோடி முதல் 15 கோடி வரையில் அதிகமாய்க் கொண்டே போகிறது.

நாயுடு: இப்படியே போய்க்கொண்டிருந்தால் இன்னும் விலை வாசி அதிகமாகும். இதைத் தடுப்பதற்கு சர்க்கார்தான் என்ன செய்கிறார்கள்?

செட்டியார்: சர்க்கார் ஏதோ சில முயற்சிகள் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். இந்த முயற்சிகளின் முக்கிய நோக்கம் ஜனங்களிடமிருக்கும் பணம் சர்க்கார் கையில் போய்ச் சேரும்படி செய்வதுதான். (1) வரிகளை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். (2) வரிகளை தாமதமில்லாமல் வசூல் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். (3) மில்கள் போன்ற பெரிய கைத்தொழில் கம்பெனிகள் பங்குதாரர்களுக்கு அதிகமாக லாபத்தைப் பிரித்துக் கொடுக்காமலிருக்கும்படி, வந்த லாபத்தில் வரிபோக 100 க்கு 13 வீதம் சர்க்காரிடம் டிபாசிட் செய்ய வேண்டுமென்று கட்டாயச் சட்டம் செய்திருக்கிறார்கள். (4) கவர்மெண்ட் பாண்டுகளில் பணத்தைப் போடும்படி ஜனங்களைப் பல விதத்தில் தூண்டுதல் செய்கிறார்கள். (5) துணி, நூல், அரிசி முதலிய பண்டங்களை இன்ன விலைக்குமேல் விற்பனை செய்யக்கூடாதென்று உத்திரவுகள் போட்டிருக்கிறார்கள். சர்க்கார் உத்திரவுகள் ஒரு புறம்

இருக்கட்டும். உங்களைப் போன்றவர்கள் அவசியமில்லாத சாமான்களை வாங்காமலும் இருக்கவேண்டும். நாலு ரூபாய் விலை கொடுத்து ஒரு டப்பி பல்ப்பொடி நீங்கள் ஏன் வாங்க வேண்டும்? பல்க்குச்சியினால் பல்லைச் சுத்தம் செய்யக் கூடாதோ?

நாயுடு: நல்ல வேலை சார்! என்னுடைய பல்லெல்லாம் கோணை யென்று இப்போதே நண்பர்கள் கேலி செய்கிறார்கள். பல்க்குச்சியைப் போட்டு, இன்னும் என்னுடைய பற்கள் போய் விட்டால் உங்களுக்குத் திருப்தியாயிருக்கும் போலிருக்கிறது! அதிருக்கட்டும், நீங்கள் இது வரையில் சொல்லி வந்த விஷயங்கள் ரொம்பவும் முக்கியமானவை. இது விஷயமாய் இன்னும் சில கேள்விகள் கேட்கலாமோ?

செட்டியார்: மற்ற கேள்விகளை நாளைக்கு வைத்துக் கொள்வோம். இப்போது சாப்பிடும் நேரம் ஆய் விட்டது. எழுந்திருங்கள் போய்ச் சாப்பிடலாம்.

[இருவரும் எழுந்து உள்ளே போகிறார்கள்.]

தண்ணிக்குடமடி நானுனக்கு—நல்ல
தாமரைப் பூவடி நீ யெனக்கு
தண்ணிக் குடத்துக்கும் தாமரைப் பூவுக்கும்
சம்மதமோ முத்து வீராயி.

காளியாத்தாள் பேச்சு அண்ணுமலைக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணவில்லை.

அண்ணு: அந்தக் கதையை எடுக்காதே; உன் இஷ்டப்படி நடந்துகொள். நான் சொல்லி நீ கேட்டது தானில்லையே.

காளி: நான் சொல்வதை நீங்கள் கேட்பதென்றுதானே பேச்சு. அதனுல் எல்லாம் என்னிடம் விட்டு விடுங்கள். உடனே வெள்ளையனை வரச் சொல்லுங்கள் இந்தப்புத்தகப் பூச்சியைபுத்தக மூட்டையுடன் கப்பலேற்றி பர்மாவுக்கு அனுப்பி விடுங்கள். நான் சொல்லுகிறபடி நாளையே கடிதங்கள் பறக்கவேண்டும்

இப்பேச்சின் பயனே பர்மாத் தந்தி.

13. குறும்புச் சிரிப்பு

"அண்ணுமலை,.........இராமனுதனை உடனே கப்பலேற்றி, இரங்கூனுக்கு அனுப்பு. முத்தையா எப்போ சென்ருன். வெள்ளையன் கப்பலேறி, வருகிருன்" இதுவே தந்தி; இதைக் கேட்டதுமே "என் வெள்ளைத்துரை வருகிருன்" என்று காளியாத்தா குதித்தாள். "இந்தத் தமிழ்ப் பூச்சி ஒழிவான்" என்று எக்களித்தாள். அவள் சூழ்ச்சி தந்தி வேகத்திற் பலித்தது.

* * *

இராமனுதன் இராகவையங்காரிடம் கம்பராமாயணம் பாடம் கேட்டுவிட்டு வந்தான். அவன் நாக்கு "மன்னவன் பணியன்ருகில் உன்பணி மறுப்பனே?" என்ற பாட்டை முணுமுணுத்தது. அவனையறியாமல் நெஞ்சு சலித்துத் துடித்தது. இராமனுக்கு வன வாசம் கிடைத்தது போலத் தனக்கும் தொலைவாசம் கிடைக்குமோ என்று அவன் திடுக்கிட்டான். உள்ளே நுழைந்தான். சொக்கு இடியிடியென்று சிரித்தான். "என்ன சொக்கு என்னைப் பார்த்தால் உனக்குச் சிரிப்பாயிருக்கிறதா" என்று கேட்டான் இராமனுதன்.

"இல்லை தம்பி, நேற்று வரையில் உன்னைப்பார்த்தால் எரிப்பு; இன்றுதான் சிரிப்பு" என்று பின்னும் குறும்பாகச் சிரித்து ஒரு மூட்டையைக் காட்டினுன்.

"இதென்ன சொக்கு?"

"எல்லாம் உன் பிலாக்கண மூட்டைதான்—எல்லாம் எடுத்துக் கட்டி வைத்துவிட்டேன்; இனி

இவற்றை வைகையில் போட வேண்டும். இன்றேல் நீ வங்காளக் கடலில் போட்டு விடு.

"எனப்படிச் சொல்லுகிருய் சொக்கு. நான் வேண்டுமானல் நண்பர் வீட்டுக்குப் போய்ப் படிக்கிறேன்."

"இனி நீ இரங்கோனில் மங்கமாரித் தெருவில் பெட்டியடியில் உட்கார்ந்து கொண்டு அழவேண்டியது தான்."

"எனப்படிச் சொல்லுகிருய்?"

"ஆத்தாளைக் கேளு" என்று சொக்கு உள்ளே ஓடினன். காளியாத்தாள் வந்தாள்; அன்றுதான் அவளுடைய கார் முகத்தில் புன்னகை மின்னியது பேச்சில் இடி முழக்கம் இல்லை; குரு குரு வென்று மழைக் காற்று வீசியது.

காளி: வா தங்கமே; ராமு; என் இவ்வளவு நாழி; இப்படிப் படித்தால் உடம்புக்காகுமா? உடம்பு பெரிதா, படிப்புப் பெரிதா.

இரா: படிப்பிற்கே உடம்பு, கலைக்கே வாழ்வு.

காளி: இப்படி வேதாந்தம் பேசிப் பேசி தேகம் தேவாங்கானதே தம்பி, நன்ருய் சாப்பிடு.

இரா: கலையுணவே எனக்கு முதன்மை; கலை வளர்க்கவே உடல்; உடல் வளர்க்க உணவு. நான் உண்ணவே வாழவில்லை; கலைக்காக வாழவே உண்கிறேன்.

காளி: நாளைக் கப்பலேறிப் போய் அப்புச்சியிடம் வேதாந்தம் படி; இன்று நன்ருகச் சாப்பிடு. எங்கே பார்க்கலாம் என் சொக்குவுடன் சரிசமனகச் சாப்பிட்டால் நீ கெட்டிக்காரத் தமிழ் மணிதான்.

இராமனதனுக்கு இந்தக் குறும்புப் பேச்சுகள் பிடிக்கவில்லை. அவன் ஏதோ சிந்தையில் ஆழ்ந்திருந்தான்.

காளியாத்தா அவனுக்கும் சொக்குவுக்கும் இலை போட்டு, சம்பாச்சோறு வைத்துப் பருப்புக் குழம்பூற்றிக் கைநிரம்ப நெய் விட்டு, உருளைக் கிழங்கு வருவலும் கத்தரிக்காயும் பாகைக்காயும் சேர்த்த கூட்டும் போட்டு "எங்கே பார்க்கலாம் பந்தயம்!" என்ருள்.

சொக்கு மதம் பிடித்த மலையாள யானையைப் போல் கவளம் கவளமாக அள்ளியடைத்தான்.

இராமனதன் சிந்தனை எங்கெங்கோ பறந்து கொண்டிருந்தது.

காளியாத்தா தன் சொக்கு சாப்பாட்டு மணியாயிருப்பதைக் கண்டு பூரித்துத் தமிழ் மணியை சுத்த சொத்தை என்று இழித்துக் கொண்டிருந்தாள். வந்தான் அண்ணமலை தந்தான் தந்தியை; படித்தான் தமிழ்மணி. "உடனே இரங்கோனுக்கு அனுப்பு" என்றதைப் படித்ததுமே அவன் மனவேதனை அதிகரித்தது; தன் கலைக்கனவை கவலைத் திரை மறைத்தது.

அண்ண: தம்பி, ராமு, நாளை மசண்டையிலே (காலையில்) பயணம், நாகபட்டணத்தில் வெள்ளிக் கிழமை "வெல்லிங்டன்" என்ற கப்பல் புறப்படுகிறது. அப்புச்சி உன்னை எதிர்பார்ப்பார்.

இரா: எந்தாயின் ஆவி நான் கலைக் கோயில் கட்ட எதிர் பார்த்துக் கொண்டு மேலே யிருக்கிறதே, செந்தமிழ் மதுரையை விட்டுத் தமிழறியாத பர்மாவில் எனக்கென்ன வேலை?

காளி: என்னவேலையா? வேலையில்லாமலா அப்புச்சி தந்தி கொடுப்

பார்; தள்ளாத வயதில் தளராது வேலை செய்தார்—உன் அப்பனுக்கு உதவிசெய்; தந்தை சொல் மந்திரம் என்று படித்திருக்கிறாயே?

இரா: தாய் சொல்லும் மந்திரந் தானே, தாய் கலைக்கோயில் கட்டச் சொன்னாளே.

காளி: அவள் எதோ மரணாவஸ்தையில் உளறியிருக்கிறாள். பேசாமல் புறப்படு—சரி, முதலில் சாப்பிடு. இதற்குள் சொக்கு பாதி வெண்கலப் பானையை, பாதிக் கற்சட்டியைக் காலி பண்ணி உள்ளே ஏற்றுமதி செய்துவிட்டான்.

இராமனாதனுக்குச் சோறு இறங்கவில்லை. "அட புத்தகப் பூச்சி, உனக்குப் போட்ட உருளைக்கிழங்கு வருகல் எனக்குப் போட்டால், வயிற்றில் பாக்கியிடத்தை நிரப்பி விடுவேனே" என்று சொக்கு சிரித்தான்.

இராமனாதன் விருட்டென்றெழுந்தான். கைகழுவி முகந் துடைத்துக் கொண்டான்; தந்தியை எடுத்துக் கொண்டு "நான் சில பெரியாரைக் கண்டு வருகிறேன்" என்று வெளியே சென்றான். காளி இடியும் மின்னலுமாக நகைத்தாள். சொக்கு கை கொட்டிச் சிரித்துவிட்டு உண்ட மயக்கத்தில் உலகையே மறந்து பஞ்சணையில் புரண்டான். அண்ணாமலை சாப்பிட உட்கார்ந்தான். இராமனாதன் கதவை மெல்லச் சாத்திக் கொண்டு தெருவில் நடந்தான்.

காளி: பயலுக்கு மனமில்லை.

அண்ணா: அப்படியானால் இங்கேயே படித்துக் கொண்டிருக்கட்டுமே.

காளி: இதென்ன அப்படியும் பேசுறது; இப்படியும் பேசுவதா? இந்தத் தமிழ் ஒப்பாரியைக் கப்பலேற்றி ஒழித்துவிடும். வெள்ளையன் துரை போலே வருவான். அடுத்த மாதம் பந்தல் போட்டு மேளம் கொட்டி அழகம்மையை மணையில் வைத்துப் பார்க்கவேண்டும்.

அண்ணா: சிவநேசமில்லாமல் கலியாணம் எப்படி நடக்கும், அண்ணன் கலியாணத்திற்குத் தம்பியிருக்க வேண்டாமா?

காளி: நாம் கடிதம் போடுவோம், வந்தால் சரி; இன்றேல் புரோகிதப் பார்ப்பானை சாத்திரத்தில் இரண்டு வரி சேர்த்து சொல்லச் சொன்னால் காரியம் ஆகிறது.

அண்ணா: உன் ஆத்திரத்திற்குச் சாத்திரம் மாறிப்போகுமா?

காளி: ஆத்திரம் சாத்திரம் எல்லாம் காளியாத்தா சொற்படி ஆட வேணும், இன்றேல் அடுத்த மாதம் சுப்பையருக்குத் தவசம் தரமாட்டேன்.

அண்ணா: எனக்கு என்னமோ மனமில்லை—சிவநேசத்தை உடனே வரச்சொல்லிக் கலியாணத்தை முடித்துப் பிறகு இராமுவையும் கூட்டிக்கொண்டு கப்பலேறச் சொல்லலாம்.

காளி: நான் சொல்வதற்கெல்லாம் எதிராடாவிட்டால் உமக்குத் தூக்கம் வராது. படித்துப் படித்துச் சொல்லுகிறேன், இடித்திடித்துச் சொல்லுகிறேன், மறுபடியும் சித்தம் போக்கு சிவன் போக்காயிருக்கிறீரே! என் வார்த்தைக்கு மதிப்பில்லையா?

அண்ணா: சரி, தொண்டையைக் கிளப்பாதே.

காளி: நீர் தானே என் தொண்டைக்குப் பிடிவாதத்தால் சாவி கொடுக்கிறீர்—சும்மா இரும்—நானெல்லாம் செய்கிறேன்.

அண்ணு: சரி செய்—எனக்கென்ன வம்பு.

காளி: நான் சொன்னபடி கேட்டுக்கொண்டு, செய்யச்சொல்லுகிறபடி செய்துகொண்டிரும்.

அண்: சரி, நீ போடு உக்கி என்ருல் எண்ணிக் கொள்ளச் சொல்லுகிறேன்.

காளி; அப்படி வாருங்கள் சமர்த்து. ஆணுக்கழகு பெண்ணைப் பணிதல்.

அண்: பெண்ணுக்கழகு?

இருவரும் வயிற்றுக் கடனைத் தீர்த்து முக்காலே அரைக்கால் வாசி ஊடலும், மீதி கூடலுமாயிருந்தனர்.

இனித் தமிழ்மணியைத் தொடர்வோம்.

14. பாரதியார்

இச்சமயமே கவி சுப்பிரமணிய பாரதியார் (அப்போது சுப்பையா) சேதுபதி ஹைஸ்கூலில் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்தில் தமிழாசிரியராகச் சில மாதங்கள் இருந்தார்.

பாரதியார் எட்டையபுரத்தில் பிறந்தார்; அவர் தந்தை சின்னசாமி ஐயர், தாய் லக்ஷமி; இளம் வயதிலேயே அவர் தாயையிழந்தார். தந்தை மறு மணம் புரிந்தார். பாரதியார் திருநெல்வேலி இந்து கலாசாலையில் ஏழு வகுப்பு மட்டுமே படித்தார். அதற்குள் தந்தை இறந்துபோனர். பாரதியார் பிறகு காசியில் தாய்மாமன் பாதுகாப்பில் வளர்ந்தார்; அங்கே இந்தியும் வடமொழியும் பயின்ருர்; இக்காலம் அவருக்கு விவேகானந்தரின் ஆங்கிலமாணவியான சகோதரி நிவேதிதையைச் சந்தித்தார். அவள் உபதேசத்தால் பாரதியாருள் கனன்ற தேசபக்திக் கனல் எழுந்தது.

சிறு வயதிலேயே பாரதியார் இயல்பாக நாடோடி மெட்டுகளில் கவி பாடி வந்தார். எட்டையபுரம் ஜமீந்தார் அவரைக் காசியிலிருந்தழைத்துத் தன்னிடம் வைத்து ஆதரித்தார். அப்போது அவரைச் "சுப்பையா" என்ற பெயரால் அழைத்தனர். சுப்பையாவுக்கு இளம் பருவத்திலேயே செல்லம்மாள் மனைவியாக வாய்த்தாள்; குடும்பச்சுமையை அவர் தாங்க நேர்ந்தது. அதற்காக ஏதாவது தொழில் பார்க்க வேண்டியிருந்தது. அவர் கவிதைத் தொழிலையே பூண்டார். அவர் இசைக்கவியையே பெரும்பாலும் விரும்பினர். அவர் பாடல்கள் பழைய மெட்டுகளில் அமைந்து புதிய பொருளைக் கொண்டு இனிமையா யிருந்தன. காவடிச்சிந்து அண்ணமலை ரெட்டியார், கோபாலகிருஷணபாரதியார் தாயுமானவர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பாடல்கள் அக்காலம் தமிழுலகில் பரவியிருந்தன.

மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் தெருப் பிச்சைக்காரன் கூட இப்பாடல்களைப் பாடுவதுண்டு. பாரதியார் எல்லாருக்கும் தெரிந்த இப்பாடல்களிலேயே தமது புதுமைக் கருத்துக்களை அமைத்துத் தமிழருக்குப் புத்துணர்வளித்தார். ஆனல் அவருடைய புலமையும் புதுமையும் இன்னும் தமிழுலகிற்குத் தெரியாதகாலம் அவர் எட்டையபுரத்தை விட்டு மதுரைக்கு வந்து சேதுபதி கலாசாலையில் கீழ்வகுப்பு மாணவருக்குத் தமிழ் சொல்லி வைத்துக் கொண்டிருந்தார். அந்த வேலையும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆங்கிலக்கல்வி முறையிலும் அடிமைத்தனத்திலும் அவருக்கு அசாத்திய வெறுப்புண்டு. தன்னுட் கனலும் தேசபக்தியை விளக்க ஒரு சந்தர்ப்பத்தை அவர் எதிர்பார்த்தார்.

அக்காலமே மஹாராஷ்டிரத்தில் திலகர் பெருமான் எழுந்து தேசாவேசக்கனலை மூட்டிக் கொண்டிருந்தார். தமிழ் நாட்டில் சிதம்பரம் பிள்ளை வீரச் சிங்கம்போல் எழுந்து விடுதலை முழக்கம் செய்தார். சிதம்பரம்பிள்ளை என்றால் தமிழர் கையெடுத்துக் கும்பிடுவர். சுதேசி இயக்கத்திற்கு வடக்கே லால்† பால்† பால், இயக்கம் என்பர். லால்=லாலா லஜபதி ராய்; பால்=பிபின் சந்திரபால், பால் (Bal) =பாலகங்காதர திலகர் தென்னாட்டில் சிதம்பரம்பிள்ளை கிளர்ச்சி என்றே சொல்வர். இக்கிளர்ச்சிதான் பாரதியாரின் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டி அவர் வாக்கிற்கு அமரத்தன்மையளித்தது. அக்காலம் தமிழகத்தில் புகழ் பெற்ற பத்திரிகை சுதேசமித்திரனே. ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் அரிய கல்விமான்; அரசியல் நிபுணர். ஆங்கிலத்தில் உருக்கமாகப் பேசினர்; அக்காலக் காங்கிரஸ் தலைவர் ஆங்கிலத்திலே தான் தமது தேசா வேசத்தைப் பொழிந்தனர். ஜி. சுப்பிரமணிய ஐயரின் ஆங்கிலப் பிரசங்கத்திற்கு வடநாட்டிலும் தென்னாட்டிலும் நல்ல பெயர். முதன்மையாகத் தொழிலாளர் முன்னேற்றத்தைப் பற்றி அவர் உருக்கமாகப் பேசினார்.

சிதம்பரம் பிள்ளை ஜி. சுப்பிரமணிய ஐயர், ஆகிய இருவரே பாரதியாரின் புலமையை தமிழகத்தில் விளங்கக் காரணமாயிருந்தனர். சிதம்பரம் பிள்ளையின் இயக்கத்திற்கு பாரதியார் தமது கவித்திறனை அர்ப்பணித்தார். ஜி. சுப்பிரமணிய ஐயரின் சுதேசமித்திரனுக்குப் பாரதியார் தமது இளந்தமிழ் வசனத்தை அர்ப்பணித்தார்.

அந்த அர்ப்பணத்தையும் அவர் இன்றே செய்யப் போகிறார்.

இன்று சுதேசமித்திரன் ஆசிரியர் மதுரைக்கு வந்திருக்கிறார். பத்திரிகை நடத்த தமக்குத் துணையாக ஒரு நல்ல எழுத்தாளரை அவர் தேடினர். அதிட்டவசமாக அவருக்கு பாரதியார் வந்தமைந்தார்.

15. பெரியார் உபதேசம்

மதுரைக்கு வந்ததும் ஜி. சுப்பிரமணியர் பண்டித கோபாலகிருஷ்ணையரையே முதலிற் பார்த்தார். "சுதேசமித்திரனில் தனக்குத் துணை செய்ய ஒரு நல்ல எழுத்தாளர் வேண்டுமென்று" அவர் கேட்டார். கோபால கிருஷ்ணையரே பாரதியாரை வரவழைத்து "இவர் நல்ல கவி, இனிய தமிழ் எழுதுவார், மேதாவி" என்று அறிமுகப் படுத்தினர்.

* * *

மூவரும் ஏதோ கலந்து பெரிய விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கின்றனர். மூவருள் வயதிற் சிறியவர் பாரதியாரே, அவர் கோபால கிருஷ்ணையரை கோபண்ணா என்றும் சுதேசமித்திரன் ஐயரை மாமா என்றும் அழைக்கிறார்.

ஜி: சு: பாரதிக்குள்ளே ஒரு மின்சாரம் இருக்கிறது. அது தமிழரைத் தட்டி எழுப்பும் மின்சாரம்.

பாரதி: மின்சாரம் தன் வேலையைச் செய்ய யந்திரமும் கம்பிகளும் வேண்டுமே. இல்லாவிட்டால் அது ஊமை மின்சாரமாகத்தான் இருக்கும். இந்த அடிமைச் சேரியைவிட்டு விடுதலை பெற வேண்டும்.

கோபா: பாரதி, உனக்குச் சுதேசமித்திரனே இப்போது மின்சார யந்திரம், அதன் மூலம் உன் எழுத்து வேகம் பரவும், தமிழர் மனமெல்லாம் உன் ஆவேசம் பரவும். புறப்படு இவருடன்.

ஜி. சு: புறப்படு என்னுடன்.

பாரதி: இதோ புறப்பட்டு விட்டேன் மாமா!

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

பாரதி: பராசக்தியை வேண்டிக் கொண்டேயிருந்தேன். தாயே என்னை அவனுக்கும் இவனுக்கும் அபத்தக்கவி பாடிப் பிழைக்கும் ஆண்டியாக்கி விடாதே. என் வாக்கிற்கு ஒரு மகோன்னதமான இயக்கத்தைக் கொண்டு வா; என் வாழ்வை உனக்கே பலி தானமாக்கு என்று முறை யிட்டேன்; எந் தாய் என் முறையைக் கேட்டாள். மகனே பயப் படாதே இதோ உன் வாக்கு விளங்கும் ஒரு சந்தர்ப்பம் என்றாள். சிதம்பரம் பிள்ளை தரிசனம் கிடைத்தது. இப்போது மாமாவின் அழைப்பு வந்து விட்டது. இனி யென்ன நமக்குத் தொழில். நாட்டு கவிதை. புறப்படு சிங்கம்.

ஜி. சு: சபாஷ் பாரதி புறப்படு.

பாரதி:

எடுத்த காரியம்
யாவினும் வெற்றி

எங்கும் வெற்றி
வெற்றி மற்றுங்கே,

விடுத்த வாய்மொழிக்
கெங்கணும் வெற்றி

வேண்டினே னெனக்
கருளினள் காளி.

* * *

பாரதியார் இந்தப் பாட்டை காபி ராகத்தில் பாடி ஆனந்தக் கூத்தாடிய போதே இராமனுதன் உள்ளே மெல்லப் புகுந்தான்.

கோபாலகிருஷ்ணையர் "வா தமிழ்மணி!" என்று வரவேற்றுத் தன் பக்கத்தில் அமரச் செய்தார். பாரதியாரும் "தம்பீ வா" என்றார்.

ஜி. சுப்பிரமணியர் இந்த வாலிபன் யார் என்று அன்புடன் விசாரித்தார். சம்பாஷணையில் தமிழ்மணியும் கலந்து கொண்டான்.

கோபா: இவன் அருமையான தமிழ்மணி; சிறு வயது முதலே பாட்டிலும் தமிழிலும் உள்ளத்தைப் பறி கொடுத்தவன். இவன் தகப்பனார் சிவநேசஞ் செட்டியார், தகுந்த செல்வர், சிறந்த தருமவான், பாண்டித் துரைத் தேவருக்கும் பாஸ்கர சேதுபதிக்கும் நண்பர். தமிழ் வளர்ச்சிக்கு ஏராளமான செல்வம் உதவியவர். இந்த வாலிபன் குலத்தொழிலைக்கூட மறந்து கலைத் தொழிலில் ஈடு பட்டான். நச்சினர்க்கினியார் தமிழ்ச் சங்கத்தில் படித்துத் தேர்ச்சி பெற்றான். சேதுபதி ஹைஸ்கூலில் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறான். இவனது தமிழறிவை மெச்சி வித்வான்கள் தமிழ்மணி என்ற பட்டமளித்தனர். அப்படியே நாங்களும் அழைக்கிறோம்.

பாரதி: இவ்வளவு முன்னுரை எதற்கு; மாமா அவன் பாட்டைக்கேளுங்கள்! மணி, தமிழ் மணி! உன் மணிக்குரலை உயர்த்து. உன் மனக் கனவுகளை யெல்லாம் ஒரு பாட்டில் வைத்து ஜமாய் பார்ப்போம். குஷியாகப் பாடப்பா, நாங்களெல்லாம் காது குளிரக் கேட்கிறோம். பாடு பாண்டியா!

பாரதியார் முதுகில் தட்டிக் கொடுத்தார். தமிழ்மணி உற்சாகமாகக் கண்டசுத்தி செய்து — சா — பா என்று தொண்டை நரம்புகளை இழுத்துவிட்டு இராக மாலிகையாக ஒரு விருத்தம் பாடினன்.

அருங்கலைக் கோயில் கட்டி
அதிலொரு தொண்டனகித்
திருந்து செந்தமிழுஞ் சைவத்
திருமுறை யறிவு மோங்கப்

பெருந்திருப் பணிகள் செய்யும்
பேறெனக் கருளி ஊனிற்
பொருந்திய வாழ்க்கை வய்யப்
புரிகுவாய் முருக வேளே!

பாரதி, "தம்பீ இப்படி விருத்தங்களைத் தாளமும் அமைத்தே பாடலாம் என்று பாடிக் காட்டி—வாக்கு நன்றாயிருக்கிறது கட்டுக்கலைக்கோயில்" என்றார்.

தமிழ்மணி: என் தாயும் இப்படியே கட்டளையிட்டாள். சென்ற பத்தாண்டுகளாக இதே கனவில் வாழ்கின்றேன். ஆனால் அது நிறைவேறத் தடைகள் வந்து சோதிக்கின்றன. பகைவர் சதி செய்கின்றனர்.

பாரதி: சுற்றி நில்லாதே போ—பகையே துள்ளி வருகுது வேல் என்று சொல் தம்பி; பகை விலகி ஓடும்.

தமிழ்: பெரியார் ஆசியால் பகைத்திறன் விலகிக் கலைத்திறன் இலக வேண்டும்.

கோபா: தமிழ்மணி, உனக்கு யார் பகை செய்வது? ஏன் சோர்ந்திருக்கிறாய்—சொல் செய்தியை.

தமிழ்: இதோர் தந்தி; என் தகப்பனார் என்னை இரங்கோனுக்கு வரச்சொல்லுகிறார். செந்தமிழ் மதுரையை விட்டுச் செல்ல எனக்கு மனமில்லை. எந்தாய் இறந்த பிறகு எனது நிலைமை கவலையானது. எனது மாமா நல்லவரே; ஆனால் அத்தை பெயர் காளி; குணத்தில் பத்திர காளிதான். அவள் மகன் சொக்கு. சுத்த மக்கு, முரட்டுத் தடியன்; நான் இனிமையாகத் தேவாரம் பாடினால் கழுதைக் குரலைக் கிளப்பி என் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறான். என் புத்தகங்களை ஒளிக்கிறான். கிழிக்கிறான்; என்னைக் கேலி செய்கிறான்; அவனைத் தாய் தூண்டிவிடுகிறாள். என் மாமா பெண் அழகம்மை—என்னை விரும்புகிறாள். ஆனால் நான் விரும்பவில்லை. மாமா அவளை எனக்கு தரவேண்டுமென்கிறார்; அத்தை என் அண்ணன் வெள்ளையனுக்குத் தரவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறாள். மாமா அத்தையின் அடிமை. அதுவும் சரிதான், வெள்ளை அண்ணனுக்கே தரட்டும். அண்ணன் குணந்தான் உங்களுக்குத் தெரியுமே.

கோபா: தடிக்கடாப் பயலை எனக்குத் தெரியுமே. இதற்குள் அவன் எப்படியெல்லாம் கெட்டிருக்கிறானோ, சொல்லு மேலே.

தமிழ்: என்னையும் என் தந்தையையும் பர்மாவிலேயே இருக்கச் செய்வார்களாம். இங்கே வெள்ளையனுக்கு அழகம்மையைக் கட்டி இராமனாதபுரம் ஈப்போ ஆகிய இரண்டிலும் குவிந்த எங் குலமுதலை அபகரிக்கச் சூழ்ச்சி செய்கிறாள் காளி; பர்மாவிலும் என் இன்னொரு மாமன் முத்தையா இருக்கிறான். அவனையும் கைக்குள் போட்டுக் கொண்டு பர்மா முதலையும் பறித்துக் கொள்ள வழி செய்கிறாள் காளி. எனது தமிழ் அவளுக்குப் பிடிக்கவில்லை; சொக்குவின் சாப்பாட்டுத் திறமை தான் அவளுக்குப் பிடித்திருக்கிறது.

ஜி: சு: இப்படிப்பட்ட உலகத்தில் இருந்துதானப்பா நாம் காலந் தள்ள வேண்டியிருக்கிறது. என் வாழ்வில் எத்தனை இடர்கள் வந்தன தெரியுமா? உறவினர் என் சீர்திருத்தக் கொள்கை பிடிக்காமல் படுத்திய பாடு கொஞ்சமன்று. சுதேசமித்திரனால்

தமிழ் நாட்டிற்கு நண்பனாக இருக்கிறேன். அதுவே என் ஆறுதல்.

கோபா: இந்தத் தமிழ் மணியையும் மித்திரனில் சேர்த்துக் கொண்டாலென்ன?

ஜி. சு: இந்தக் கவி மணியுடன், தமிழ்மணியும் தாராளமாக என்னுடன் இருக்கலாம்.

தமிழ்: என்னை அருமையாக வளர்த்த தந்தை உத்தரவைத் தட்டலாமா? மதுரையிலிருந்தால் தமிழின்பத்தில் உலகத் துயரை மறப்பேன். ஆனல் தந்தையை ஏமாற்ற மனமில்லை. அங்கே சென்ருல் தமிழ்—செல்வம்—இரண்டும் இழப்பேன். செல்லவா, வேண்டாமா.....? அருட்கவியான தாங்கள் சொல்லுங்கள்.

பாரதி: பாண்டியா இப்படிச்செய், நீ கலைக்கோயில் கட்டவேண்டும். இதுகாறும் செட்டிப் பிள்ளைகள் சத்திரம் சாவடி பசுமடம் பாடசாலை கட்டினர்கள். இதைத் தற்காலத்திற் கேற்ற முறையில் தமிழ், சமஸ்கிரதம், ஆங்கிலம், கணிதம், பூகோளம், பௌதிகரசாயன தாவர, வைத்திய யந்திர சாஸ்திரங்கள், காவியம், சித்திரம், பாட்டு நடனம் ஆகிய கலைகள் வளரும். கலைக் கோயில்களைத் தனவணிகர் கட்டவேண்டும். தம்பீ அதற்கெல்லாம் பணம் நிரம்பவேண்டும். நீ உன் தகப்பனரிடமே சென்று தொழில் பழகி பர்மாவில் உள்ள குலதனத்தையெல்லாம் கொண்டுவந்துவிடு. அங்கே தொழிலுடன் இசையும் தமிழும் வளர்; இரண்டும் உனக்குப் போதிக்க ஒரு தமிழிசைப் புலவரை அழைத்துச்செல். அங்கே உன் காலம் வீணுவதாயிருந்தால் தப்பனரிடம் விடை பெற்றுத் திரும்பு. தெய்வத்தை நம்பு வழி பிறக்கும். நீ சம்பாதிப்பதெல்லாம் தமிழ்த்தாயின் காணிக்கை என்று வைத்துவிடு. மற்றதெல்லாம் இறைவன் அருளால் நடக்கும். உயர்ந்ததை எண்ணு; ஊக்கமுடன் எழுந்திரு. துணிந்து வினை செய், கவலையை வெட்டு; இடர்களை இடித்துத் தள்ளிச் செல் முன்னே! சக்தி சக்தி என்று சொல்லிச் செல் முன்னே! வெற்றி உன் பின்னே வரும்.

கோபா: சரியான உபதேசம்

தமிழ்மணி பாரதியாரையும், மற்றிரு பெரியாரையும் வணங்கினன்

"பெரியீர், உங்கள் அன்பும் ஆசியும் என்னைக் கலைக்கோயிலுக்கு நடத்துக" என்று சொல்லி விடை பெற்றுச் சென்ருன்.

அன்று இரவு முழுதும் பல ஆனந்தக் கனவுகள் கண்டு கொண்டேயிருந்தான். ஆகா! பாரதி எப்படிப் பேசுகிருர். அவருடைய பேச்சில் தான் உறுதி நிறைந்திருக்கிறதே. ஆம். நானும் உறுதியுடன்தான் காரியங்கள் செய்வேன். என் கனவு மலரும். கலைக் கோயில் உயரும். எண்ணம் போல் வாழ்வு. சந்தேகம் கிடையாது.

மறுநாட்காலை ஐந்து மணிக்கு அண்ணமலை வண்டியேற்றி சரியான துணையுடன் நாகபட்டணத்திற்கு அனுப்பினன்.

காளி "ஒளிந்தது பீடை" யென்ருள். சொக்கு தனக்கு ஒப்பாரி வைக்க ஆளில்லையே என்று வருந்தினன். அழகம்மை மட்டும் கண் கலங்கி நின்ருள்.

[தொடரும்]

மனோதத்துவம் :

இலையுதிரத் துளிர் துளிர்க்கும்

“சுகி”

என் மனசில் கூடிக் குவியும் சஞ்சல மேகங்களை இன்று கொட்டி விடத் தீர்மானித்து விட்டேன். முகில் நிறைந்த வானம் என்றாவது மழையைப் பொழிந்து தானே தீர வேண்டும். அந்த நிலைமையில் இப்போது நான் இருக்கிறேன்.

கை தேர்ந்த கதாசிரியனைப் போல் ரசனையுடன் எனக்கு எழுதவராது—முக்கிய காரணம் நான் கதாசிரியன் அல்ல. ஆகவே என் இதயத்தில் பாங்கி தலைமைக் குமாஸ்தாவின் இதயத்தில், எழுந்த பூசல்களையும் ஆசாபாச மோதல்களையும் விசித்திர விபரீதங்களையும் அப்படி அப்படியே எழுத அனுமதி தரவேண்டும்.

வாழ்வே ஒரு கொடிய சோதனை வெள்ளம். எத்தனையோ சம்பவங்கள் நம் உதார குணத்தைச் சோதிக்க குமிழிபோல் கிளம்பியதுண்டு. அச்சோதனைக் குமிழிகளைத் தகர்த் தெரிந்துவிட்டு, ஐயையோ! அப்படியேன் செய்தோம்? என்று பச்சாதாபம் கொள்கிறோம்.

எனக்கு இந்தக் கதி போன மாதம் ஏற்பட்டது. தவறுசெய்துவிட்டு, பிழிபடும் ஈரத்துணிபோல் கண்ணீர் உகுத்து என்ன பயன்?

அன்று, நாகராஜன் இறந்தான் என்ற செய்தி கேட்ட அன்று, என் மனம் துள்ளிய துள்ளல் என்ன? தபால் ஆபீசுக்குப் போகும் போது மனசு கூத்தாடிய கூத்தாட்டத்தை விவரிக்க முடியாது. ஆனால் தந்தி கொடுத்துவிட்டுத் திரும்பும்போது, சரத் காலத்தில் கீழ்க்கோடியிலிருந்து ஈட்டியெனப் பாய்ந்து செல்லும் மின்னலைப் போல என் நெஞ்சை தந்தி—நான் கொடுத்த தந்தி—பிளந்தது.

தந்தி கொடுத்த நான் மகத்தான மாற்ற முடியாத பாவச் செயலை செய்துவிட்ட குற்றவாளியைப் போல் நடந்து, வீடு நோக்கினேன். நெஞ்சு, தந்திஅடிப்பது போல் ‘படக்’ படக்’ என அடித்துக் கொண்டிருந்தது.

நாலு வீட்டுக்கு அப்பால் வரும் போதே, நாகராஜன் வீட்டிலிருந்து அழுகையும் புலம்பலும் மிதந்து வந்தன.

சந்தியாகால சூரியன் மறைந்து, அஸ்தமனத்தின் சாயை படரும் நேரம். எங்கும் இருள் சூழ்ந்தது. என் இதயத்திலும் இருள் கவிந்தது.

நாகராஜன் வீட்டுத் திண்ணையில் கவலை தோய்ந்த முகத்துடன் பலர் இருந்தனர். ஒரு கிழவர் தென்னோலையை லாகவமாக முடைந்து கொண்டிருந்தார்.

மற்றொருவர் மூங்கில் தறித்து, அதை எணிப் பளுவாக கட்டவாரம்பித்தார். இந்த மாதிரி வாழ்க்கையின் கடைசிப் பிரயாண ஏற்பாடுகளைச் செய்து பழகிவிட்ட அவர்களுக்கு மனச்சஞ்சலமே இல்லை. அது தொழிலாகிவிட்டது.

என் நெஞ்சம் துணுக்குற்றது. தென்னோலையும், மா விலைகளும்

தூரத்தில் மண் சட்டியில் புகைந்த நெருப்பும், வீட்டுக்குள்ளே அடித்து விழுந்து, கதறி அழும் பெண்களின் ஒப்பாரி ஓலமும் என் மனதைப் பிளந்தது.

என்னைப் பார்த்த ஒருவர், "ஆபீசுக்குத் தகவல் தெரிந்து இப்போதுதான் வருகிறீர்களோ? பாவம், நாகராஜன் தங்கமான மனுஷன் ஸார்" என்றார்

என் முகத்தில் படிந்திருந்த வருத்தத்தின் சாயை கண்டு சகியாத மற்றவர், "உங்களுக்கு ஆத்மார்த்த சிநேகிதர். உங்களுக்கு உயிர், என்ன செய்யலாம் சார்? அது அது நடக்கவேண்டியபடி நடக்கும். உங்க சிநேகிதர் உங்களுடன் இருக்கக் கொடுத்து வைக்கவில்லே. பாங்கி ஆபீஸில் நீங்கள் தானே, அவருக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கிறீர்கள்? ஹூம் அவ்வளவுதான் பிராப்தம்" என்று துக்கம் கொண்டாடினார்.

சை, மனிதன் வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாறி விடுகிறான். என் மனம் நாகராஜனுடைய துக்கமான சம்பவத்திற்காக படாத பாடு படுவதாக, பட்டதாக நினைத்துவிட்டனர். இது நீரோட்டத்தின் மேற்பரப்பைக் கண்டு, அதன் போக்கைத் தீர்மானிக்கிற கதையாக இருக்கிறது.

ஆனால், நீர்ப்பரப்பின் அடியில் சுழலும், சுழல்களும் கொந்தளிப்புகளும், மோதல்களும் வெளியே தெரிகிறதில்லை.

இந்த மாதிரியே, நாகராஜன் மரணத்தினால் நான் பெருத்தநஷ்டம் அடைந்துவிட்டதாக வெளியுலகம் என் முகத்தோற்றத்தைக் கண்டு ஏமாறுகிறது என்ன பேதமை. ஆனால் என் மனதில் கவிந்த விரோத கெட்ட கொந்தளிப்புகளை வெளியுலகம் அறியாது.

திடீரென, வீட்டிற்குள்ளிருந்து ஜானகியின் பரிதாபமான பிரிவாற்றாமையினால் துன்பப்படும், படப் போகும், ஏக்கக்குரல் கேட்டது. கணவனைப் பிரிந்தவர்களுக்குத்தான் உள்ளத்தில் குமுறியெழும் உணர்ச்சியை அப்படி வெளியிட்டு அலறமுடியும்.

"ஹூம், என்னம்மா அழுது சாகறே? ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் நாகராஜன் வரப்போறானா? போனது போனது தான்" என்ற வேதாந்தத்தைப் பக்கத்திலிருப்பவர் சொன்னார்.

"அது சரி ஐயா, நூறு ரூபாய் சம்பாதித்தானே. ஏதாவது நாலு துட்டு மிச்சம் உண்டோ?" என்றார் மேலத் திண்ணையில் இருந்தவர்.

"என்ன மிச்சம்? இதுவரை உண்டதும் உறங்கினதும்தான் மிச்சம். இந்தக்காலத்திலே, எவன் மிச்சம் வைக்கிறான். சம்பாதிக்கும் போது தலைகால் தெரிகிறதில்லே. செத்தபின் தெரிகிறது சிறப்பு?" என்று சமூகத்திற்கே சாட்டை கொடுத்தார்.

வெளிப்பக்கத்தில் வண்டிகள் வருவதும், அதிலிருந்து வேண்டியவர்களும், பந்துக்களும் இறங்குவதுமாக விருந்தார்கள்.

"அடிபாவி, சண்டாளி, என் தலையிலே கல்லைப் போட்டுவிட்டாயே, ஜானகி அடிபாவி" என்று ஜானகியின் தாயார் தலைவிரி கோலமாக ஓடி வந்தாள். பெற்றெடுத்தவளுக்கு மகளின் வருங்கால கோலம், ஆம், அலங்கோலம் நினைவுக்கு வந்துவிட்டது. உள்ளே தாயும் மகளும் கட்டிப் புரண்டு கதறியது யாருடைய நெஞ்சத்தையும் பிளந்தது.

என் மனசு, நிலையற்று தவித்துக்கொண்டிருந்தது. தென்

ஜேலையைப் பின்னிய பெரியவர் அதை எடுத்து ஓரமாகச் சாற்றினார். தலைமாட்டுக்கு வைக்கோல்ச் சுருணை சரியாக இருக்கிறதா வெனப் பார்த்துவிட்டு, "ஏனப்பா தூக்கலாமா? தந்தி கொடுத்தவங்க ளெல்லாம் வந்தாச்சில்லே?" என்றார்.

இதற்கு என்ன பதில் சொல்லப் பட்டதோ எனக்குத் தெரியாது. தந்தி என்ற சொல் என் இதயத்தை ஈட்டியாகக் குத்தியது. என் சிந்தனைகள் எங்கெங்கோ சுற்றியலைந்தன.

(2)

மனச்சாட்சி, இது ஒரு பேய். சமயா சமயங்களில் கூத்தாட ஆரம்பிக்கும். நான் கொடுத்த தந்தி—மனச்சாட்சியின் ரூபத்தில் வந்தது.

எவ்வளவு வருஷங்கள் கழிந்தால் என்ன? வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டால் தான் என்ன? அந்த தந்தி என் வாழ்க்கைக்கு சோதனை வெள்ளமாக இருக்கிறது. என் உள்ளத்தில் முத்திரையாக ஏற்பட்டுவிட்ட பிறகு உயிர் உள்ளவரையும் அழியுமா?

நாகராஜன், வியாதியுற்றிருந்த போது நான் பட்ட மனக் கஷ்டம் வெளியே சொல்லிமுடியாது. தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தேன். அவன் உயிர் புத்துயிராக மாறவேண்டுமென பிரார்த்தனை செய்தேன். இப்படியெல்லாம் மன சுத்தியுடன் இருந்தவன், என்ன கேவலமான காரியம் செய்தேன்? தவறு செய்ததை ஊனுள்ளளவும் மறக்கமுடியுமா? தவறு என்ன ஒரு துணியா, களைந்து எறிவதற்கு?

சை, என்ன வேதாந்தம்? நான் என்ன ஞானியா? இல்லை, வறுமையும் பசிப் பிணியும் வந்து கவ்வும்போது, ஆசாபாசங்கள் வரக் கூடாதா? ஆனால் துரோக சிந்தனை நிறைந்த—நண்பனுக்கு அடாத அபவாதமான எண்ணம் உண்டாயிற்றே.

நண்பன் பிரிவாற்றாமையினால் நான் தான், அதிக நஷ்டம் அடைந்தேனாம். என்ன பேதமை? இந்த துரோகியல்லவா, சிநேகிதத்தன்மை—பால்ய வயசில் நாகராஜனிடம் கடன் பட்ட பணம், அவன் வாங்கிக் கொடுத்த பாங்கி உத்தியோகம் இதையெல்லாம் மறந்து தந்தி அடித்தேன்.

நாளை இந்த பழிச்சொல் போகுமா?

"யார்? அவனா? சை...சை சிநேகிதத் துரோகப்பயல்" என் பார்களே. நான் நாலுபேர்முன் தலைகாட்ட முடியாது. என் மனைவியைப் பார்த்தால், "ஆஹா, அவளா, சண்டாளன் மனைவி, பிணம் வீட்டிலிருக்கும் போதே தனக்கு உத்தியோகம் கிடைத்தது' என்று ஏளனம் செய்வார்கள்.

என் குழந்தையைப் பார்த்தால், 'ஐயையோ, நண்பன் சாவினால் தனக்கு உத்யோகம் உயர்ந்தது என்று தந்தி அடித்த மாகானுடைய பிள்ளை' என்று இடித்துக் காட்டுவார்கள். இந்த மாதிரியான பழிச் சொல்லை நான் சகிக்க வேண்டும். சை, என்ன முட்டாள்த்தனம் செய்தேன்.

நாகராஜன் உயிரை, உயிருக்குயிராக இதுவரை நினைத்து வந்த நான், அவன் செத்தான் என்பதைக் கேட்டதும், அவசர புத்தியுடன் தந்தி கொடுத்து விட்டேன். இதில் தப்பிதம் உண்டா?

வாழ்க்கை ஒரு நாடகமேடையும் அல்ல, நான் லக்ஷியவாதியும் அல்ல. இந்த மாதிரியான தத்து

வம் செய்து கொண்டிருந்தவன் கண்ணயர்ந்து விட்டேன்.

திடீரென, சங்கின் அலறல் கேட்டது. விழித்தேன், தென்னோலையில், நாகராஜன்; இல்லை, அவன் பிரேதம். அவன் சடலத்தில் புரண்டு கிடக்கும் கருநாகம்போல கூந்தல் புரள ஜானகி கதறும் காட்சி. வெளியே சங்கின் பம் பம் என்ற பிரயாண நினைப்பூட்டும் அலறல் அலைகள். கணப்புச் சட்டியிலிருந்து புகைப்படலம்.

'உம்......உம்......தூக்குங்கள்' என்றார் ஒருவர். தூக்கப்பட்டது "ஐயோ...அம்மா......அப்பா...... என்னை விட்டுவிட்டுப் போகிறீரே என்னையும் கொண்டு போங்கள்". என்று அலறி, கதறி விழுந்தாள். அவள் முகத்தில் கண்ணீர் மாலை மாலையாகப் பெருகி ஓடியது. தீராக் கவலையும் ஏக்கமும் தோய்ந்த அம்முகத்தைக் காண சகிக்கவில்லை.

சங்கு ஊதிய ஒலி தூரத்தில் கேட்டது. கும்பல் நகர வாரம்பித்தது. நானும் மரக்கட்டை போல நகர வாரம்பித்தேன்.

மூலை திரும்பிய கூட்டத்தோடு கூட்டமாக மயானம் சென்றேன்.

(3)

இருபத்தைந்து நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் இப்போது நடந்தது போல் இருக்கிறது. சற்று முன்புதான், ஜானகி போகும் வண்டியைப் பார்த்தேன். என் மனைவி சொல்லிய பின்பே வண்டியைக் கவனித்தேன். அவளுடைய செம்பட்டைத் தலையும், அணைந்த விளக்குப் போல இருந்த முகமும் தெரிந்தது. இதற்கு முன் அம்முகத்தில் குங்குமம் இடப்பெற்றிருக்கும்போது பார்த்தால், பூப்போட்டு பொட்டிட்ட குத்து விளக்குப் போலிருக்கும். இன்றோ?

நான் மௌனமாக வண்டி போகும் திக்கைப் பார்த்து நின்றேன். என் மனம் சுழன்றது.

நாகராஜன் உட்கார்ந்து அதிகாரம் செய்த அதே நாற்காலியில் நான் இருக்கிறேன். அவனுக்கு கைகட்டியவர்கள், இன்று எனக்கு கை கட்டுகிறார்கள். அவன் சம்பளத்தை நான் பெறுகிறேன். என் மனைவி ஜம்பமாக நடக்கிறாள். பெருமை யடிக்கிறாள். ஆனால் அபலை ஜானகி அணைந்த விளக்குப் போல பிறந்தகம் போகிறாள். இந்தப்படி நினைவு ஓடியது.

வண்டி தொலைதூரம் சென்று விட்டது. என் மனைவி, "என்ன நிக்கிறீங்க. கடைவீதிக்குப் போக வேண்டாமோ......முதல் சம்பளம் வந்திருக்கு, பட்டுக் குங்குமம் ஹெயர் ஆயில் வாங்கணும். நான் ட்ரெஸ் செய்தாச்சு. நீங்கள்......" என்று கொஞ்சலாகப் பேசினாள்.

உடனே அன்று ஜானகி, "என்னையும் கொண்டு போங்களேன்" என்று தென்னோலையில் கிடந்த நாகராஜன் சடலத்தில் கருநாகம் போன்ற கூந்தலுடன் புரண்டு கிடந்து அழுத காட்சி ஞாபகம் வந்தது.

ஜானகியின் தீராத் துயரம் என் மனைவிக்கும் எனக்கும் மாறா இன்பமாக இருக்கிறது. ஆமாம், நாகராஜன் சாவு என் உத்யோகத்தின் உயர்வு.

என்ன தான் உத்யோகம் வந்தாலென்ன? பவிஷில் பட்டுக் குங்குமம் வாசனைத் தைலம் வாங்கினாலென்ன? என் மனைவிக்கு நான் அடித்த தந்தி — நாகராஜன் இறந்தான். அவன் ஸ்தானத்தில் என்னை நியமனம் செய்வார்கள் என்று இந்த தந்தியை ஜானகி அறிந்தால்......?

அவள் அறிவானேன்? என் மனச்சாட்சி அறியவில்லையே.

ஒருவேளை என் மனச்சாட்சிக்கு கற்பனையும் இலக்ஷியமும் ஒன்று. வாழ்க்கையும் சிந்தனையும் வேறென்று எனத் தெரிந்து விட்டதா? இல்லை, நானே, என்னை ஏமாற்றிக் கொள்கிறேனா?

இப்படிக் குழம்பி நின்றேன். வீட்டுக்குள்ளே பீரோ திறந்து மூடும் சப்தம் கேட்டது. ஸ்நோவும் செண்டும் பவுடர் வாசனையும் கதம்பமாக அடித்தது. தலைக்குத் தடவிக்கொள்ளும் தைலவாசனை எல்லாவற்றையும் தூக்கி அடித்தது. "போவோம், கடைத்தெருவுக்கு, குங்குமம், மஞ்சள் வாங்க" என்று என் மனைவி மறுகுரல் கொடுத்தாள்.

ஜானகியின் மனக்கொதிப்பு, நாகராஜன் மறைவு இரண்டும், எனக்கும் என் மனைவி இருவருக்கும் பெரிதாகப்படவில்லை. இதற்கு மாறாக எங்கள் வாழ்க்கைச் சகடத்துக்கு, ஒரு புதுவித சோபையையும், வேகத்தையும் தந்தது.

குழம்பிய மனதுடன் தூரத்தில் ஜானகி ஏறிச் சென்ற வண்டியைக் கவனித்தேன். அது மூலை திரும்பிய நிழலாட்டத்தை கடைசி முறையாகப் பார்த்து விட்டு உள்ளே போனேன்.

என் மனைவி ஷோக்காக சிங்காரித்துக்கொண்டு கடைத் தெருவுக்குப்போக நின்று கொண்டிருந்தாள். முதல் சம்பளம் வாங்கிய பெருமையில் நாங்களும் மஞ்சள், குங்குமம் வாங்க கடைத் தெருவுக்குப் புறப்பட்டோம்.

ஆம், இதுதான் வாழ்க்கை.

இலையுதிரும் போதுதான் தளிர் துளிர்க்கிறது!.......

சுந்தரி

[கே. விஜயராகவன்]

குமாரபுரம் மிராசுதார் செல்வ ராஜ முதலியாருக்கு சுந்தரம் ஏக புத்திரன். பி.ஏ. படித்து பாஸ் செய்திருந்தான். பையன் மேலும் பி. எல். படித்து வக்கீலாக வர வேண்டும் என்று தகப்பனுருக்கு ஆசை. ஆனல் சுந்தரம் மேற் கொண்டு படிப்பதில்லை யென்று ஒரேயடியாக மறுத்து விட்டான்.

"சுந்தரம், நீ படித்து வக்கீலாக வரவேண்டும் என்று எனக்கு எத் தனை ஆசை தெரியுமா? என் ஆசையை ஏண்டா கெடுக்கிருய்?" என்று முதலியார் மன்ருடினர்.

"அப்பா, இப்போது உள்ள செல்வம் போதாதா? வக்கீல் தொழில் செய்து இன்னும் ஏராள மாக நான் வேறு சம்பாதிக்க வேண்டுமோ?"

"சுந்தரம் நீ சம்பாதித்தாலும் சரி. சம்பாதிக்காவிட்டாலும் சரி. அல்லது இப்போது உள்ள செல் வத்தையே அழித்து விட்டாலும் சரி, என்னுடைய பிள்ளை பெரிய வக்கீல் என்று சொல்லும்படியாக இருந்தால் போதும். அதுதான் நான் உன்னைக் கேட்பது."

"அப்பா, அது முடியாத காரி யம். உள்ள செல்வம் போதும். நான் படிக்கவும் வேண்டாம். வக்கீலாகவும் வேண்டாம். என் னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்று சொல்லி விட்டான்.

"சரி, உன் இஷ்டம்போல் செய். என் ஆசையைப் பாழாக்கினுய். அவ்வளவுதானே" என்று சொல்லி முதலியார் வருத்தப் பட் டார்.

படிப்பு முடிந்து சுந்தரம் ஊரு க்கு வந்ததிலிருந்து அதிகமாக வீட்டில் தங்குவதே இல்லை- ஒருவரிடமும் அதிகமாகப் பேசு வதும் இல்லை. ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வயலை நோக்கிக் கிளம்பி விடுவான். அமராவதி ஆற்றங் கரையிலே அழகான தொரு தோப்பு. ஆற்றின் இரு கரைகளிலும் எங்கு பார்த்தாலும் பரந்த வயல் வெளிகள். மத்தியில் அமராவதி சாந்தமாக ஓடிக் கொண்டிருந்தது. சுந்தரம் ஆற் ருேரமுள்ள ஒரு மாமரத்தின் அடி யில் திட்டின்மேல் வழக்கமாக உட்கார்ந்து கொள்வான். கொஞ்ச நேரம் படிப்பான். கொஞ்ச நேரம் சுற்றிலும் உள்ள இயற்கை காட்சிகளைக் கண் கொட்டாமல் பார்ப்பான். பறவைகள், ஆணும் பெண்ணுமாக மரங்களில் கொஞ்சி விளையாடுவதைக் கவனிப்பான். தூரத்தில் குடியானவர்கள் நிலத் தைப் பரம்படிப்பதைப் பார்ப் பான். ஒரு பக்கத்தில் பெண்கள் நாற்று நடவு செய்து கொண்டி ருப்பதை கவனிப்பான். அவர்கள் கவலையற்ற வாழ்க்கையும் கேளிக் கைகளும் சுந்தரத்தின் மனதைக் கவர்வதாயில்லை. என்? அவனு டைய மனதில் ஏதோ கவலை நிறைந்திருந்தது. பெயருக்கேற்ற அழகும் கல்வியும் செல்வமும் நிரம் பிய இந்த இளைஞனுக்கு கவலை என்ன வந்தது? கொஞ்சம் விவ ரிக்கலாம்.

அப்போது சுந்தரம் சென்னையில் பி. ஏ. இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்தான். அவ ஞேடு அவன் நண்பன் சந்திரனும் இருந்தான். இருவரும் ஒரு

வீட்டின் மாடியில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தார்கள். சந்திரனும், சுந்தரமும் மனமொத்த நண்பர்கள். சாப்பிடுவது, கலாசாலைக்குப் போவது, உலாவுவது உறங்குவது எல்லாம் ஒன்றாகத்தான். இரட்டையர்கள் போல இரண்டு பேரும் சேர்ந்தே இருப்பார்கள். ஒரு வருஷமல்ல கடந்த நாலு வருஷங்களாக அப்படித்தான் இருந்தார்கள். திடீரென்று பெண்கள் கலாசாலையில் படிக்கும் ஒரு யுவதி எதிர் வீட்டு மாடிக்குக் குடிவந்து சேர்ந்தாள். அவளோடு அவளுக்குத் துணையாக யாரோ இரண்டு பெரியவர்களும் இருந்தார்கள். இவர்களும் மாடியில் இருந்த படியால் அடிக்கடி இவர்களுடைய கண்களும், அந்த யுவதியின் கண்களும் அந்த மாடிக்கும் இந்த மாடிக்கும் ஆக நொடிக்கு நூறு மைல் வேகத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தன. ஏதோ விளையாட்டுக்காகவும் வேடிக்கைக் காகவும் அந்தப் பக்கம் பார்ப்பதும் கேலி செய்வதுமாக இருந்தார்கள்.

ஆனால் அந்தப் பெண்ணின் கரிய விழிகள் குறுகுறுப்பான பார்வை சுருண்ட கூந்தல், நடை உடை பாவனைகள் யாவும் சுந்தரத்தின் இதயத்தில் இடம் பெற்று விட்டது. அந்தப் பெண் விரும்பினால் அவளையே கலியாணம் செய்து கொள்ள வேண்டும் அல்லது பிரமசாரியாகவே இருந்துவிட வேண்டும் என்ற உறுதியான எண்ணம் அவன் மனதில் வளர்ந்து வந்தது. சந்திரன் இந்த விஷயத்தில் எல்லாம் இவ்வளவு சிரத்தை கொள்வது கிடையாது. காதல்—கீதல் என்னடா அது என்று கிண்டல் செய்வான். இருந்தாலும் எதிர் வீட்டுப் பெண் மாடியில் நிற்கும் போது அவளை அறியாமலே எதிர்ப் பக்கம் பார்ப்பான். சுந்தரம் கவனிக்கும் போது 'காட்சி கண் காட்சியே' என்றும் பாடுவான் அலட்சியமாகவும் வேடிக்கை யாகவும்.

பரீட்சைக் காலம். ஒரு ஞாயிற்றுக் கிழமை. சுந்தரத்துக்கு உடம்பு சௌகரியமில்லை. அறைக்குள்ளேயே போர்வையை எடுத்து உடம்பை மூடிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் படித்துக் கொண்டிருந்தான். சுந்திரம் மாடி வராந்தாவில் நாற்காலியைப் போட்டு உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண் நாலு வரிக்கு ஒரு தடவை எதிர் வீட்டு மாடிக்குப் போய் எதையோ தேடிவிட்டு வரும்.

ஒரு ஐந்து நிமிஷத்தில் ஒரு சிறு பெண், வேகமாக இவர்கள் அறைக்குள் நுழைந்தாள். அவள் மேலும் போக விரும்பினாள். ஆனால் நாற்காலியில் சுந்தரத்தைக் கண்ட உடனே அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டு பறந்து விட்டாள். சுந்தரம் கடிதத்தைப் பிரித்தான். மேலும் கீழும் பார்த்தான். "சுந்தரி" என முத்து முத்தான எழுத்தில் கையெழுத்தும் இருந்தது.

கடிதத்தை இரண்டு தடவை படித்தான். வராந்தாவை எட்டிப் பார்த்தான். வராந்தாவிலிருந்து சந்திரன் எதிர் வீட்டை நோக்கியபடி இருந்தான். இந்தக் கடிதத்தை என் கையில் கொடுப்பானேன்.? சரிதான். நான் குறுக்கே இருக்கிறேனா, சரி சரி, விஷயம் விளங்கி விட்டது. சந்திரன் முதலில் காதல் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தான். அதைப் பாட்டாகவும் பாடிக் கொண்டிருந்தான். இப்போது கதை நடத்தவும் ஆரம்பித்து விட்டானா? எப்போதும் இந்தப் பெண் சமூகம் இப்படித்

தானே? போகட்டும். நண்பனாவது அனுபவிக்கட்டும். மனித வாழ்க்கையில் எது பிரதானமோ அது கைகூடவில்லை. இனி கலியாணமே வேண்டாம் என்று தீர்மானித்து விட்டான். சந்திரனிடம் கடித விஷயத்தைத் தெரிவிக்கவில்லை. பரீட்சை எழுதிமுடியும் வரை வெளி வராந்தாவுக்கே செல்ல வில்லை. அந்தப் பெண்ணைப் பார்க்கவும் இல்லை. ஆனால் அவளுடைய உருவம் மட்டும் மனதை விட்டு அகலவில்லை. ஊருக்குப் புறப்படும் போது கூட சந்திரனிடம் இது விஷயமாக ஒன்றும் பேசவில்லை. தன்னை அறியாமலே பொறாமையும் வளர்ந்திருந்தது.

ஊருக்கு வந்த பின்னும் அந்தப் பெண்ணைப் பற்றிய ஞாபகம் அடிக்கடி வந்து கொண்டுதானிருந்தது. அவள் தனக்குக் கிடைக்க வில்லையே என்ற ஏக்கம். அதோடு பெண்களிடம் ஒரு வெறுப்பும் வளர்ந்து வந்தது. எதிலும் சிரத்தையில்லாத ஒரு உன்மத்தன் போல ஆகிவிட்டான். அதனால்தான் மேற்கொண்டு படிக்கவும் மறுத்து விட்டான். யாரிடமும் முன்போல 'கலகல'ப் பாகப் பேசுவதுமில்லை. பழகுவது மில்லை. உட்கார்ந்தால் உட்கார்ந்த இடத்தில் தான். சாப்பாட்டுக்கும் கூட யாராவது வந்து ஞாபக மூட்ட வேண்டும்.

சின்ன எசமானுக்கு என்ன 'புத்தி' ஒரு மாதிரி ஆகி விட்டதே' என்று வீட்டைச் சேர்ந்த சிப்பந்திகள் சேதி பரவ விட்டார்கள். ஊரெல்லாம் அதே பேச்சுத்தான். தாய் தந்தையர் காதுகளுக்கும் ஊரார் பேச்சுக்கள் எட்டாமலில்லை. ஜாதகம் பார்த்தார்கள். கோவில் பூஜைகள் நடத்தினார்கள். கல்யாணம் செய்து விட்டால் எல்லாம் திருந்திவிடும் என்ற முடிவுக்கு வந்தார்கள். "படிக்கா விட்டால்தான் போகிறது; நல்ல இடங்களில் அழகான பெண்கள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று தாயும் தந்தையும் தங்களால் இயன்றவரை சொல்லிவிட்டார்கள். "எனக்குக் கலியாணமே வேண்டாம்" என்ற ஒரே பதில்தான் கிடைத்தது.

சுந்தரம் நாளுக்கு நாள் மெலிந்து உன்மத்தனாக தன்னந்தனியே வயல் வெளிகளில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான். பெற்றோருக்கோ அளவிடமுடியாத வருத்தம்.

*　*　*

இந்த விவகாரம் தாயாரை விசனத்திலிருந்து வியாதிக்குக் கொண்டு போய் படுக்கையில் கிடத்திவிட்டது. அவளுடைய நிலை அடிக்கடி மோசமடைந்து வந்தது. சுந்தரத்துக்கு தாயாரிடம் அளவு கடந்த அன்பும் மரியாதையும் உண்டு. அவனே நல்ல டாக்டராக அழைத்து வந்து கவனிக்கச் செய்தான். தாயாருக்குப் பக்கத்திலிருந்து வேண்டிய ஒத்தாசைகளும் செய்தான். மனவியாதிக்கு மருந்து ஏது? தாய் சொன்னாள். 'சுந்தரம் இந்த மருந்தெல்லாம் என் வியாதியைத் தீர்க்காது. உன்னால்தான் குணமாக வேண்டும்' என்று.

"அம்மா, நான்தான் உன் பக்கத்திலேயே இருக்கிறேனே. உனக்கு வேண்டிய தெல்லாம் செய்கிறேன்"

"சுந்தரம் அது அல்ல நான் விரும்புவது. நான் சாகிறதற்குள் என் ஆசை பூர்த்தியாக வேண்டும். வீண் பிடிவாதம் செய்யாதே. கலியாணம் செய்து கொள்வதாகச் சொல்லு. அதுவே என் வியாதியைப் போக்கும்" என்று கண்ணீர் உகுத்து கல்லும் கனியும் படி கெஞ்சினாள்.

சுந்தரம் யோசித்தான். அவனுக்கே ஒன்றும் புரியவில்லை. அந்தச் சுந்தரியின் உருவம் அவனை ஏளனம் செய்வது போல இருந்தது. ஒரு நாள் இரண்டு நாள், ஒருவாரம் தன் மனத்தோடு போராடினான். கடைசியில் அம்மாவுக்காக கலியாணம் செய்து விடுவது என்று தீர்மானித்தான். எப்படியாவது அம்மாள் பிழைத்தெழுந்தால் போதும்.

"அம்மா, உனக்காகத்தான் இப்போது கலியாணம் செய்து கொள்கிறேன், உன் மருமகள் யாராயிருந்தாலும் சரி, அதுவும் கூன், குருடு செவிடாக இருந்துவிட்டாலும் சரி. ஆனால் என் ஜோலிக்கே அவள் வரக் கூடாது. இது சத்தியம்" இந்த நிபந்தனையின் பேரில் கலியாணம் செய்து கொள்ள இசைந்தான். தாயாருக்கு ஒருவாறு மன ஆறுதல் ஏற்பட்டது. எப்படியாவது மருமகள் வந்த பின் பையன் தானகத் திருந்தி விடுவான் என்ற நம்பிக்கை பிறந்தது. அவளுக்கு உடம்பும் குணம் அடைந்தது.

கலியாணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் தடபுடலாக நடந்தன. தகப்பனாரும் பையன் இவ்வளவாவது திருந்தினனே என்ற உற்சாகத்தில் பணத்தை வாரி இறைத்தார். பெண்ணையும் ஊருக்கே கொண்டுவந்து கல்யாணம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. எங்கே அங்கும் இங்கும் போக வேண்டிய சமயங்களில் மத்தியில் 'கிறுக்கு' செய்துவிடுவானோ என்ற பயத்தினால்தான். இந்தக்கலியாணம் 'வேண்டாக் கலியாணம்' ஆகையால் தன் நண்பர்களுக்குக் கூட சுந்தரம் கடிதம் எழுதவில்லை.

கலியாணம் சிறப்பாகத்தான் நடந்தது. விருந்தும், வேடிக்கையும் பலமாகத்தான் இருந்தது. அதைவிட மாப்பிள்ளை கண்ணை மூடிக்கொண்டு, பெண்ணின் முகத்தைப் பார்க்கக் கூடாது என்ற வைராக்கியத்தில், வேதியர் ஓதிக் கொடுத்த தாலியை மற்றவர்களுடைய உதவியால் நெரண்டிக் கொண்டே கட்டி முடித்தான். கலியாணத்துக்கு வந்திருந்த எல்லோருக்கும் இதுதான் வேடிக்கையாக இருந்தது. பரிகாசமும் கூடச் செய்தார்கள்.

அவ்வளவு தான் தன் பொறுப்பு முடிந்து விட்டது. அம்மாவையும் அப்பாவையும் திருப்தி செய்தாகி விட்டது என்று எண்ணிக் கொண்டான். பழையபடி மாமூல் விவகாரத்தில் இறங்கி விட்டான்.

கலியாணத்துக்குப் பின் பெண்ணும் அங்கேயே தங்கிவிட்டாள். "கொஞ்ச நாளைக்கு அவனிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவனக உன்னை கவனிக்கும் போது பேசவேண்டும். அதற்குமுன் அவன் எதிரிலும் செல்லாதே" என்று மாமியார் மருமகளுக்கு உபதேசம் செய்திருந்தாள். ஆகையால் அவளும் தன் அறையே கதி என்றிருந்தாள். சுந்தரத்தின் எதிரிலேயே அவள் வருவதில்லை. ஒரு மாதத்திற்குப் பிறகு சதிபதிகளுக்குள் சமரசம் ஏற்படுத்த தாயார் முயற்சி செய்தாள்.

"என்னப்பா, சுந்தரம், ஒரு பெண்ணைக் கொண்டுவந்து வீட்டில் வைத்துக் கொண்டு, அவளிடம் பேச்சு வார்த்தை யாவது வேண்டாமா?" என கேட்டாள்.

"நல்ல வேலை. முதலில் கலியாணம் செய்து கொள்ளும் படி சொன்னீர்கள். உங்களுக்காகச் செய்து கொண்டேன். அதுவும் நிபந்தனையின் பேரில்! நீங்கள்

வேண்டுமானால் இஷ்டம் போல் மருமகளிடம் பேசிக்கொண்டிருங்கள்- என்காதில் இந்த விஷயங்களெல்லாம் விழக்கூடாது'' என்று தீர்மானமாக சொல்லி விட்டான்.

மருமகள் இந்தச் சங்கதியைக் கேட்டு பயந்தே போனாள். என்னடா கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே. இந்த மாப்பிள்ளையைத் தான் கட்டிக் கொள்வேன் என்று அப்பாவிடம் ஒரே பிடிவாதம் செய்தேனே? இவரையே கல்யாணம் செய்துகொள்வது இல்லா விட்டால் உயிரை விடுவது என்று முடிவு செய்திருந்தேன்! அப்பாவும் வேண்டா வெறுப்பாய் என் விருப்பப்படி 'பைத்தியத்திடம்' உன்னை ஒப்படைக்கிறேன் என்று கண்ணீர் விட்டாரே.

மாப்பிள்ளை ஒரே முறுக்காய் முறுக்குகிறாரே, அத்தை குறுக்கில்லா விட்டால் நானே கேட்டு விடுவேன். அதற்கும் ஒரு நாள் வரும் என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

அன்று முதலியாரும் அவர் மனைவியும் ஒரு விசேஷத்துக்காக அயலூர் போக வேண்டியிருந்தது. சுந்தரத்தை உத்தேசித்து முதலில் யாராவது ஒருவர் போவது என்று தீர்மானித்தார்கள். மறுபடியும் முக்கியத்தைக் கருதி இரண்டு பேரும் போய் விட்டு நாலு நாள் காரியத்தை இரண்டே நாளில் முடித்துக் கொண்டு வருவது என்று தீர்மானித்துக் கொண்டு கிளம்பினார்கள். அத்தை போகும் போதே மருமகளிடம், ''ரொம்ப ஜாக்கிரதை. அந்தக் ''கிறுக்கு'' உன்னை விரட்டினாலும் விரட்டிவிடும்' என்று சொல்லிப் போனாள். மருமகளும் சரி யென்று ஒப்புக் கொண்டாள். ஆனாலும் அத்தைக்கு திருப்திப் படவில்லை. வீட்டிலுள்ள அத்தனை வேலைக்காரர்களிடமும் தனியாக காரியஸ்தரிடமும் சின்ன எஜமானை கவனித்துக் கொள்ளும் விஷயமாக நீண்ட பிரசங்கம் செய்து விட்டுப் போனாள்.

அத்தையும், மாமனாரும் வீட்டை விட்டுப் புறப்பட்ட அரைமணி நேரத்துக்கெல்லாம் மருமகள் தன்னை நன்றாக அலங்காரம் செய்து கொண்டாள். கண்ணாடியின் முன் நின்று ஒரு மணி நேரம் தன்னைச் சரி செய்து கொண்டாள்.

வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் இதை கவனித்தார்கள். என்ன நடக்கப் போகிறதோ என்று எல்லோருக்கும் பயம். சின்ன எஜமானி அவர்களுக்கெல்லாம் தைரியம் சொல்லி விட்டு ''இன்று என் வாழ்க்கையின் முடிவை அதாவது 'இருப்பதா இறப்பதா' என்பதை நிர்ணயித்து விடுகிறேன்'' என்று எண்ணிக் கொண்டே 'விர்' ரென்று சுந்தரத்தின் அறையை நோக்கிச் சென்றாள். கதவுக்குப் பக்கத்தில் போனதும் சற்று தயங்கினாள். கதவு லேசாக மூடப் பட்டிருந்தது. கொஞ்சம் மனதை திடப்படுத்திக் கொண்டு, தைரியமாக கதவைத் தள்ளிக் கொண்டு உள்ப் பக்கம் ஓரடி எடுத்து வைத்தாள்.

சுந்தரம் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். திடீரென கதவு திறக்கப்பட்டதும் அந்த திசையில் திரும்பி பார்த்தான். எதிர் பாராத இந்த திடீர்த் தாக்குதல் அவனையே அதிரச் செய்தது. அவனுடைய கண்கள் ஆச்சரியத்தால் இமை கொட்டாமல் பார்த்தன! அவனுடைய வாய் 'யார்' என்று கேட்டது.

''யாரா? நன்றாயிருக்கிறது; நேற்று கை தொட்டு தாலிகட்டிய

பெண்டாட்டியை யாரென்று கேட்கும் லட்சணம்''

"நானு? உன்னையா? யார் சொன்னது. சந்திரனல்லவா உன்னைக் கட்டிக்கொண்டிருக்கவேண்டும். அவன் வந்திருக்கிருனு?''

"பேஷ்! ஏதோ கால் பைத்தியம் என்று எண்ணியிருந்தேன். இப்போது முழுப் பைத்தியம் என்று தெரிகிறது, இந்திரனும் சந்திரனும்''

"என்னேடிருந்தானே அந்த நண்பனைத்தான் சொல்கிறேன், அவனைத்தானே காதலித்தாய்''

"அதென்ன கதை?''

"கதையா?'' என்று சொல்லிக் கொண்டே தன் பெட்டியிலிருந்து ஒரு கடுதாசித் துண்டை எடுத்து வந்து மரியாதையாக நீட்டி, "இது தாங்கள் எழுதியதுதானே?'' என்று கேட்டான்.

"ஆமாம்'' என்ருள் புதுப் பெண்.

"பின்னே?''

"இன்னெரு தரம் படித்துப் பாருங்கள்''

சுந்தரம் உரக்கவே படித்தான்:

அன்புள்ள சகோதரரே,

"நான் தங்கள் நண்பரைக் காதலிக்கிறேன். உங்களுக்கிடையே வித்தியாசம் ஏற்படக்கூடாது என்பதற்காக முன் கூட்டியே அறிவித்து விடுகிறேன்.

தங்கள் பிரிய சகோதரி

சுந்தரி

அன்று உங்கள் நண்பர் மட்டும் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு அடிக்கடி எங்கள் வீட்டுப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். நீங்கள் இல்லைப்போல் இருந்தது நான் உங்களைக் காதலிக்கும் விஷயத்தை அவருக்குத் தெரிவித்து விட்டால் அவர் அடிக்கடி பார்ப்பதை நிறுத்துவார் என்பதற்காக அவருக்கு அனுப்பினேன். நீங்கள் மத்தியில் இருந்து வாங்கிக் கொள்வீர்கள் என்பதை நான் கனவிலும் கருதவில்லை. அந்தப் பெண்ணையும் விசாரித்துத் தெரிந்து கொள்ளவுமில்லை.

"பிறகு''

"கட்டிய பெண்டாட்டியை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை'

"ஐயோ சுந்தரி!''

"சரி, போதும். என்னையும் பைத்தியமாக அடித்து விடாதீர்கள். உங்கள் நண்பரைக்கூட கலியாணத்திற்கு அழைப்பதாகச் சொல்லியிருந்தேன்.''

"இப்போதே தந்தி அனுப்புகிறேன்.''

காரியஸ்தரைக் கூப்பிட்டு உடனே தந்தி எழுதி அனுப்பினுன்.

காரியஸ்தன் அதோடு இன்னெரு நீண்ட தந்தியும் பெரிய எஜமானருக்கு அனுப்பினுன்: "நீங்கள் இரண்டு தினங்களில் திரும்ப வேண்டிய அவசியமில்லை. இரண்டு மாதங்கள் வேண்டுமானுலும் இருந்து விட்டு வாருங்கள்!'',

★

மனோச்சித்திரம்:

பயம்

ரா. அ. பத்மனாபன்

விழுப்புரம் பாஸஞ்சர் ஊவென்று அலறிக்கொண்டு கிளம்பியது. ஏதோ யோசனையிலிருந்த பாலு வெளியே எட்டிப் பார்த்தான். ரயில் அப்போதுதான் திட்டை ஸ்டேஷனைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. கையெழுத்து மறையும் அந்த அந்தி வேளையில் தொலைவில் வயல்களுக்கு நடுவே மினுக் மினுக்கென்று விளக்குகள் தெரிந்தன. தன் பாச வலையில் உலகை அணைத்துக் கொள்வதே போல் இருள் சூழ்ந்து வர, புகை போன்றதொரு வெண் பனியும் போர்வைபோல் போர்த்துக் கொண்டு வந்தது. இந்த இயற்கைக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்த பாலு தன்னையு மறியாமல், "ஆஹா!" என்றான். அப்போதுதான் அந்த ரயிலில் தன்னைத் தவிர இன்னொரு பிரயாணியும் இருப்பதை கவனித்தான்.

விழுப்புரம் பாஸஞ்சர் திட்டை ஸ்டேஷனில் வந்து நின்ற சமயம் பாலு இருந்த வண்டி காலி. அப்படியானால் அந்தப்பிரயாணி திட்டையில்தான் ஏறியிருக்க வேண்டும். ஆனால் அவன் ஏறியது தனக்குத் தெரியவில்லையே! அவன் எப்போது ஏறினான்? எப்படி ஏறினான்? ஏன் அப்படி சப்தமில்லாமல் ஏற வேண்டும்? பாலுவின் மனதில் இக்கேள்விகள் உழன்றன. மடியில் கனமிருந்தால் வழியில் பயம் என்பார்கள். பாலு பயப்படக் காரணம் இருந்தது. அவன் மடி கனம் தான்!

அவனையுமறியாமலே பாலுவின் கை அவனது மடியில் சென்றது. கவலையோடு தடவிப் பார்த்தான். மணிபர்ஸ் அப்படியே இருந்தது. நல்லது இதுவரை, தான் ஏமாற வில்லை.

பாலுவுக்கு இவ்வாறு பயம் எழக் காரணம், பண விஷயங்களில் அவனுக்கு அதிக ராசி இல்லை என்பதுதான். "நாலுரூபாயை கவனமா வைச்சுக்கத் தெரியாதவன்! இவனெல்லாம் எப்படிக் கச்சேரி செய்து நாளைக்குப் பிழைக்கப் போகிறானே!" என்பார் பாலுவின் மாமா சேஷு பாகவதர்.

பாலுவின் மாமா சேஷு பாகவதர் என்றதுமே, பாலு யார் என்று தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஆம், அவனேதான் ரேடியோவிலும் கச்சேரிகளிலும் தமிழ் நாட்டு ஜனங்கள் ஆர்வத்துடன் கேட்கும் குளித்தலை பாலுவேதான். 'மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை பாணியில் அபூர்வமாய் வாசிக்கிறான்" என்று பிரபல சங்கீத விமர்சகர்களும் விற்பன்னரும் போற்றும் அதே பிடில் பாலுதான். திருச்சியில் ஒரு அமோகமான கச்சேரி செய்துவிட்டு இன்னொரு கல்யாணக் கச்சேரிக்காக விழுப்புரம் பாஸஞ்சரில் போய்க்கொண்டிருக்கிறான்.

திருச்சிக் கச்சேரியில் வாங்கின பணம் செலவு ஆனது போக நூற்று எழுபத்தைந்து ரூபாய்—அவன் மடியில் கனக்கிறது.

வண்டியில் உட்கார்ந்திருந்த ஆசாமியை கவனிக்க கவனிக்க, பாலுவின் பயம் அதிகரித்தது. அந்த ஆசாமி, அசல் முரட்டுப் பேர்வழி. தடித்த உதடுகள், சப்பை மூக்கு, உருளும் விழிகள், சுருட்டை மயிர், முரட்டுத் தலை, வாட்ட சாட்டமான உருவம்தான். கவலை தராமல் என்ன செய்யும்? ஆனால், அந்த ஆசாமியின் முரட்டு சுபாவத்துக்கு நேர் மாருக வெள்ளை மல் துணியில் ஷர்ட் அணிந்திருந்தான். அரையிலும் மெல்லிய வேஷ்டி. கொலைகாரனிலும் கொலையே தொழிலாய்க் கொண்டவன் போல் தோற்றமளித்தான், அவன்!

இவ்வளவுக்கும் பாலு அவனை நேரடியாய் பார்க்கவில்லை; பார்க்க தைரியமில்லை. ஒரு தடவை அந்த ஆள் இருக்கும் பக்கம் பாலு திரும்பிய சமயம், அந்த ஆளும் பாலுவின் பக்கம் திரும்பினன். ஒரு கணம் இருவர் கண்களும் சந்தித்தன. பாலு சட்டென்று வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். கூட இருந்தவனது கண்களின் ஆழத்தில், விரும்பத்தகாத ஒரு 'ஜொலி'ப்பைக் கண்டான் பாலு.

வண்டியில் இருந்த அந்த ஆசாமி ஏன் கெட்டவனுய்த்தான் இருக்க வேண்டும்? வெளிப்பார்வைக்கு மட்டும் அம்மாதிரி இருந்து உண்மையில் நல்லவனுய் இருக்கக் கூடாதா? இவ்வாறெல்லாம் சமாதானம் சொல்லிக் கொண்டு பார்த்தான். மனம் திருப்தியடையவில்லை. நேரமோ இருள் சூழும் நேரம். ரயிலோ நிசப்தமான ஸ்டேஷன்கள் வழியாய்ச் சென்றுகொண்டிருந்தது. பாலு இருந்த வண்டியிலோ இவர்கள் இருவரைத்தவிர வேறு எவரும் இல்லை. சிறு சிறு அறைகளாய்த் தடுக்கப் பட்டிருந்த அந்த வண்டியில் இவர்கள் இருந்த அறை தவிர மற்ற அறைகளெல்லாம் காலி. வண்டியின் கதவுகள் கூட திறந்து கிடந்தன. எங்கோ ஒரு கதவு அடிக்கடி தடார் தடாரென்று அடித்துக் கொண்டது.

மனதை பெரியவர்கள் ஒரு குரங்குடன் ஒப்பிட்டிருக்கிருர்கள். பாலுவின் மனம் அதற்கு சிறந்த உதாரணமாக இப்போது விளங்கியது. கதவு அடித்துக் கொள்ளும் ஒவ்வொரு தடவையும் தன்னை யாரோ கன்னத்தில் அறைவது போல் அவனுக்குத் தோன்றியது. எழுந்துபோய் கதவை மூடித்தாளிட்டு வரலாமா என்று நினைப்பான். ஆனல் எழுந்துபோக பயம். கட்டுண்ட நாகம்போல் தான் இருந்த இடத்திலேயே இருந்தான்.

பாலுவின் மனதிலுள்ளதை அறிந்தவன் போல, அந்த ஆசாமி உடனே எழுந்துபோய் கதவை மூடித்தாளிட்டு வந்தான். இது பாலுவின் கிலேசத்தை அதிகரித்தது. கதவு அடித்துக் கொண்டிருந்ததாவது கவனத்தை வேறு பக்கம் இழுக்க உதவியாயிருந்தது. இப்போதோ கவனம் முழுவதும், "அவன் யார்? எங்கே போகிருன்? எப்படிப் பட்டவன்? ஏன் பேசாமல் வருகிருன்?" என்ற கேள்விகளிலேயே ஈடுபட்டது.

பாலுவுக்கு திடீரென இன்ஞெரு சந்தேகம் தோன்றியது. "அந்த ஆசாமி நம்மைக் கண் வைத்துவிட்டான்! நம் கையிலுள்ள வைரமோதிரம் வைர சங்கிலி, காதிலுள்ள கடுக்கன் எல்லாவற்றையும் கவனித்துத்தான், இந்த வண்டியில் ஏறியிருக்கிருன்!" என்ற எண்ணம் அப்போதுதான் உண்டாயிற்று. பாலு எப்போதுமே அலங்காரப் பிரியன். சாதாரணமாகவே வண்ணன் மடிப்புக் கலையாத ஸில்க் ஷர்ட்டும் விசிறி மடிப்பு நீங்காத ஜரிகை

அங்க வஸ்திரமும் தைலமிட்டு அழகாய் வாரி முடிந்த கட்டுக் குடுமியும், வாசனை தூக்கியடிக்கும் ஜவ்வாதுப் பொட்டும் கொண்டவன். அன்று கச்சேரி வேறு? மழமழவென்றிருந்த அவனது முகம், பவுடர் வாசனைதிகளால் இன்னும் அதிக கவர்ச்சியுள்ளதாய் விளங்கிற்று. கலைத் தொழிலல்லவா? பிரகாசமாய் இருப்பது அவசியமாயிற்றே!

இவ்வளவையும் வண்டியில் உள்ள அந்த ஆசாமியும் கவனித்துக் கொண்டே வருகிறான் என்பதை நினைக்க பாலுவுக்கு 'பகீ' ரென்றது. ரயில் திருட்டுகளில் அவனுக்கு அதிக நம்பிக்கை இருந்ததில்லை. பொழுது போக்குக்காக எழுதப்பட்டவை என்று, அலட்சியமாய் படித்தவுடனேயே மறந்து விடுவான். ஆனால் இப்போதோ தான் படித்துள்ள ரயில் கொள்ளைச் செய்திகளும் திடுக்கிடும் சம்பவங்களும் அவனுக்கு ஞாபகம் வந்தன. சிந்து மாகாணத்தில் நடந்துள்ள பல ரயில் கொள்ளைகள் அவன் நினைவில் தோன்றின. மற்றும் அவ்வப்போது—ஏன், சமீபத்தில் நடந்த பல பயங்கரச் செய்கைகளும் மனசில் சுழித்தது.

இவையெல்லாம் ஞாபகம் வர வர பாலுவுக்கு உள்ளூர நடுக்கம் கண்டுவிட்டது. இன்று நாம் பிழைப்பது சந்தேகம் என்று தீர்மானித்துக் கொண்டான். வண்டி அடிக்கொரு தடவை நிற்கிறது என்று கொஞ்ச நேரத்துக்கு முன் ஆத்திரப்பட்டவன் இப்போது ஏதாவது ஒரு ஸ்டேஷனில் நிற்காதா, யாராவது அந்த வண்டியில் ஏறமாட்டார்களா என்று ஆவலோடு பார்த்தான். ஆனால் அவனுடைய கெட்டகாலம் வழக்கமாய் கூட்டம் நிரம்பி வழிந்தோடும் அந்த ரயிலில் அன்று ஏனோ கூட்டமே இல்லை! எல்லாரும் இறங்கிக் கொண்டிருந்தார்களே ஒழிய, ஏறுவோர் மிகக் குறைவு. மேலும் பாலு இருந்தது ரயில் கடைசி வண்டியாதலால் அதில் யாரும் ஏறவேயில்லை. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் பிளாட் பாரத்தின் ஒரு கோடியில் ஸ்டேஷன் பெயர் பலகைக்கும், முணுக் முணுக்கென்று எரியும் லாந்தர் விளக்குக்கும் எதிரே வண்டி நிற்கும்போதெல்லாம் பாலு தன் முட்டாள் தனத்தை நினைத்து நொந்து கொண்டான். கடைசி வண்டியில் ஏறுவோம், கூட்டம் அதிகம் இராது என்று நினைத்து ஏறியது இப்போது பேராபத்தாய் முடிந்துவிட்டதே! வேறு வண்டிக்குப் போகலாமென்றாலோ சாமான்களை இறக்கி மாற்றக்கூடிய நேரம் ஒரு ஸ்டேஷனிலும் நிற்பதில்லை. எல்லாம் சிறு ஸ்டேஷன்கள். ரயில்வே அட்டவணையில் "சேர்" "புற" என்று போடாமல் ஒரே லக்கம் போடப்படும் ஸ்டேஷன்களே.

பாலுவின் கவலையை நீக்கும் ஒரு சம்பவமும் நடுவில் நடந்தது. தனக்குள் ஏதேதோ யோசனையில் ஆழ்ந்திருந்த பாலு சட்டென்று பார்த்தபோது எதிர் சீட்டில் இருந்த ஆசாமியைக்காணவில்லை. மாயமாய்த் தோன்றி மாயமாய் மறைந்துவிடும் குணமுள்ளவனா, என்ன! ஒரு வேளை பேயோ பிசாசோ? சற்றுமுன் இங்கே இருந்தான் அதற்குள் காணவில்லையே!

பாலுவின் இந்த எண்ணத் தொடரைக் கலைத்தது ஒரு சப்தம். வண்டியின் கதவுக்குப் பின்னாலிருந்து வெளியே வந்தான் அந்த ஆசாமி. கதவிடுக்கில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானோ?

விழுப்புரம் பாஸஞ்சர் கூவென்று மறுபடி நீட்டி முழக்கிக் கத்தியது. வழக்கமாய்

திணறித் திணறி ரயிலை இழுத்துச் செல்லும் எஞ்சின், இன்று குதித்துக் கொண்டு ஓடுவதுபோல படபடவென்று சப்தம் செய்து கொண்டு ஓடிற்று. பாலு ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்தான் இரண்டு பர்லாங்குக்கு அப்பால் ஒரு பாலம் வந்து கொண்டிருந்தது பாலு எட்டிப் பார்த்துவிட்டு மறுபடி தன் இடத்தில் உட்காருவதற்குள் எதிரே இருந்த ஆள், ஸீட்டின் மறு கோடியிலிருந்து பாலுவுக்கு எதிரே வந்து உட்கார்ந்து கொண்டான். பாலுவுக்கு தூக்கி வாரிப் போட்டது. திடீரென இவன் இப்படிப் பக்கத்தில் உட்காருவானேன்? நம் வயலினை எடுத்து கொண்டுவிடுவானோ? வருவதோ ஒரு ஆற்றுப் பாலம் நாமோ தனி. கை, காதிலோ வைரங்கள். ஆளோ முரடன். நம் நகைகளை எடுத்துக் கொண்டு நம்மை அப்படியே குண்டுக் கட்டாய் ஆற்றில் தூக்கிப் போட்டாலும் கேட்பாரில்லையே! கூப்பாடு போட்டாலும் ஏனென்று கேட்க பின்னல் வண்டிகள் கிடையாது; இதுவே கடைசி 'கம்பார்ட்மெண்ட்.' இந்த சங்கடத்துக்கு என்ன செய்வது?

மனிதனுக்கு ஆபத்துக் காலத்தில் தான் அபூர்வமான யோசனைகள் தோன்றுகின்றன. தனிமையின் கவலையால் பீதியடைந்த பாலுவுக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றிற்று. மேல் தட்டிலிருந்த வயலின் பெட்டியை திறந்தான். வாத்தியத்தை எடுத்தான். சுருதி கூட்டி வாசிக்க ஆரம்பித்தான். "பராமுகம் ஏனையா" என்ற கீர்த்தனையை என்றுமில்லாத பாவத்துடன், உணர்ச்சி ததும்ப வாசித்தான். வயலின் நாதத்தோடு அவன் வாயும் அடிக்கடி அந்த பாட்டின் பல்லவியை மந்திரம் போல் உச்சரித்தது. எந்தக் கச்சேரியிலும் அவன் அவ்வளவு சிரத்தையுடன் வாசித்திருக்க மாட்டான். எந்தக் கச்சேரியிலும் அவ்வளவு நன்ருக அமைந்ததுமில்லை. ரயில் ஆட்டத்தின் நடுவில், இரைச்சலின் இடையில் எழுந்த கீதம் அவன் இதயத்தின் ஆழத்திலிருந்து எழுந்து, அந்த வயலின் நரம்புகள் வழியாய் பிரவகித்தது.

ஆனல் என்ன வாசித்து என்ன பயன்! காட்டில் அலர்ந்த மலரின் மணம் போல, அவனது சங்கீதம் காற்ருேடு காற்ருய் கலந்து மறைந்ததே தவிர அவனுடைய மனதில் சந்துஷ்டி ஏற்படவில்லை. வண்டியில் புதிதாய் யாரும் ஏறும்படி செய்யவுமில்லை. "சை, என்ன துரதிர்ஷ்டம்! என் வாத்திய நாதத்தைக் கேட்டாவது யாரேனும் இந்த வண்டியில் ஏறக்கூடாதோ!" என்று வருந்தினன். மறுகணம் "இல்லை, ஏதோ பிச்சைக்காரன் தான் வாசிக்கிருன் என்று நினைத்து ஏருமல் இருந்து விட்டார்கள் போலிருக்கிறது. யாருமே இந்த வண்டியில் ஏறவில்லை!" என்று நினைத்தான் இருந்த போதிலும் விடாமல் வாசித்துக் கொண்டேயிருந்தான்.

பாலு எவ்வளவு நேரம் இவ்வாருக கச்சேரி செய்தானே, அவனுக்கே தெரியாது. ஆனல் அவன் வாசித்துக் கொண்டிருக்கும் போதே அவன் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்துவிடவே, ஒரு பெரிய கச்சேரியில் பாரம் நீங்கினவன் போல் சந்தோஷமடைந்தான்.

சுந்தரபெருமாள் கோயில் திருச்சி ஜங்ஷனல்ல என்பது பிரசித்தமான விஷயம். பாலு அதை நேரில் உணர்ந்தான். அந்த சிறு ஸ்டேஷனில் வாடகை வண்டிகளே இல்லை. அகஸ்மாத்தாய் ஒரே ஒரு ஒத்தை மாட்டு வண்டி வந்திருந்தது.

"என்னப்பா, வண்டி வருகிறாயா?" என்று கேட்டான் பாலு.

"இல்லைசாமி இப்பத்தான் ஐயா பேசிட்டாங்க" என்றான் வண்டிக்காரன்.

"ஐயா" வேறு எவருமில்லை. ரயிலில் தன்னுடன் வந்த ஆசாமியே என்பதை அறிந்ததும் பாலுவுக்கு என்ன உணர்ச்சிகள் ஏற்பட்டிருக்கும் என்பதை வர்ணிக்கத் தேவையில்லை.

"என்ன ஸார் நீங்களும் ஏறிக்கொள்கிறீர்களா? உங்களுக்கும் தான் வண்டி பேசினேன். இந்தாப்ப, அவருடைய பெட்டி படுக்கையையும் இப்படி வை" என்று அந்த ஆசாமி சுவாதீனத்துடன் சொல்லவே பாலுவின் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. தனி வழியில் கொண்டுபோய் தன் கழுத்தைத் திருகிப் போடவா?

"இல்லை ஸார் நான் வேறு வண்டி பார்த்துக்கொள்கிறேன்."

"வேற வண்டியா? இங்கே நாளை தினம் பூராவும் இருந்தால் கூட வண்டி கிடைக்காதே!" என்றான் அந்த ஆசாமி, ஒருமாதிரி புன் சிரிப்புடன்.

"இல்லை ஸார் பாதகமில்லை" என்று தட்டிக் கழிக்கப் பார்த்தான் பாலு. அதற்குள் ஸ்டேஷன் மாஸ்டர் அங்கே வந்தார். பாலுவுடன் இறங்கியவரைப் பார்த்து, "என்ன சாம்பசிவம் பிள்ளை, கல்யாணம் வெகு தடபுடல்போலிருக்கிறது! கச்சேரியில் வயலின் வாசிப்பவரை கையோடு கூட்டிக்கொண்டு வந்துவிட்டீரே! காரியஸ்தர் என்றால் நீர்தானய்யா காரியஸ்தர்" என்றார்.

பாலுவின் விழிகள் ஆச்சர்யத்தால் விரிந்தன. "இவரா......இவர் தானா......மிட்டாதாருடைய காரியஸ்தர்?" என்று தடுமாறினான் அவன்.

அழகியின் ஆசை

ஆர். சரஸ்வதி

"அந்தக் காலத்தில் சுதாவின் பெயர் அடிபடாத இடம் கிடையாது. அற்புதமான அவள் இன்ப கீதத்தைக் கேட்க ஜனங்கள் திரள் திரளாகக் கூடுவார்கள். அழகிலும் அவளுக்கு ஈடு இணை கிடையாது" என்று மாமா அடுக்கிக்கொண்டே போனார்.

நான் குறுக்கிட்டு, "அந்த சுதா இப்பொழுது இருக்கிறாளா மாமா?" என்று ஆவலுடன் கேட்டேன்.

மாமா ஒரு தரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "அது பெரிய கதை. கேளம்மா சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்தார்.

* * *

குருப்பட்டி கிராமத்தை நீ பார்த்ததில்லை. இயற்கை அன்னையின் கண் போன்றிருக்கும். ஊரின் இரு பக்கமும் சல சல வென்றோடும் ஆறு. சுமார் முப்பது வீடுகளுக்கு மேலிராது. இந்த முப்பது வீடுகளிலுள்ளவர்களெல்லோரும் நல்ல பணக்காரர்கள். இதைத் தவிர குடியானவர்களின் குடிசைகள்தான் ஊரின் எல்லைகளாக அமைந்திருந்தன.

வள்ளி ஒரு விதவை. வீட்டு வேலை செய்து பிழைத்து வந்தாள். அவளுடைய ஒரே ஒரு செல்லப் பெண்தான் சுதாமதி. குடியான வம்சத்திலேயே, என் அந்தக் கிராமத்திலேயே சுதாவைப் போன்ற அழகிய பெண் கிடையாது. வள்ளிக்கு அவள் இனத்தாரிடம் ஆதரவு கிடையாது. ஏனெனில் அவள் நடத்தை கெட்டவளென்றும், முருகன்-வள்ளியின் கணவன், அவளை எங்கிருந்தோ இழுத்துக் கொண்டு வந்துவிட்டானென்றும் அவளைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளுவதில்லை. சுதாமதி என்ற அழகிய, தங்களுக்கு நூதனமாகத் தோன்றும் அந்தப் பெயரும் மற்றவர்களுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஆனால் வள்ளி எதற்கும் மௌனமாகப் போய் விடுவாள். கடைசியில் அவளுடைய பொறுமையே அவளுக்கு எமனாகி வந்து விட்டது. மனதிலேயே துக்கத்தை அடக்கி வைத்ததினால் அது அவளை எழுந்திராத படுக்கையில் போட்டு விட்டது.

அன்று அடுத்த ஊரில் மாரியம்மன் திருவிழா. திருவிழா பார்க்க குடியானப் பெண்களும், ஆண்களும் போய் விட்டார்கள். ஏழை சுதாவை யார் அழைத்துக் கொண்டு போவார்கள்? வள்ளியோ எமனுடன் போராடிக் கொண்டிருக்கிறாள். திருவிழாவுக்குப் போகவில்லையே என்ற ஏக்கத்துடன் சுதா தாயின் அருகில் அமர்ந்திருந்தாள். பாவம், ஆறு வயது சிறுமிக்கு மரணத்தைப் பற்றி என்ன தெரியும்? "ஐயோ, கடவுளே! என் பொண்ணை அனாதியாய் சந்தியில் விட்டிட்டு போறேனே"' என்று வள்ளி பரிதாபமாய் புலம்பினாள்.

"எங்கே அம்மா போப்போறே?" என்றாள் சுதா.

சுதாவை அன்னை அணைத்துக் கொண்டாள். "நான் எங்கேயும் போகிலே கண்ணே, தூங்கப் போறேன்!" என்றாள்.

நேரமாக ஆக அவளுடைய திகில் அதிகமாய் விட்டது. கடைசியில் ஒரு ஆறுதலும் இன்றி தன் அருமைப் பெண்ணை நடுச் சந்தியில் விட்டு விட்டு வள்ளி பரலோகம் போய் விட்டாள்.

தன் தாய் அங்கு தூங்குகிறாள் என்று நினைத்துக் கொண்டு சுதா அவளுக்கு விசிறிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது, "அம்மே! கொஞ்சம் பச்சைத் தண்ணி இருந்தா ஊத்து" என்று ஒருத்தி சொல்லிக் கொண்டே வாயிற்படி அருகே வந்தாள். சுதா ஓடிச் சென்று பார்த்தாள். வந்தவளும் சுதாவைக் கண்டு திடுக்கிட்டாள். இவ்வளவு அழகிய பெண்ணை அவள் தன் தேசத்தில் கூடப் பார்த்ததில்லை.

வந்தவள் ஒரு காபூலிக் குறத்தி. அவள் என்ன நினைத்துக் கொண்டாளோ. சட்டென்று சுதாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "பாப்பா, நீ வரயா, வேடிக்கை பாக்க போகலாம்" என்று வெகு அன்பாகக் கூப்பிட்டாள். சுதாவும் குதூகலத்தோடு அவள் கையைப்பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

ஆனால் அவள் திருவிழாவுக்குப் போகவில்லை. ஊருக்கு வெளியே அடிக்கப்பட்டிருந்த காபூலிக் கூட்டத்தின் கூடாரத்தை நோக்கிச் சென்றாள். அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்த ஒரு கூடாரத்துக்குள் சுதாவை அழைத்துச் சென்றாள். அங்கு உன்னதமான ஆசனத்தில் வீற்றிருந்த ஒருவனிடம் சுதாவைத் தூக்கிக் கொடுத்து, "சோதரா, நம் தலைவி இறந்த வருத்தத்தை விட்டொழி, நமக்கு ஒரு தலைவி கிடைத்து விட்டாள்" என்று குதூகலத்துடன் கூத்தாடினாள்.

அடுத்த ஒரு மணிக்குள் அந்த இடம் வெறும் மைதானமாகப் போய் விட்டது. கூடாரங்களைப் பிடுங்கிக் கொண்டு அந்தக் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

நாளடைவில் சுதா தன் தாயை மறந்தே விட்டாள்.

* * *

காபூலிக் கூட்டத்தாரின் முக்கியத் தொழில் வியாபாரம். அற்புதமான பொருள்களை அவர்களிடம் காணலாம். சுதாவின் கூட்டத்தார் வியாபாரத்தைத் தவிர இன்னொரு விதத்தில் பணம் சம்பாதித்தார்கள். அது சுதாவின் மூலமாகத்தான். அவர்கள் எந்த ஊரில் தங்கியிருந்தாலும் சரி,

கூடாரத்தின் முன்பு அழகிய ஒரு மேடை அமைப்பார்கள். மாலை வேளையில் சுதா அழகாக அலங்கரித்துக் கொண்டு மின்னலைப் போல் அம்மேடையில் தோன்றுவாள். குயிலினு மினிய குரலில் இந்துஸ்தானி பாடல்களைப் பொழிவாள். இதைக் கேட்டு ஆனந்திக்க ஏராளமான பேர் கூடுவார்கள். பாட்டு முடிந்ததும் பட்டுப் பூச்சியைப் போல் பறந்து விடுவாள். முன்னால் வைத்திருக்கும் தட்டில் கணக்கில்லாத தங்க நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் வந்து குவியும். ஆனால் அந்த நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சுதாவை ஒருவராலும் காணமுடியாது. கொஞ்ச நாளில் நாடெங்கும் காபூலிக் கூட்டத்து தலைவியின் புகழ் பரவி விட்டது.

சுதாவின் வாழ்க்கைப் புயல் ஆரம்பித்த இடம் பொதிய மலைச் சாரலில்தான்.

ஒரு நாள் மாலை ஒரு அழகிய வெண்புரவியின் மேல் அந்தச் சுந்தரி அலட்சியமாய் உட்கார்ந்து கொண்டு பொதிய மலைச் சாரலின் இனிய காற்றை சுவாசித்துக் கொண்டே சென்று கொண்டிருந்தாள்.

திடீரென்று ஒரு அசாதாரணமான குரலைக் கேட்டு அவள் திடுக்கிட்டாள். ஆனால் மறு நிமிடம் சப்தம் வந்த திக்கை நோக்கி குதிரையைச் செலுத்தினாள். சிறிது நேரத்தில் அவள் முன் ஒரு கோரமான காட்சி தென்பட்டது. ஒரு அழகிய வாலிபனை நான்கு பேர் வளைத்துக் கொண்டிருந்தார்கள். அவள் ஒரு கணம் தாமதித்து இருந்தாளானால் வாலிபனின் வாழ் நாள் முடிந்து போயிருக்கும். சுதா சட்டென்று தன் மார்பில் சொருகியிருந்த 'பிஸ்த'லை எடுத்து 'பட் பட்'டென்று அவர்களின் கால்களை நோக்கிச் சுட்டாள். திருடர்கள் ஓட்டம் பிடித்தார்கள். எட்டு முறை சுட்டாள். ஒன்பதாவது முறை சுடும்பொழுது அவள் கை நடுங்கி விட்டது. குறி தவறி ரவை வாலிபனின் வலது காதைத் துளைத்துக் கொண்டு சென்றது.

(நான் குறுக்கிட்டு "மாமா" என்றேன். சட்டென்று மாமா, "பேசாமல் முழுவதும் கேளம்மா" என்றார்)

வாலிபன் மயங்கி கீழே விழுந்தான். சுதா சட்டென்று குதிரை மேலிருந்து குதித்து, அந்த வாலிபனுடைய தலையைத் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டாள். காதிலிருந்து 'குபு குபு'வென்று ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. தன் தாவணியின் தலைப்பைக் கிழித்து ரத்தத்தைத் துடைத்தாள். சில பச்சிலைகளைப் பறித்து கசக்கி சாற்றை அவன் வாயில் பிழிந்தாள். வேறு சில பச்சிலைகளைப் பறித்து காதில் வைத்துக் கட்டினாள். கொஞ்சங் கொஞ்சமாக வாலிபனின் மயக்கம் தெளிந்தது. சிறிது நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு படுத்திருந்தான். பிறகு மெதுவாக எழுந்திருந்து உட்கார்ந்தான். சுதாவின் மௌனத்தைக் கண்டு பொறுமையை இழந்தவனாய் அவளை நோக்கி "ரொம்ப அழகாகச் சுட்டீர்கள்! என்னையும் கொன்று விட நினைத்தீர்கள் போலும்" என்றான்.

சுதா மெல்லச் சிரித்தாள். என்ன நன்றி கெட்ட தனம்! என்று நினைத்தாள் போலும். அவளுடைய கருவிழிகளில் தேங்கிக் கிடந்த ஏக்கம் வாலிபன் மனத்தை கொள்ளை கொண்டது.

"என் சிரிக்கிறீர்கள்?"

சுதா ஒன்றும் பேசாமல் எழுந்திருந்து குதிரையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"ரொம்ப பேஷ்! ஒரே அடியாய் கொன்றிருந்தாலும் நன்றாயிருக்கும். பாதி உயிரோடு நடுக்காட்டில் திக்கில்லாமல் விட்டுச் சென்றால் நான் என்ன செய்வேன்! மறுபடியும் கள்ளர் கையில் அகப்பட்டுச் சாகவேண்டுமா?'' என்று பரிதாபமாய்க் கேட்டான் அந்த அழகிய வாலிபன்.

சுதா திரும்பி ஒரு சிரிப்புச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் தன் நெஞ்சையே பறிகொடுத்தான் வாலிபன். சிறிது நேரத்தில் அவ் வாலிபனை இடது கையால் அணைத்த வண்ணம் குதிரையில் மறைந்து போனாள் அக்கட்டழகி.

சுதாவின் கன்னியுள்ளத்தில் காதல் பிறந்தது. நாளுக்கு நாள் வாடினாள். தளிர் போன்ற தங்க நிற மேனியில் தவிப்பின் சாயை லேசாகப் படர்ந்தது. அரும்பிய மொக்கு போன்ற அவளுடைய அதரங்கள் எதையோ நோக்கி துடித்தன. மைதீட்டிய மருள் விழிகளில் மையல் பொங்கிற்று. இளம் மலர் ஒன்று காலை ஒளியில் குளிப்பதற்கும், தென்றலில் அசைந்தாட விரும்புவது போலவும், அவளும் விவரிக்க முடியாக் கிளர்ச்சியில் தத்தளித்தாள். தலைவன், (சுதாவின் வளர்ப்புத் தந்தை) வழக்கம் போல் அவளை மகிழ்விக்க முயன்றான். ஆனால் அது முடியவில்லை. அவனால் எப்படி அவள் சோகத்தின் காரணத்தை அறிய முடியும்?

காதலர்கள் தனிமையாய் காடுகளிலும், பள்ளத் தாக்குகளிலும், சில சமயம் அருவிக்கு அருகேயுள்ள குன்றுகளிலும் அமர்ந்து வார்த்தையாடுவார்கள். கனவு உலகில் சஞ்சரிப்பார்கள். கற்பனை மாளிகை நிர்மாணித்தவண்ணமிருந்தார்கள்.

ஒரு நாள் காதலன் தன் வரலாற்றைச் சொன்னான். அவன் ஒரு தனவந்தன் என்று கூறிக் கொண்டான். அவன் பெயர், ஆம்—தன் பெயர் சந்திரன் என்று தெரிவித்தான். கடைசியில் அவளை நோக்கி, "என்னருமை சுதா, உன்

பெற்ருேர் யார்? நீ வாஸ்தவத்தி லேயே காபூலிக் குறத்தியா?'' என்று கேட்டான்.

அவள் மனம் கலங்கினுள். கலங்கிய கண்களோடு, ''எனக்குத் தாயில்லே, தந்தையில்லே. எனக்கு ஒருவரும் இல்லே. நான் குறக்குலத்தில்தான் வளர்ந்தேன். காபூலிகளின் தலேவியாகவேகாலங் கழிப்பேன். உங்களுக்குச் சுதந்திரம் உண்டு. எனக்குக் கிடையாது. நான் பலவித சத்தியங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கிறேன். விரைவில் நீங்கள் உங்கள் ஊர்போய் சுகமாக காலங்கழிக்க வேண்டுமென்பதே என் விருப்பம்'' என்ருள்.

''எனக்கும் தான் பெற்ருேர் இல்லே. சுதா, உன்னேப் பிரிந்து நான் உயிர் வாழ முடியுமா?'' என்ருன்.

இரவில் நெடுநேரத்துக்குப் பின் அவர்கள் பிரிந்து சென்றனர்.

காதலர்களின் காதற்கதை வளர்ந்து கொண்டே போயிற்று. காபூலிகளுக்குள் 'கசமுச' வென்று பேச்சு பரவிற்று. சுதாவின் நடத்தையைக் கவனமாகக் கவனிக்கத் தொடங்கினுர்கள்.

சரத்காலம். உலகத்தையே வெள்ளி மயமாக்கிக் கொண்டிருந்தான் பூரண சந்திரன். எங்கோ ஒரு குயில் தன் இனிய குரலில் கீதம்பாடி நாதனேக் கூவியழைத்தது. காடுகளின் பசுமையும், பொலிவும் உள்ளத்தை வசீகரித்தது. அன்பு, காதல் இவைகளுக்கெல்லாம் துலாம்பரமாக விளக்கம் தருவதுபோல் இயற்கையின் பசும் கை நீண்டு படர்ந்தது.

தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அவள் மிக வசீகரமாய்த் தோன்றினுள். ஓரத்தில் சரிகையினுல் வேலே செய்த கரிய பட்டாடையைத் தரித்திருந்தாள். கரிய கூந்தலே அழகிய பெரிய ரோஜா மலரொன்று அலங்கரித்தது. கயல் விழிகள் யாரையோ எதிர்பார்த்து அங்குமிங்கும் அலேந்து கொண்டிருந்தன. ஆனுல் அவற்றில் விவரிக்க இயலாத பயம், ஒரு ஏக்கம் குடி கொண்டிருந்தது.

வெகு தூரத்தில் எங்கோ குதிரை வரும் சத்தம் கேட்டது. ஒரு கணம் அவள் முகம் மலர்ந்தது. ஆனுல் அடுத்த நிமிஷம் திகிலுடன் தன்னேச்சுற்றி ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

''சுதா!''

ஆகா! என்ன இனிமையான அழைப்பு. அவள் திருப்பி சைகை செய்தாள். வாலிபன் குன்றின் உச்சியில் ஏறி அவளருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

''சுதா, இதோ பார்த்தாயா!'' துணியால் மறைக்கப் பட்ட ஒரு படத்தை அவளிடமளித்தான். சுதா, அதை வாங்கி துணியை விலக்கிப் பார்த்தாள். அவள் முகம் சிவந்தது.

''என்னேத்தான் வரைந்திருக்கிறது! ஆனுல் பூர்த்தி அடையவில்லேயே!'' என்ருள்.

''இந்த மார்பும், இடையும் நேரில் பார்த்துக்கொண்டேதான் வரைய வேண்டும். எங்கே, சற்று அசையாமல் உட்கார்'' என்ருன்.

சுதா மெல்லச் சிரித்துக் கொண்டாள். பிறகு ''அதிருக்கட்டும். இப்படியே எவ்வளவு நாள் நாம் சந்திப்பது! நாட்கள் செல்லச் செல்ல எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறதே!''

''ஆம் கண்ணே! நீயும் நானும் இந்த காபூலிக் கூட்டத்தினின்றும் தப்பி வேறெங்காவது சென்று பிழைப்போம். அப்போதுதானே

நாம் சுதந்திரமாய் இல்லறம் நடத்தி இன்புற்று வாழலாம்''

சுதா, விக்கி விக்கி அழுதாள். முடிவில் சொல்லுகிறாள்: "நீங்களே உயிர், உங்களைவிட மேலான தொன்றும் எனக்கில்லை. ஆனால் உங்களைத் தொடர்ந்து வெளியேறி வாழும்பாக்கியம் எனக்கு இப்பிறவியில் இல்லை. உங்களுக்கு சுதந்திரமுண்டு. நான் கூண்டுக்கிளி. எனக்கு இல்லறமேது? இன்பமேது? மரணமே எனக்கு விதித்த விதி'' என்று அழுதாள்.

சந்திரனும் அழுதான். வானச் சந்திரனும் மேகத்திரைக்குள் மறைந்தான். என்ன ஆச்சரியம்! சுதா சுதந்திரத்தை விரும்பவில்லை! ஆனால் அவளைப் பிரிந்து அவன் எப்படி உயிர் தரிப்பான்?

"சுதா! இதென்ன பேச்சு! என்னுடன் வந்து விடேன். இதோ இப்பொழுதே இந்தக் குதிரையில் ஏறிச் சென்றால் வெகு தூரம் போய் விடலாம்.''

"நான் அவர்களுக்குச் செய்து கொடுத்த சத்தியம்! அதை என்னால் மீற முடியாதே!''

"சுதா, காதலை விடச் சத்தியம் பெரிதா?''

சுதா ஒன்றும் பேச வில்லை. சிறிது நேரத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவள் போல் எழுந்திருந்தாள். வாலிபனை நோக்கி, "அப்படியானால் வாருங்கள், போகலாம்'' என்றாள்.

இளைஞன் முகம் மலர்ந்தது. ஒரு கரத்தில் அம் மலர்க்கொடியை அணைத்துக் கொண்டு, மற்றொரு கரத்தில் சித்திரத்தை எடுத்துக் கொண்டு நடக்கலானான்.

பத்தடிகூட நடந்திருக்க மாட்டார்கள். 'க்ரீச்'சென்று பயங்கரமாய் கூவினாள் சுதா. வாலிபன் திரும்பிப் பார்ப்பதற்குள் அவன் தலையில் ஒரு அடி விழுந்தது. நான்கு காபூலிகள் சுதாவைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

* * *

1**7**88
சென்னை
000 098

"எல்லாம் விதியின் கூத்து! எங்கள் தலைவியாகிய உன்னை நான் விசாரிக்க வேண்டியிருக்கிறது. உண்மையைச் சொல். அந்த வாலிபன் யார்?'' என்று தலைவன் இடி முழக்கம் செய்தான்.

"தெரியாது''

"தெரியாதா! சுதா, உன்னை விட வயதில் நான் எவ்வளவோ மூத்தவன். என்னிடம் ஏன் மறைக்கிறாய்? அவனுடன் நீ ஓடத் துணிந்தது உண்டா, இல்லையா? அப்படி ஏன் ஓடத் துணிந்தாய்?''

"அது என் இஷ்டம்''

கலகலவென்று சிரித்தான் தலைவன். "உன் இஷ்டமா? உன் இஷ்டப்படி அவனை நீ காதலனாய் வைத்துக் கொள்ளலாம். அல்லது நம் ஆசாரப்படி மணந்து தலைவனாக்கலாம். ஆனால் அவனுடன் ஓடுவது நம் கொள்கைக்கு முற்றும் விரோத மாயிற்றே! அது உனக்குத் தெரியாதா?''

"என்னை விட்டு விடுங்கள்''

தலைவனின் கண்களில் தீப் பொறி பறந்தது. ஆனால் அடுத்த நிமிடம் கண்ணீர் அவன் பார்வையை மறைத்தது. நாக்குழற, "சுதா, என் கண்ணே! உன்னை எவ்வளவு அன்புடன் வளர்த்தேன் தெரியுமா? நீ யாரோ, என்ன சாதியோ, எனக்குத் தெரியாது. எங்கள் தலைவி இறந்த சமயம் நாங்களெல்லோரும் துயருற்று இருக்கையில் 'ஜலேகா' உன்னைக் கொணர்ந்தாள். உனது

அற்புத அழகையும், புத்திசாலித் தனத்தையும் மெச்சி, நீ தலைவியா யிருக்கத் தகுந்தவளென்று உன்னைத் தலைவி யாக்கினோம். இனி மேல் தலைவி பரம்பரை தொடர்ந்து செல்லும் என்று, நாங்கள் சந்தோஷமுற்றிருக்கையில், நீ ஓடிப் போவது நியாயமா? அனாதியாகிய உன்னை வளர்த்தவர்களுக்கு நீ செய்யும் நன்றி யிதுதானா? யோசித்துப் பார், சுதா!''

''........................''

''சுதா, பேச மாட்டாயா? இரண்டிலொன்று சொல். சத்தியத்தை மீறினால் அதற்குரிய தண்டனை.........சொல்லவே எனக்கு நாக் கூசுகிறது.........உனக்குத் தெரியும். உன்னை, பிறனால் வரிக்கப் பட்ட உன்னை, நம் கூட்டத்தில் எவனும் இனி மணக்க மாட்டான். உன் காதலன் காபூலியாக மாறுவானா? சுதா, சீக்கிரம் சொல்.''

''நான் தண்டனையை ஏற்கத் தயார்!''

தலைவன் ஆச்சரிய மடைந்தான். தன் கண்ணின் கருமணிபோல் வளர்த்த குழந்தைக்குத் தானே தண்டனை அளிப்ப தென்றால் அவன் மனம் என்ன பாடுபடும், எழுந்து சுதாவின் அருகில் வந்தான். அவள் முன் நெற்றி சுருளைக் கோதிக் கொண்டே, ''உன் புத்தியேன் அம்மா இப்படிக் கெட்டுவிட்டது. சுதா, நீ எங்கள் அரசியல்லவா! யோசித்துப் பேசு. இவ்வளவு நாள் பாடு பட்டதை யெல்லாம் வீணாக்காதே. அவனை மறந்து உன் கால முழுவதும் கன்னியாகவே வாழ்நாளைக் கழித்து விடு. இன்றே இவ்விடத்தை விட்டுப் போய் விடுவோம். ஏன் இப்படி என் மனத்தை புண்ணாக்குகிறாய்?'' என்று பரிதாபமாய்க் கேட்டான்.

சுதா கற்சிலை போல் நின்றாள். பல கண்கள் அவளையே நோக்கிய படி இருந்தன. தன் விதியை நினைத்து சுதா சிறிதும் கலங்கவில்லை. வாலிபனும் காபூலியானாலொழிய தான் அவனுடைய காதலியாக இருக்க முடியாதென்று அவளுக்கு நன்றாகத் தெரியும். சந்திரனோ அதற்குச் சம்மதியான். அவனைத் துறந்து தானிருப்பதை விட இறப்பதேமேலென்று அவள் நினைத்தாள். திடசித்தத்துடன் தலைவனை நோக்கி, ''ஐயா, உங்கள் தீர்ப்பை அளித்து விடுங்கள். நான் ஏற்கத் தயார்'' என்றாள்.

தலைவன் அதற்கு மேல் என்ன செய்வான்? சுதாவுக்காக அவர்கள் சட்டத்தை மாற்ற அவனால் இயலாது. கூட்டத்தில் சிலருக்கு சுதாவைக் காப்பாற்ற வேண்டுமென்கிற எண்ணம்தான். ஆனால் ஒருவருக்கும் தைரியமில்லை.

கடைசியில் தலைவன் கரகரத்த குரலில் மற்றவர்களை நோக்கி ''தோழர்களே! நீங்கள் மனது வைத்தால் குழந்தையைக் காப்பாற்றலாம். உங்கள் இஷ்டமென்ன?'' என்றான்.

சில பொறாமை பிடித்த வாலிபர்கள் இந்த ஒரு பெண்ணுக்காக தங்கள் சட்டத்தை அடியோடு மாற்றக் கூடாது என்று வாதித்தார்கள். கடைசியாகத் தலைவன், விழியில் பெருகும் நீரைத் துடைத்துக் கொண்டே, ''என்ன தண்டனையென்று உங்களுக்குத் தெரியும்! அதை நிறைவேற்றுங்கள்'' என்றுரைத்து சரசரவென்று சுதாவின் அருகில் சென்று, அவளைத் தன் மார்போடு அணைத்து கன்னத்தில் முத்தமிட்டான். பிறகு திரும்பிப் பாராமல் தன் கூடாரத்தை நோக்கி வேகமாய் சென்றான். கலங்காத நெஞ்சு படைத்த

சுதாவும் வளர்ப்புத் தந்தையின் பாசத்தைக் கண்டு கலங்கினுள்.

* * *

சந்திரன் தன் நினைவை அடைந்த பொழுது, ஆகாயச் சந்திரன் உச்சி வானத்திற்கு வந்திருந்தான். கொஞ்சங் கொஞ்சமாக அவனுக்கு மாலையில் நடந்தது நினைவிற்கு வந்தது. சுதா.........ஆம், அவளை என்ன செய்து விடுவார்களோ! நினைக்கும் பொழுதே அவன் தேகம் பதறிற்று. ஒரு வித சிந்தனையுமின்றி கால் போன போக்காக நடக்க ஆரம்பித்தான்.

எங்கோ மனிதர்கள் ஏகக் குரலில் வேதம் உச்சரிப்பது போல் கேட்டது. சந்திரன் நிதானித்துப் பார்த்தான். அப்பொழுதுதான் நேர் பாதையை விட்டு காட்டுப் பாதையில் போவதை உணர்ந்தான். இந்த சப்தம் என்னவாயிருக்கும்? அதை அறிய அவன் மனம் தூண்டிற்று. அந்த வழியே நடக்க ஆரம்பித்தான்.

சந்திரன் உச்சி வானைக் கடந்து விட்டான். சுதாவின் காதலன், நிலவொளியில் அவனுக்கு முன்னுல் சிறிது தூரத்தில் சில காபூலிக் குறவர்கள் மண்ணில் எதையோ நட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான்.

ஒரு கணம் திகைத்து நின்ருன். அதற்குமேல் அவன் கால்கள் நடக்க மறுத்து விட்டன. இதற்குள் அக்கூட்டத்தார் பூமியை நன்ருகப் பார்த்துவிட்டு ஒவ்வொருவராய் மறைந்தனர். துடிக்கும் நெஞ்சத்தோடு சந்திரன் அந்த இடத்தை அணுகினுன். மற்ற இடங்களைவிட அந்த இடத்து மண் ஈரமாக இருந்தது. கையை வைத்து அழுத்திப் பார்த்தான். கை லேசாக உள்ளே அமுங்கிற்று. ஆம், சந்தேக மில்லாமல் அங்கொரு குழி தோண்டி உடனே மூடப்பட்டிருக்கிறது. அதற்குள் என்னதான் இருக்கும்? நடுங்கும் கைகளுடன் குழியை மெல்ல தோண்டலானுன். சுலபமாக மண் வந்தது. பேய் பிடித்தவன் போல் ஆவேசமாக குழியைத் தோண்டிக் கொண்டே போனுன். அடியில்.........அடியில்.........ஆம், வெள்ளைத் துணியால் மறைக்கப் பட்ட ஒரு தேகம் இருந்தது.

பதைக்கும் நெஞ்சத்தோடு முகத்தை மறைத்திருக்கும் துணியை நீக்கினுன். நினைவற்று அக் குழியில் அவனும் விழுந்தான்.

ஆகாயத்திலிருக்கும் சந்திரன் தான் அக்குழியில் விழுந்து விட்டானேவென்று சந்தேகிக்கும்படி ஜொலித்துக் கொண்டிருந்தது சுதாவின் முகம். அந்த அற்புத சுந்தரி காதலுக்காகத் தன்னையே தியாகம் செய்துவிட்டாள். அவர்கள் சட்டத்தின்படி அவளை உயிருடன் புதைத்து விட்டார்கள்.

'கும்' மென்ற ஒலியே எங்கும் நிறைந்திருந்தது. அருவியின் கீதத்திலே யாரோ சோக வெள்ளத்தைச் சிந்தி விட்டார்கள் போலிருக்கிறது. மரம், செடிகள் கூட என்னவோ தாளமுடியாத் துயரத்தில் வெதும்புவது போல் காட்சி அளித்தது. எங்கிருந்தோ புல்லாங்குழலிலிருந்து கீதம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

இசையின் இன்பத்தையும், மதுரத்தையும் பற்றி எத்தனையோ பேர் இதற்கு முன் கவி இசைத்திருக்கிருர்கள். ஆனுல் யுக ஆரம்பத்திலிருந்து எந்தக் கலைஞனும் காணுத விந்தையெல்லாம் அன்று அதில் மிதந்து வந்தது. யார் இப்படி இன்னிசை பொழிகிருர்கள்? எதைத் தேடி அந்த இசைப் பெருக்கு ஓடிக் கொண்டிருக்கிறது? எட்டாப்பொருளை அடையும்

லட்சியத்தை உலகுக்குத் தெளிவாகக் காட்டவா? இல்லை. மகான்கள் கை விட்ட பேருண்மையைக் குழல் இசைக்கும் பாமர உள்ளம் எப்படிக் கண்டு விட முயற்சிக்கும்? பின்னே? எங்கே பார்த்தாலும், இன்றைக்கு மட்டும் என் இந்தச் சோர்வும், சலிப்பும்? ஓகோ, ஒவ்வொரு நாள் அழகாக, அற்புதமாக அலங்கரித்த புதுப் பெண்ணைப்போல் திகழும் இயற்கை வடிவு, இல்லை இயற்கைத்தேவி தனக்குப் பின்னொரு நாள் தாங்கலும் தவிப்பும் இப்படி வரும் என்பதை எதிர்பார்த்தே தான் இருக்கிறாளா? அவளுடைய எக்க அலைகளின் நெடு மூச்சா இவ்விதம் இடிந்த உள்ளங்களில் எதிரொலிக்கிறது? தாயே, இயற்கையம்மா இதோ, இங்கொரு அழகி காதலுக்காகத் தன்னையே தியாகம் செய்து விட்டாள். ஐயோ, அந்த இளைஞனை இன்னுமா, நீ வாட்ட வேண்டும்?

சந்திரனுக்கு நினைவு வந்த பொழுது வெள்ளி முளைத்து விட்டது. அவன் கையில் சுதாவின் சித்திரம் — பூர்த்தி அடையாத சித்திரம் — கசங்கிக் கிடந்தது.

* * *

மாமாவுக்கு எண்பது வயது. இந்த வயதில் இவ்வளவு இனிமையாய்க் காதல்க் கதை சொன்னதைப் பற்றி நான் ஆச்சரியமடையவில்லை !



சிரித்தமுல்லை

வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி

பழந் தமிழின் சிறப்பையே எல்லோரும் பேசுகிறார்கள். பேச வேண்டியதுதான். இந்த நூற்றாண்டு தொடங்கியும் 40 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் நல்ல இலக்கியங்களை, இனிய பாடல்களை யாராவது எழுதியிருக்கிறார்களா? அடிக்கடி என் மனதில் இந்தக் கேள்வி எழுவதுண்டு.

ஒரு நாள் இப்படி நான் யோசித்துக்கொண்டிருக்கையில் சில இலக்கியங்கள் என் உள்ளத்தில் வந்து வந்து மறைந்தன. நான் பல தடவை படித்துச் சுவைத்து மறந்துபோன பல பாடல்களும் லேசாக நினைவுக்கு வருவதும், மறைவதுமாயிருந்தது.

நான் உலாவிக் கொண்டிருந்த இடம் ஒரு சிறு சோலையின் நடுவேயுள்ள ஒரு மொட்டை மாடி. மேற்கே 'தக தக'வென்று சூரியன் மறைந்து கொண்டிருந்தான். கிழக்கே வெண்ணிலா தன் முழு வடிவத்தோடு அடிவானத்திலே காட்சி தந்தது. பறவையின் பாட்டோடு என் தனிமையும் இரண்டறக் கலந்து என் உள்ளத்திலே ஒரு மயக்கத்தை உண்டாக்கிற்று.

“குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன்
மகிழ்ச்சி கொண்டேன்”

என்று இரண்டடிகள் பளிச்சென்று மின்னல்போல் இதயத்தில் சுளித்தது. சட்டென்று அதற்கொரு எல்லை கட்டி மேலும் சிந்திக்கலானேன்.

“குலுக்கென்று சிரித்தமுல்லை ....” முல்லைப் பூக்கள் சிரிப்பதாகப் படித்திருக்கிறேன். சங்க இலக்கியங்களிலிருந்து தற்காலத்துப் பாடல்கள் வரையில் பல இடங்களில் முல்லைப் பூ சிரிக்கும்; அதைப் பார்த்துப் புலவன் சிரிக்க, அவனைப் பார்த்து நானும் சிரிப்பேன். தனிமையில் எங்களைப் பார்த்தால், 'நல்ல பைத்தியங்கள்!' என்று உலகம் சிரிக்கும்......யார் சிரிப்பாய்ச் சிரித்தால்தான் நமக்கென்ன? முல்லை சிரிப்பதைப் பற்றித்தான் இங்கே பேச்சு.

முல்லை சிரிக்குமா? என்று கேள்வி தோன்றிற்று. இதற்கு ஒரு விதமாகப் பதில் சொல்லித் தப்பித்துக்கொண்டேன். “குலுக்கென்று சிரித்த முல்லை” என்பது என் உள்ளத்தையே கொஞ்சம் குலுக்கி விட்டது. அது என்ன “குலுக்கு?” சிரிக்குமாம் முல்லை! ......அதுவும், குலுக்கென்று சிரிக்குமாம்! என்று திரும்பத் திரும்ப அதையே நினைத்துக் கொண்டிருந்தேன்.

என்னை மறந்து மந்திரம்போல அதைச்சொல்லிக்கொண்டிருக்கையில், அந்தக் கேள்வியிலேயே ஒரு ஆசை பிறந்து விட்டது. அதிலே ஒரு அழகு! ஓசையிலே ஒரு இனிமை!! இதனால் “முல்லையுஞ் சிரிக்குமா?” என்று பல தடவை உருப்போட்டேன். உடனே,

கருப்பூர நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவள வாய்தான் தித்தித்திருக்குமோ?

என்று ஒரு பாட்டில் என் உள்ளம் லயித்தது. தித்தித்திருக்குமோ

என்றதும், அடடா, அங்கே பிறக்கும் நயத்தை என்னவென்று சொல்வது?

அந்தப் பாட்டை முதன் முதல் படித்தபோது என் மனதில் ஒரு பெரிய குதூகலம்; ஒரு கிளர்ச்சி; அமைதி என்பதே இல்லை. கிறு கிறுப்புத்தான்! அதோடு ஒரு பெருமிதம் சேர்ந்து மயக்கி விட்டன. சித்தத்திலே—சிந்தனையிலே ஒரு வெறி! பாட்டை மேலே படிப்பதில் ஒரு தயக்கமுங்கூட.

கொஞ்ச நேரம் கழிந்தது. பித்தந் தெளிந்தது. அமைதியாக எண்ணினேன். ஆமாம், இந்தப் பாட்டிலே அப்படி என்ன இருக்கிறது? படிக்கும்போதெல்லாம் இது நம்மை அடிமைகொண்டு விடுகிறதே! இதில் நம்மை மயக்கியது தான் என்ன? கேள்வி வரிசையாக இருக்கிறதே; அதுவா? இல்லை, இல்லை.

கருப்பூரம், கமலம் மாதிரியுள்ள சொல்லழகா! அப்படியும் சொல்ல முடியாது. பின்னே அதிலுள்ள பொருளழகா? அதுகூட இல்லை!

இப்படி ஒவ்வொன்ருகக் கேட்டால் நான் மௌனமாகிவிட வேண்டியதுதான். திறமை இருந்தால் என் நெஞ்சைப் பறித்துக் கொள்ளட்டும். மேலும் கேட்டால் பொறுக்கவே முடியாது.

இந்தப் பாட்டில் சொல் நயம் மட்டுமா? பொருளின்பம் மட்டுமா? கேள்வியழகு மட்டுமா? இல்லை. இல்லை, இல்லவே இல்லை, எல்லாஞ் சேர்ந்து குழைக்கப் பட்ட நம் தமிழழகு. ஆகா! செந்தமிழை வாயார மனமாற வாழ்த்துவோம். “புத்தமுதம் வழிந் தொழுகுந் தீந்தமிழே” என்று ஒரு புலவன் பாடினனே, ஒரு வேளை இதனல்தானே? என்று தான் என்னல் சொல்ல முடிகிறதே தவிர, அதிகமாக வேறு சொல்ல எனக்குத் திறமையில்லையே என்ற பழைய நினைவுகள் கனவுபோல வெளிப் பட்டன.

கருப்பூர நாறுமோ?
கமலப்பூ நாறுமோ?
திருப்பவள வாய்தான்
தித்தித் திருக்குமோ!

கருப்பூர நாறுமோ என்றதும் என் தமிழ் உள்ளத்தில் இன்பம் பொங்கிற்று; கமலப்பூ நாறுமோ என்றதும் பொங்கி வழிந்தது; தித்தித்திருக்குமோ என்றதும் அணை கடந்து விட்டது.

பாட்டைப் பாடிய புலவர், ஏதோ ஒன்றைத் “தித்திக்குமோ” என்று பாடினர். அது ஏதாவதிருக்கட்டும்! இந்தப் பாட்டே எனக்குத் தித்திக்கிறதே! அவர் மனதில் தோன்றிய இன்பப் பெருக்கை அப்படிப் பாடித் தீர்த்து விட்டார். அதைப் பாடி நானடையும் இன்பத்தை எப்படிப் பாடுவது? என்னுடைய திறமை அப்படி இல்லையே!

தேன் ததும்பும் இந்த இனிய ஆனந்தத்தை அமுதம் பொழியும் இந்த அற்புதத்தை எப்படி வர்ணிப்பது?

நினைத்தால் களிப்பு, பாடினல் இன்பம், கேட்டால்.........? நான் என்ன சொல்லட்டும்!

ஒரு பெரும் புலவன் இப்படியின்பத்தைப் பாடுவதற்குத் தடுமாற மாட்டான். நானே உணர்கிறேன்; ஆனல் சொல்லத் தெரியவில்லை; தவிக்கிறேன். புலவனுக்கு, இது ஒரு பெரிதல்ல. அந்த இன்பத்திற்குத் தகுந்த வார்த்தைகளை வைத்துக் கவி இசைத்து விடுகிருன். இதய இன்பம், கவி இன்பமாக மாறுகிறது.

இன்பமும் துன்பமும் எல்லை கடந்தால் வார்த்தையில் சொல்ல முடிவதில்லை. வார்த்தையால்

எல்லா நினைவுகளையும் சொல்லிவிட முடியாது. வார்த்தையின் சக்தி ஒரு அளவுக்கு உட்பட்டதேதான். நம்முடைய பேசும் சக்தி அதை விட இன்னும் குறைந்தது. கலைஞனே அபார சக்தியுடையவன். தான் நினைப்பதை—உள்ளத்தில் ஒரு நிலையில்லாமல் குமுறுகிற எண்ணங்களை, அவை இப்படியும், அப்படியும் அசைந்தும், ததும்பியும், பொங்கியும் வழியும்போது கூட வார்த்தைகளால் படம் பிடித்து விடுகிறான். பித்தந் தெளிய அவனிடமே மருந்துமிருக்கிறது.

ஆனால் எனக்கோ பாட்டைப் படித்ததும் பேரின்பமாகிய பித்தம் பிடிக்கிறதேயொழிய, அதைத் தெளியவைக்க மருந்தில்லை. கவிஞன் கண்டு பிடித்த மருந்துகளில் பேசாத பொருளையெல்லாம் பேச வைப்பது! அறிவேயில்லாத மரம் மண்ணுக் கெல்லாம் அறிவைக் கொடுப்பது! உயிரே யில்லாத வார்த்தைகளுக்கு உயிரைத் தருவது! பாலையும் தேனையும் ஊற்றாமல், பாட்டிற்கு ஒரு இன்பத்தை ஊட்டுவது! இப்படி யெல்லாம் என்னென்னவோ சொக்குப் பொடிகளை வைத்திருக்கிறான்.

"தித்திக்குமோ?" என்று பாடியவர் பழைய நாள் புலவர்; ஒரு பெண் புலவர்; அவர் ஒரு வைணவ ஆழ்வார்; பெயர் ஆண்டாள் என்பது. ஆனால், இந்த நாளிலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் புதிய புலவரும் இருக்கிறார்கள். முன்னமே சொன்னேன், முல்லை சிரிக்குமென்றுதான் நான் இது வரையிலும் படித்ததாக. இப்பொழுது புதிய புலவர் நமக்குப் புதிதாக என்ன சொன்னார்? 'குலுக்'கென்று சிரித்தது என்றார்.

அவரும் என்னைப் போல மாலை நேரத்தில் சோலைக்குள் சென்றார். அப்படி போனவர் அந்தச் சோலையிலே—மல்லிகை முல்லை மணத்தோடு மந்த மாருதம் வீச, அந்தி மாலையின் அழகு, அவர் உள்ளத்தை இசைக் கடலில் ஆழ்த்தி விட்டது. அவர் சொல்லில் வல்ல புலவரானதால், இனிய கவியில், "தாம் பார்த்த முல்லை, சும்மா சிரித்த முல்லையல்ல; அது குலுக்கென்று சிரித்த முல்லை" என்று எழுதி விட்டார்.

இப்படி நினைத்த பிறகுதான் அமைதி ஏற்பட்டது. இப்பேர்ப்பட்ட நினைவும் பாட்டும் பெரிய தவிப்பையும் கலக்கத்தையும் உள்ளத்தில் மூட்டிவிடுகின்றன. விலை கொடுத்தேனும் இந்தத் தவிப்பை — இந்தக் கலக்கத்தை நாம் வாங்க வேண்டும் என்பதே என் கவலையும் ஆசையும். இதைப் பார்த்து யாராவது சிரிப்பார்கள். அது தான் முதலிலேயே சொன்னேனே, யார் சிரித்தால் எனக்கென்ன?

★

தேவானை

ரா. வெங்கடாசலம்

அடர்ந்த ஆலமரத்தடியில் தொட்டிலில் குழந்தையை தூரிவைத்து ஆட்டிக்கொண்டே சிரித்துக் கொண்டிருக்கிறாள் தேவானை. சின்னச்சாமி அந்த மரத்தடியிலே சாய்ந்து அதை ரசித்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் ஸ்டேஷனில் போர்ட்டர் வேலை போனது தானா பிரமாதம்! அல்லும் பகலும் ரயிலுடன் ஓடி மூட்டை முடிச்சுகளுடன் உறவாடி இரண்டு காசு சம்பாதிப்பது தானே போனது! அதில் அவனுக்குக் கொஞ்சமும் கவலை இல்லை.

பக்கத்திலே குளம். அதன் கரையில் தான் அந்த ஆலமரம் நின்றது. சுற்றிலும் பச்சைப் பசேலென வளமாக வளர்ந்த நாற்றுகள். காற்று அந்த நாற்றுகளை அசைத்துக் கொண்டே ஆல இலைகளையும் 'சலசல' க்கச் செய்து கொண்டு 'ஜிலு ஜிலு' வென வீசிச்சென்றது. பலவர்ணக் கதிர்களைச் சுழற்றிக் கொண்டே சூரியன் ஓய்வுக்கு சென்று கொண்டிருந்தான். அந்த அருமையான சூழ்நிலையில் அந்த நாயகனும் நாயகியும் மெய் மறந்து இன்பமாய் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

"உம், நம்ம பாப்பாவை என்னமோ என்னைப்போல் ரயிலிலே நாலு பேருகிட்டே பாடி பிச்சை கேட்டு வயிறு வளக்காமல் நல்லா படிக்க வைத்து நல்ல மாப்பிள்ளையாய் பாத்துக் கொடுக்கணும் என்னாங்க?' என தேவானை சொன்னாள். 'ஆமா, இந்தக் கேவலப்பாடு நம்மோடே தொலையட்டும். நம்ம குஞ்சுக்கன்னியாவது நல்லா இருக்கட்டும்." என சின்னச்சாமி பூரிப்புடன் சொன்னான்.

தேவானைக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. குழந்தையை அப்படியே தொட்டிலுடன் தூக்கி முகத்துக்கு முகம் வைத்துக் கொஞ்சினாள். அதைப்பார்க்க சின்னச்சாமிக்கு கட்டு மீறிய ஆனந்தம் உண்டாயிற்று.

"எண்டி கண்ணு,! நீ உங்க ஆத்தா மாதிரி பிச்சைக் காரியா யில்லாமல் நல்லாபடிச்சு......ஆமா.... எண்டி?" என மறுபடியும் கொஞ்சினான்.

அப்போது அந்த ஒன்பது மாதக் குழந்தை கண்களைக் கையினால் தேய்த்தது.

"அடி தேவானை. தூங்கும் பிள்ளையை......பேசாமே தூங்கட்டுமே!" என சின்னச்சாமி சொன்னான்.

குழந்தையும் முணகியது "இல்லேடியம்மா!" என அவள் குழந்தையை தொட்டிலிலிட்டு 'ரே,ரே' வென ஆட்டி விட்டாள். அவள் தாலாட்டும்போது ஆல இலைகளும் குளத்து தண்ணீரும் பின்னணியாக இசைத்தன.

இதற்கு மேல் இன்பமும் உண்டோவென கனவு கண்டு கொண்டிருந்தான் சின்னச்சாமி. தினசரி ஒண்ணுரண்டு சம்பாதிப்பது போனதில் என்ன பிரமாதம்? ஒரு நூறு இரண்டு நூறு ரூபாய் சம்பாத்தியம் போனாலும் பரவாயில்லை என நினைத்தான்.

மதுரை ஜங்ஷனில் போர்ட்டர் சின்னச்சாமி என்றால் வழக்கமான பிரயாணிகள் எல்லோருக்கும் தெரியும். சின்னஞ்சிறுசிலிருந்து இன்று வரை அதில் நல்ல அனுபவந்தான்.

இடையில் காக்கி அரைக்கால் சட்டை, மேலே ஒரு பச்சை சட்டை. தலைமேல் இரண்டரை முழத்துண்டில் ஒரு முண்டாசு. புசத்தில் ஒரு வில்லை, இவையே அவனுடைய அலங்காரம்.

அவனுக்கு அங்கு நல்ல சம்பாத்தியம். எப்போதும் அவனுடைய கால் சட்டைப் பையில் காசுகள் சல சலவெனவே இருக்கும் ஆனால் அந்த சம்பாத்தியம் தொலைய தேவாதான் வினையாக இருந்தாள். வேலை போய் விட்டதே என்னும் கவலை கொஞ்சமேனும் உண்டா? பழைய பூரிப்பில் கொஞ்சமும் குறையவில்லை.

தேவானை நல்ல உடம்புக்காரி. படர்ந்த முகம், வாட்ட சாட்டமானவள். அவள் பிச்சைக்காரி என்றாலும் பிச்சைக்காரி போல் கந்தைத்துணிகளை உடுத்திக் கொள்ளாமல் முன்கொசுவம் வைத்து சேலை கட்டி, அழகான அரைக்கை ரவுக்கை மாட்டி முகத்தில் மஞ்சள் பூசி, நெற்றியில் குங்குமம் இட்டு தலை முடியை கொண்டையாகப் போட்டு, இருகைகளிலும் வளையல்கள் கொந்தளிக்க அவள் பாடி வந்து விட்டால் அவளைப் பார்த்த கண்கள் பிரளவேண்டுமே: மதுரையிலிருந்து விருது நகர் வரை அந்த ரயிலில் ஒரு தடவை போய் திரும்பிவிட்டால் அவள் கைகொள்ளாமல் காசுகள் நிறைந்து விடுவதில் அதிசயமில்லை. எத்தனையோ பேர் அவளுடைய அழகில் மயங்கியிருப்பார்கள். தேவானை அதற்கெல்லாம் இடம் கொடாமல் சின்னச்சாமியை கைபிடித்துக் கொண்டது தான் எல்லோருக்கும் ஆச்சரியமாகி விட்டது.

இவனுக்கும் நல்ல சம்பாத்யம். அவளுக்கும் நல்ல காசு. இருவரும் வேலை முடிந்தவுடன் அந்தக் குளத்தில் குளித்து விட்டு உல்லாசமாய் பேசி சிரித்து அனுபவிப்பார்கள்.

இப்படி இருக்க, ஒரு நாள் தெற்கே இருந்து ரயில் வந்து நின்றது. சின்னச்சாமி தலைமேல் இரண்டு பெட்டிகளையும் கக்கத்தில் ஒரு மூட்டைமுடிச்சையும் தூக்கிக்கொண்டு தம்பதிகள் பின்

தொடர துரிதமாய் நடந்தான். அவனுடைய பார்வை மூணுவது பிளாட்பாரத்தில் விழுந்தது.

டிக்கட் பரிசோதகர் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு தேவானையை ஏதோ கிண்டலாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவள் அடங்கி ஒடுங்கி பயந்து போய் நின்றாள்.

“கையைக் காட்டு, மடியை அவிழ்” என அந்த அதிகாரி கேட்ட போது தேவானை என்ன செய்ய முடியும்? ரயிலில் டிக்கட் இல்லாமல் திரிந்தவளாயிற்றே.

அவர் ஆட்டத்திற்கெல்லாம் ஆடித் தானே தீரவேண்டும். பேசாமல் மடியை அவிழ்த்தாள். சின்னச் சாமிக்கு அந்த காட்சியைக் காண சகிக்க வில்லை. கக்கத்திலிருந்த முடிச்சுகளை தொப்பென கீழே போட்டான். தலையிலிருந்த பெட்டிகளைக் கீழே போட்டான். பிரயாணி தம்பதிகளையும் பொருட்படுத்தவில்லை. ஒரு தாவு தாவி வெறி பிடித்தவன் போல் குறுக்கே இருந்த இரும்பு வேலியையும் தாண்டி ஓடினான்.

தேவானையின் கையிலிருந்த காசுகளை டிக்கட் பரிசோதகர் வாங்கினார். மீண்டும் 'அது என்ன முடிச்சு' எனக்கேட்டார். அதற்குள் சின்னச்சாமி ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டு "ஏன்?" என கேட்டான்.

"ஏண்டாப்பா?" என ஒரு தடவை அவனை முறைத்துப் பார்த்து விட்டு, தேவானை பக்கம் அதிகாரி திரும்பினார்.

"உம், அவிழுடி முடிச்சை!" என அவர் கேட்டார். "என்ன சாமி அப்படி பேசுறேங்க அடியே புடியேனு" என தேவானை பொறுக்க முடியாமல் கோபமாய் பேசினாள். சின்னச் சாமியைப் பார்க்கவும் சொஞ்சம் தைரியம் வந்து விட்டது போலும்!

"அடிசீ, கழுதே!" என அவர் கோபமாய் பார்த்தார்.

"இந்தாசாமி அந்த மாதிரி எல்லாம் பேசிக் கொள்ளாதே என்ன வாடி போடி......" என சின்னச் சாமி உறுமினான்.

அதற்குள் ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து சின்னச்சாமியைத்தேடி ஆட்கள் வந்து விட்டனர். மூட்டை முடிச்சுகளை கீழே போட்டு விட்டதை அந்த பிரயாணி அதிகாரிகளிடம் முறையிட்டு விட்டார். எல்லாம் சேர்ந்து சின்னச்சாமியின் நீண்ட நாள் வேலைக்கு உலை வைத்து விட்டது.

வேலை போய் விட்டது கூட அவனுக்கு கவலை இல்லை. அந்த டிக்கட் பரிசோதகர் தேவானையை 'அடி' போட்டு பேசியதிருக்கிறதே ரொம்ப நாள் வரை அவனுடைய மனதில் கொதித்துக்கொண்டிருந்தது.

சின்னச்சாமி தான் ஸ்டேஷனுக்குள் இனி வேலை பார்க்க முடியாது. தேவானைக்கு என்ன? எப்பொழுதுமே அதிகாரிகள் கண்களுக்கு அகப்படாமல் ஆள் பார்த்து ஒளிந்து ஒளிந்து ரயில் நகருகிற போது தொத்தி ஏறிக்கொண்டே திரிபவளாயிற்றே! இப்போது மட்டும் எந்த அதிகாரியின் தயவு வேண்டியிருக்கிறது! தன் காதலனுக்கு சம்பாத்தியம் போனகவலை ஏற்படாமல் அவள் ரயிலிலிருந்து கொண்டு வரும் காசுகளை அவன் கையிலேயே கொடுத்து வந்தாள். அவனுக்கு காசு தட்டுப்பாடு மட்டும் ஏற்படாமல் அவள் முன்னேற்பாடுடன் நடந்தாள்.

ஆனால் அந்த பழைய டிக்கட் பரிசோதகர் இருந்தவரை அவனுக்கு சிரமம் அதிகப்பட்டு வந்தது. இதனால் சின்னச்சாமி அவளை ரயிலுக்கு போவதையே தடுத்து விட்டான்.

இது ரொம்ப நாளில்லை. அந்த மனிதன் வேறு லையனுக்கு மாறிப் போய் விட்டான். தேவானை மறுபடியும் ரயிலில் பாட ஆரம்பித்து விட்டாள். சின்னச்சாமி அவளுடன் இன்பமாய் காலம் கழித்தான்

அவர்களுடைய வாழ்கையை இன்னும் இணைக்க அந்தக்குஞ்சுக் கன்னி பிறந்தது. தேவானை இல்லாத சமயம் சின்னச்சாமி அந்த குழந்தையுடன் அந்த மரத்தடியில் பொழுது போக்கினான்.

தொட்டிலே ஆட்டிய தேவானை குழந்தை தூங்கி விட்டதாவென தொட்டிலே நீக்கிப்பார்த்தாள். அதற்குள் சின்னச்சாமி 'தேவானை பிள்ளை தூங்கிடுச்சா?' எனக் கேட்டான். "உம், ஆத்தா தூங்கிடுச்சு" என்று தேவானை தொட்டிலே இலேசாக ஆட்டி நிறுத்தினாள். பிள்ளை விழித்து விடுவதற்குள் அவசரமாய் அடுப்பைப் பற்ற வைத்து சோறு வடித்தாள்.

* * *

மீனாக்ஷியம்மன் கோவிலுக்குள் தேவானையும் சின்னச்சாமியும் நுழைந்தார்கள். தேவானையின் கையில் குஞ்சுக் கன்னி கண்களை விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. பூக்கடையில் மருவும் சிவந்தியும் சேர்ந்த கதம்பசரம் வாங்கி தேவானை கொண்டையில் சொருகிக் கொண்டாள். ஒரு பூமாலை வாங்கி சின்னச்சாமி தேங்காய் பழத்தட்டில் வைத்துக்கொண்டான். அந்தக்குமரியும் குமரனும் உல்லாசமாய் போவதைப் பார்த்து பூக்கடைக்காரர்கள் ஏதோ 'குசு குசு' வெனப் பேசிக்கொண்டார்கள். முன்னாலிருந்த திருவாச்சி விளக்குகள் நட்சத்திர மாலை போல் பிரகாசித்துக் கெண்டிருந்தன. அவர்கள் பயபக்தியுடன் சென்றார்கள்.

குழந்தைக்கு ஏதோ தோஷமிருப்பதாகவும் துர்க்கை யம்மனுக்கு புதனுக்குப் புதன் அர்ச்சனை செய்தால் அது நீங்கிவிடுமென்று ஒரு ஜோசியன் சொல்லியிருந்தான். அவர்கள் தவறாமல் கிழமைக்குக் கிழமை துர்க்கைக்கு அர்ச்சனை செய்தார்கள்.

"துர்க்கையம்மா, என் பிள்ளை சௌக்கியமாயிருக்கணும் தாயே. எந்த விதமான கெடுதலும் வரக் கூடாது" என்று தகப்பனும் வேண்டிக் கொண்டான்.

பட்டர் கூடத் தட்டைக் காட்டிய போதும் தேவானை அதைத் தொட்டு முதலில் குழந்தையின் கண்களில் ஒத்தியும் விபூதி குங்குமமும் அதன் நெற்றி நிறையப் பூசியும் பிறகு தான் அவள் பூசிக் கொண்டாள்.

அர்ச்சனை செய்யச் செய்ய ஜோசியர் சொன்ன அந்த பீதி அவர்களுக்குக் குறைந்து வந்தது. "என் பிள்ளைக்கு இனி ஒண்ணும் வராது" என குழந்தையை தோழில் அணைத்து அதன் தலைமேல் தேவானை முத்தம் கொடுத்தாள்.

"இந்தாங்க. பிள்ளை உங்களையே கண்ணைக் கூட சிமிட்டாமல் பார்க்கிறது" என்றாள்.

"எங்கே? அடக்கழுதை!" என செல்லமாய் சின்னச்சாமி அதனுடைய கன்னத்தை மிருது வாக திருகினான்.

"என்னாங்க இந்த மாதிரி!" என அவனுடைய கையை தேவானை தட்டினாள். அந்தச் செல்லப் பார்வை அவனுக்குப்போதை வெறியை மூட்டி விட்டதெனலாம்.

அந்த இன்பத்திற்கு ஈடு? அன்று இரா முழுதும் ரொம்பநேரம் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். எல்லாம் அந்த குழந்தையைப்பற்றித்தான். அந்த திறந்த வெளியில் நட்சத்திரங்கள் தங்களைப்பார்த்துக் கொண்டே கனவு கண்டுகொண்டிருக்கும் அந்த தேவானையையும் சின்னச்சாமியையும் பார்த்துசிரித்துக் கொண்டிருப்பது போல் மின்னிக் கொண்டிருந்தன. அந்த கவலையற்ற இளம் காதலரின் பத்தை ரசிக்கவோ என்னவோ குகையிலிருந்து வெளியே வருவது போல் நிலா மேகங்களினூடே இருந்து கிளம்பிக் கொண்டிருந்தது.

அவர்கள் பார்த்து கண்வைத்து விட்டார்களென்னவோ அந்த

இடத்தில் அவர்கள் மறுநாளும் படுத்து கனவுகாண முடியாமல் போய் விட்டது. மொட்டைத் தென்ன மரத்திலிருந்த ஆந்தை, அவர்களுடைய கனவில் மறு நாளே இடி விழப் போகிறதென அறிந்தோ என்னவோ அவ்வளவு பயங்கரமாய் கத்திற்று. பாவம் அவர்கள் அதை அறிய முடிந்ததா?

குழந்தை தொட்டிலில் தூங்கி யது. 'பிள்ளையைப் பார்த்துக்குங்க இந்த ரயிலிலே போயி சோளவந் தானிலே மறு ரயிலில் ஏறி வந்து விடுகிறேன்'' என தேவானை சொன்னாள்.

“கிடைச்சது சரியென வந்திடு. பிள்ளை முழிச்சிட்டா பாலுக்கு அழும்.'' என சின்னச்சாமி சொன்னான்.

தேவானை தொட்டிலை ஒரு தட வை நீக்கிப்பார்த்து விட்டு நடந் தாள். சின்னச்சாமி தொட்டிலின் பக்கத்தில் உட்கார்ந்தான். “உம், சீக்கிரமா வந்திடு. பிள்ளை முழிச்சி டும்'' என அவன் மறுபடியும் ஞாபகப்படுத்தினான் 'வேறு வேலே' என்று இன்னும் துரிதமாய் நடந் தாள்.

தேவானை சீக்கிரமாய் வந்து விடு வாள் என அவன் எதிர்பார்த் தான். அவள் வந்து விடுவாளா? மனிதன் நினைத்தபடி முடிந்தால் அப்புறம் என்ன?

குழந்தை விழித்து விட்டது. நேரமும் ஆகி விட்டது. கிழக்கே போகிற வண்டியும் போய் விட் டது. இன்னும் அவள் வரவில்லே. சின்னச்சாமிக்குப் பெரிதும் கலக் கம் ஏற்பட்டு விட்டது. குழந்தை யும் 'வியா வியா' வெனகத்த ஆரம்பித்தது.

“ஆத்தா, கண்ணுள்ள இந்தா அம்மா, வந்து விடுவாடா. அளா தேம்மா'' என எத்தனை தடவை தான் அவன் சொல்லிச்சொல்லி ஆட்டுவது. குழந்தைக்கு எங்கே அந்த தேறுதல் கேட்கப்போகிறது. இன்னும் அதிகமாக தான் கத்தி யது.

இன்னும் காணுமே என சின் னச்சாமி ஏங்கினன். பிள்ளை கத் துகிறதே என பரிதபித்தான். அதைத்தூக்கி மார்போடணைத்து தந்திக்கம்பிகளில் வரிசையாக உட் கார்ந் திருக்கும் சிட்டுக்குருவிகளை யும் வயல் மேல் அகலமான வெண் சிறகுகளை அடித்துப் பறந்து போ கும் நாரைகளையும் மரக்கிளையில் ஓடித்திரியும் அணிலேயும் காட்டி அதன் அழுகையை மாற்றப்பார்ப் பான். என்றாலும் அவனுடைய மனமே அவளைக்காணுமல் தவிக் கும் போது பாலுக்காக அழும் குழந்தை எங்கே பொறுக்கப் போகிறது?

ஸ்டேஷனுக்கு வெளியே இரும் புக்கம்பி வேலிக்கு அப்பால் குழந் தையை ஏந்திக் கொண்டு வடக் குப்பக்கம் திரும்பி எதிர்பார்த்தி ருந்தான்.

சோளவந்தானுக்கு வரவேண் டிய ரயில் ஏதோ பாலம் இடிந்த சேதத்தினல் தாமதமாகி விட்டது. இல்லா விட்டால் தேவானை அப் படி தாமதிப்பாளா? ஐயோ, பிள் ளை இன்னேரம் எழுந்திருக்குமே. பாலுக்காக கதறுமே. அவர் என்ன செய்கிருரோ! பாழாய்ப் போன ரயிலே இன்னும் காணு மே!'' என படபடத்துத்தானிருந் தாள் தேவானை.

அந்த ஸ்டேஷனில் ரொம்ப நேரம் காத்திருந்தாள். குழந்தை பசியில் துடித்துக்கொண்டிருக்கும் என்று நினைவு வந்த போது அவள் எங்கே சாப்பிடுவது? பசியையும் பொருட்படுத்தாமல் அந்த ரயிலுக் காக ஏங்கிப்போய் ஒரு பக்கம் தன்னந்தனியாக நிற்கும் புளிய மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள்.

எந்தப் பக்கமாவது குழந்தை அழுகிற சத்தம் கேட்டால் அவள் திடுக்கிட்டுப் பார்ப்பாள். 'உயிர் அங்கே; கட்டை இங்கே' யுமாகத் தான் இருந்தது. அன்றைக்கென அந்த ரயிலுமா அவ்வளவு நேரம் கழித்து வரவேண்டும்!

மணி அடித்த சப்தம் கேட்டதும் பிரயாணிகளிடம் பரபரப்பு ஏற் பட்டது. கைகாட்டி இறங்கியது. தேவானை வயிற்றில் பால் வார்த் தது போலிருந்தது.

கரும்புகையை வாரி இறைத்துக் கொண்டு வந்த ரயிலைப் பார்க்க வும் தன்னை சுவர்க்கத்திற்குக் கொண்டுபோகவரும் வாகனமாக அவள் நினைத்தாள் ஐயோ, பாவம்.

ரயிலில் எல்லோரும் ஏறி விட் டார்கள். மணி அடித்தானது ரயில் ஊதி நகர்ந்தது.

தேவானை வழக்கம்போல் ரயில் ஓடும்போதே தொத்தி படியில் ஒரு காலை வைத்துக் கதவைத்திறந்தாள் ரயில் வேகம் அதிகரித்தது, பசியில் வாடி வதங்கிப்போன அவளது கைகள் கதவை உள்ளே தள்ளிய யது. மறு காலை உள்ளே வைக் கப் போனாள்.

எதிரிலிருந்து 'யாரது?' என அதி கார தொனி கேட்டது. பழைய டிக்கட் பரிசோதகர் தான் எதிரே வந்தார்! தேவானை திடுக்குற்று விட்டாள். அவளுடைய சோர்ந்து போன உடலில் கிறு கிறுப்பு அல ட்டியது. கண்கள் இருண்டன. கைபிடியிலிருந்து கை நடு நடுங்கி நழுவி விட்டது.

"ஆ" என்றாள். ரயில் போன வேகத்தில் தேவானை புரண்டு போய் விழுந்தாள். பிசாசு போல் கத்திக் கொண்டு ஓடிய ரயில் நிறுத்தப்பட்டது.

தேவானையைச் சுற்றியும் கூட் டம் கூடி விட்டது. கையிலிருந்த துட்டுக் காசுகள் சுற்றிலும் சித றிக் கிடந்தன. ஆஸ்பத்திரிக்கு அனுப்ப அந்த ரயிலிலே போட் டுக் கொண்டு, மீண்டும் ரயில் புறப்பட்டது.

'திக்கில்லாதவருக்குத் தெய்வமே துணை' என்று சொல்லுகிறார்கள். ஆம், பால் மணம் மாறாப்பச்சிளம் குழந்தைக்குத் தேவானை ஆஸ்பத் திரியிலிருந்து குணமாகி வருகிற வரை தெய்வம் தான் காப்பாற்றி யது என்று சொல்லவேணும். சின்னச்சாமி அவள் வருகிற வரை துடித்த துடிப்பை இன்னதென விவரிக்க இயலாது. காட்டுப் பற வைகளும் செடி கொடிகளுமாக விளையாட்டுக் காட்டி குழந்தையை வளர்த்து வந்தது. இயற்கை யன்னையின் மடியில் வளர்ந்த குழ ந்தை, அவர்கள் கண்ட கனவை நனவாக்கும் என்பதற்கு அறிகு றியை தன் காலத்திலேயே தேவா கண்டு கொண்டாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து வருமுன் பே இந்த பிச்சைத் தொழிலை இனி இந்த ஜென்மத்திலே கண்ணெடுத் தும் பார்ப்பதில்லை என்ற உறுதி கொண்டாள். இப்போது கண வனும் மனைவியும் அந்த சிறு தோட்டத்தில் காய் கறி பயிர் செய்வதிலே கண்ணும் கருத்து மாயிருக்கிறார்கள்.

'அதிக உணவு செய்யுங்கள்' என்று பிரசாரம் செய்கிறவர்களே பார்த்து அதிசயிக்கும் படியிருக்கி றது இவர்கள் வேலை மும்முரம்.

குழந்தை பள்ளிக்கூடம் போக வர இருக்கிறது. அந்த இளம் காதலர்களின் வாழ்விலே மீண்டும் வசந்தம் வீச ஆரம்பித்தது.

இன்பக் கதைகளெல்லாம்-உன்னைப்
ஏடுகள் சொல்வதுண்டோ? [போல்
அன்பு தருவதிலே-உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

என்ற கீதம் மர வரிசைகளின் இசையோடு அங்கு எழுவது மறுபடி சகஜமாகி விட்டது!

கலைக்கதை:

சிற்பியின் கனவு

கே. பி. கணபதி

பாண்டியன் விமலாதித்யன், கிருஷ்ணபுரத்தைத் தமிழ் நாட்டின் சிற்பக்களஞ்சியமாக ஆக்க நினைத்தான். கைதேர்ந்த தமிழ் நாட்டுச் சிற்பிகள் யாவரும் கிருஷ்ணபுரத்திற்கு வரவழைக்கப் பட்டனர். தான் காண நினைத்த கோவில் நிர்மாணத்தைப் பாண்டியன் சவிஸ்தாரமாக எடுத்துச் சொன்னான். சிற்பிகள் தங்கள் தங்கள் தனித் திறமையைக் காட்ட முனைந்து நின்றனர்.

அக்காலத்தில் மாதவன்தான் தமிழ் நாட்டின் சிற்ப மணியாகத் திகழ்ந்தான். கோவிலின் உள் பிரகாரச் சிலைகளைச் செதுக்க மாதவனே நியமிக்கப் பட்டான். மாதவனுடைய கை உளி, எத்தகைய நுணுக்க பாவத்தையும் கல்லில் செதுக்கிக் காட்டும் வல்லமையுடையது. உயிரற்ற கற்களுக்கு உயிரும் உணர்ச்சியும் கொடுப்பான் மாதவன். சிற்பக் கலையே அவனது வாழ்க்கையின் லக்ஷியம். மாதவனுடைய அபாரமான கற்பனா சக்தி, அவனுடைய லக்ஷியப் பாதைக்கு ஒரு தீபமாக விளங்கியது. கிருஷ்ணபுரம் கோவிலில் தன் முழுத் திறமையையும் காட்டி அழியா சிற்பங்களை ஸ்தாபிக்க எண்ணினான் மாதவன். அரசன் கட்டளைப்படி கோவில் உள் பிரகார வாசலின் இருபுறங்களிலும் வரிசையாக அமைக்க வேண்டிய சிலைகளை ஒவ்வொன்றாகச் செதுக்கி வந்தான். ஒவ்வொரு சிலையும் முடிந்தவுடன் பாண்டியன் பொன் முடிப்புகளை மாதவனுக்குப் பரிசளித்து வந்தான். தன் லக்ஷியம் உருவாகி வருவதைக் கண்டு அரசனது மனம் ஆனந்தக்கடலில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தது. மாதவனுடைய சிற்பத் திறமையைக் கண்டு அரசன் அடிக்கடி பிரமித்து நின்றான். சிவப்பு ரேகை ஓடியிருந்த சாதாரணக் கல்லில் ஒரு காட்டு வேடனின் காதல் நாடகத்தையே சித்திரித்து விட்ட மாதவனது கற்பனைத் திறமையைப் பற்றி அரசன் குறிப்பிட்ட போது அவனால் பேசவே முடியவில்லை. "மாதவா, நீ கற்களுக்கு அமரத்துவம் அளிக்கும் ஒரு கவி. இதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை" என்றெல்லாம் மாதவனைப் புகழ்ந்தான். அர்ஜுனன் சிலையில் செதுக்கியிருந்த, நரம்புகளின் முறுக்கையும் கனல் கக்கும் விழிகளையும் கண்ட விமலாதித்தியன் கல்லாகச் சமைந்து நின்றான். மாலைகளை அணிந்து நின்ற வீரபத்திரன் சிலையின் முகத்தில், ஊழிக்காலத்துக் கோரச் சிரிப்பின் பாவம் அப்படியே பதிந்திருந்தது.

கோவில் உள் நடைக்குப் பக்கத்திலுள்ள தூண்களில், பழந்தமிழர்கள் மானிட அழகின் லக்ஷியமாகக் கண்ட மன்மதனையும், ரதியையும் சிருஷ்டிக்க எண்ணினான் சிற்பி. சில நாளில் உருவற்ற மன்மதனுக்கு, மாதவன் உருக் கொடுத்து விட்டான். அங்க லக்ஷணங்கள் யாவும் பரிபூரணமாகப் பெற்றுக் கரும்பு வில்லைத் தாங்கி நின்ற ஒரு சுந்தர புருஷனை, யாரோ முனிவர் கல்லாகச் சபித்து விட்டது போலிருந்தது, மாதவன் அமைத்திருந்த மன்மதன் சிலை.

மன்மதனுக்கு எதிர்ப்புறத்தில், ரதியை சிருஷ்டிக்க வேண்டும். மாதவனின் கற்பனு சக்தி, பெண்மைக்குரிய பல அழகுகளை ஆராய்ந்து ஒன்று படுத்திக் கொண்டேயிருந்தது. மன்மதன் சிலை முடிந்து இரண்டு மாதமாகியும், ரதியின் பரிபூர்ண உருவம் அவன் மனதில் பதிவு பெறவில்லை. அவன் அமைக்க நினைத்த ரதியின் உருவத்திற்கெல்லாம், ஏதோ குறைபாடு இருப்பதாக அவனுடைய சிற்பத் திறமை குறை கூறிக் கொண்டிருந்தது. ரதியின் பரிபூரண சௌந்தர்யத்தைக் கற்பனை பண்ணுவதற்காக, ஏகாந்தமான இடங்களை நாடிச் சென்றுன் மாதவன்.

* * *

மனதை மயக்கும் மாலை வேளை. அரண்மனை உத்யான வனத்தில் பக்ஷி ஜாலங்கள் அன்று தங்களுக்கேற்பட்ட இன்பகரமான அனுபவங்களையெல்லாம் இனிய ஒலிகளின் மூலம் தெரிவித்துக் கொண்டிருந்தன. தூய தவசிகளின் உள்ளம் போன்று நிர்மலமாக இருந்த தடாகத்தில் சில அல்லிப் புஷ்பங்கள், மதியைக் காண்பதற்காக அங்குமிங்கும் ஆடி அசைந்து கொண்டிருந்தன. சூரியன் மலை வாய்க்குள் விழப் போவதைக் காண வேண்டா மென்றோ என்னவோ தாமரைக் கன்னி தன் அழகிய முகத்தை மூடிக் கொண்டாள். இவ்விதமான இயற்கைத் தேவியின் திருலீலைகளை மாதவன் கவனிக்கவே இல்லை. எட்டாப் பொருளை எட்டிப் பிடிக்க முயலும் துறவியைப் போல ஒரு பாரிஜாத மரத்தின் கீழ் வெகு நேரமாக சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

"சிற்பியே, உன்னுடைய கற்பனைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை நீ மறந்து விட்டாய்! உனது கற்பனைத் திறமைக்கு அப்பாற்பட்டதைக் காண ஏன் வீண் முயற்சி செய்கிருய்! இப்பொழுது உன் மனதில் உருக்கொண்டுள்ள ரதியின் கற்பனையே உலக மக்களைத் திகைக்கச் செய்யும்......... எழுந்திரு, வீணுக மனதைக் குழப்பிக் கொள்ளாதே!" என்று மாதவனுடைய கற்பனைத் திறமை அவனுக்கு ஒரு முடிவைக் காட்டி விட்டது.

தயங்கிய மனதுடன் எழுந்து நின்றுன் மாதவன். எழுந்தவுடன் திடீரென்று ஞானுதயம் ஆனவன் போல தடாகத்தை நோக்கினுன். அப்பொழுது அவனது கண்களில் புதியதோர் பிரகாசம் காணப்பட்டது. தடாகத்தின் அருகில் அரசகுமாரி கனகவல்லி தன் தோழிகளுடன் நின்று கொண்டிருந்தாள். துக்கத் தடாகத்தில் தவித்துக் கொண்டிருந்த தாமரைக் கன்னி, கனகவல்லியின் கைகளில் அமர்ந்து ஆறுதல் பெற்றுக் கொண்டிருந்தாள்.

மாதவனுடைய கலைக் கண்கள் கனகவல்லியின் அழகைப் பரிபூரணமாகக் காணத் துடித்தன. திறந்த விழிகளை மூடாமல் தடாகத்தை நோக்கி நடந்தான் சிற்பி.

தன்னை நோக்கி வரும் இளைஞன் தான், கோவிலின் அற்புதமான சிலைகளை வடித்தெடுத்த சிற்பி என்பதை, கனகவல்லி தன் தோழிகள் மூலம் அறிந்து கொண்டாள். மாதவன் தங்கள் அருகில் வந்ததும், கனகவல்லி அவனை நமஸ்கரித்தாள். சிற்பியின் கண்கள் புன்னகையோடு கூடிய அரசகுமாரியை, விழுங்கி விடுவது போலப் பார்த்தன. அடுத்த விநாடியில் மாதவன் சுய உணர்வை அடைந்தான். அரச குமாரியின் எதிரே தான் அவ்வாறு நின்று கொண்டிருப்பது, உலக ஆசாரத்திற்கு ஏற்றதல்ல என்று அவனுக்குத் தோன்றியது. உடனே

அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கோவிலை நோக்கி நடந்தான். சிற்பியின் லக்ஷிய ரதியை மூடிக்கொண்டிருந்த கல்த் தூள்களை, அவனுடைய கை உளி வெகு விரைவாகச் செதுக்கித் தள்ளியது.

இரண்டே நாளில் ரதியின் உருவம் பூரணமாக அமைந்து விட்டது. விமலாதித்யன் ரதியின் சிலையைப் பார்வையிட வந்தான். மூடு பல்லக்கில் வந்திறங்கிய கனகவல்லி மறைவான ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

புதிய சிலையைப்பார்த்த அரசன் கண்கள் சட்டென்று கனகவல்லியின் பக்கம் திரும்பின. உடனே அவனது மனதில் பெரும் புயல் எழுந்து மோதியது. "சிற்பி, இது ரதியின் சிலையா?" என்ருன் அரசன். அரசனுடைய கேள்வி மாதவனுக்கு ஒரு புதிராக இருந்தது. "ஆமாம் அரசே" என்று சாதாரணமாகச் சொல்லி விட்டுத் தலை வணங்கினன் மாதவன். அங்கிருந்த யாவரும் ரதியின் அழகைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். அரசனுடைய மனதில் மட்டிலும், எதிர்காலத்தில், பாண்டிய குலத்திற்கே இழிவு தரும் ஒரு கற்பனைக் காட்சி தோன்றி வருத்திக் கொண்டிருந்தது. ரதியின் சிலையைப்பற்றி வேறு ஒன்றுமே பேசாமல் அரசன் அரண்மனைக்குத் திரும்பி விட்டான்.

அற்புதமான ரதியைக் கல்லில் வடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில் சிற்பியின் மனம் திளைத்துக் கொண்டிருந்தது. அரசனுடைய கேள்வியைப் பற்றியும் கோபப் பார்வையைப் பற்றியும் மாதவன் அதிகமாகக் கவலைப்படவில்லை. "கலைஞனுடைய கற்பனைக்கும் எட்டாத ஒரு அழகைப் பிரமதேவன் கனகவல்லிக்கு அளித்திருக்கிருன். அந்த அழகையே உலகில் அழியாச்சிலையாக வார்த்து விட்டோம். அரசன் இதைப் பெரிதும் பாராட்டுவான்" என்றே சிற்பி எதிர்பார்த்திருந்தான். விமலாதித்யன் மனதில் எழுந்த குமுறல்களை மாதவன் உணர்ந்து கொள்ளவே இல்லை. கோவில்ச் சுற்றுப் புறங்களில் நிர்மாணிக்க வேண்டிய சிலைகளைப் பற்றிக் கற்பனைசெய்துகொண்டே சிற்பி தன் வீட்டுக்குச் சென்று விட்டான்.

* * *

மறுநாட் காலை, மாதவன் அரண்மனை உத்தியான வனத்தின் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தான்.

"சிற்பி!"

மாதவன் பின்புறம் திரும்பினன். உத்தியான வனத்தினுள் அரசகுமாரி பூக்கொய்து கொண்டிருந்தாள்.

"அம்மா, நமஸ்காரம், நீங்கள் தானே கூப்பிட்டீர்கள்?"

"ஆமாம், தாங்கள் வார்த்திருக்கும் சிலைகளில் ஒன்று மட்டும் சரியாக அமையவில்லை. அதைக் கூறுவதற்காகவே நான் உங்களை அழைத்தேன். மன்னிக்க வேண்டும்!"

"குறை பாட்டை தைரியமாக எடுத்துக் கூறும் தங்களுடைய கலை அறிவை மெச்சுகிறேன். தாங்கள் குறிப்பிடும் சிலை எது வென்று நான் அறியலாமோ?"

"ரதிக்கேற்ற மன்மதனைத் தாங்கள் சிருஷ்டிக்கவில்லை. இந்த ஒரே குறைபாடுதான் தாங்கள் அமைத்துள்ள சிலைகளில் நான் கண்டேன்"

"என் கற்பனை ஓட்டம் அதற்கு மேல் போகவில்லை!"

"ஆண்மையின் பரிபூரண அழகை ஆண் அறிய முடியாது தான்." "உண்மை! அரசகுமாரி தாங்கள் ஒரு சிறந்த ரசிகை, தங்கள் அபிப்பிராயப்படி மன்மதன் சிலை எவ்வாறு இருக்க வேண்டு மென்று தெரிவிப்பீர்களோ?"

"தாங்கள் ஒரு நிலைக்கண்ணாடியின் முன் நிற்கும்போது, மன்மதன் உருவத்தைப் பார்த்திருக்கலாமே!......"

மாதவனுடைய கலைக்கண்கள் காதல் கண்களாக மாறின. ராஜகுமாரிக்கு அவன் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அவளுடைய முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த மோகனப் புன்னகை ஒன்றையே உற்று நோக்கிக் கொண்டு நின்றான். உலகத்தையே மயக்கும் அந்தப் புன்னகையின் அர்த்த பாவத்தை மாதவன் ஒரே வினாடியில் உணர்ந்து கொண்டான்...... கனகவல்லியிடம் ஏதோ கூற முயன்றான். ஆனால் பேச முடியவில்லை. இதே சமயத்தில் கனகவல்லியின் தோழிகள் அவளைத் தேடிக்கொண்டு வந்தார்கள். அரசகுமாரி மாதவனிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டாள்.

மாதவன் வீட்டை நோக்கித் திரும்பினான். அவனுடைய மனதில் புதுப்புது உணர்ச்சிகள் திடீரென்று தாக்க ஆரம்பித்தன. கலைமயமாகத் தோன்றிய உலகம் இப்பொழுது காதல் மயமாகவே காக்ஷியளித்தது. நிலைக் கண்ணாடியின் முன் நின்று தன் அழகையே திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ந்தான்.

இரண்டொரு நாளில் கோவில் தூணில் இருந்த மன்மதன் மறைந்து விட்டான். அதற்குப் பதிலாகத் தன்னுடைய உருவத்தையே அந்த இடத்தில் செதுக்கிக் கனகவல்லியின் ஆவலைப் பூர்த்தி செய்தான் மாதவன். ராஜகுமாரியின் காதலை அழியாச் சிற்பமாக ஸ்தாபித்துவிட்டோம் என்ற ஒரு ஆனந்தத்தைத் தவிர வேறு ஒன்றும் சிற்பியின் மனதில் இடம் பெறவில்லை. தேன் உண்ட வண்டைப்போல உல்லாசமாகச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான்.

* * *

ஒரு நாள் இரவு, எதிர்பாராதபடி விமலாதித்யன் மாறு வேஷத்தோடு மாதவனுடைய வீட்டினுள் நுழைந்தான். வந்தது அரசன் என்று அறிந்ததும் சிற்பி தகுந்த மரியாதைகளோடு அவனை வரவேற்றான். அரசன், மாதவன் அளித்த உபசாரங்கள் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளாமல் பரபரப்போடு நின்று கொண்டிருந்தான். அவனது கண்கள் கோபத்தால் ஜொலித்தது.

"மாதவா, பாண்டிய குலத்தை உலகம் உள்ளளவும் இழிவு படுத்துவதுதான் உனது லக்ஷியமா?"

"அரசே, மன்னிக்கவேண்டும்! என்னுடைய லக்ஷியம் அதுவல்ல!"

"மன்மதன் சிலையை உன் உருவமாகவும் ரதியின் சிலையை கனகவல்லியின் உருவமாகவும் செதுக்கியதின் நோக்கமென்ன?"

"தற்போதைய பாண்டிய நாட்டின் பெண்மை அழகையும், அவர்களது பரிசுத்தமான காதலையும் உலகம் உள்ளளவும் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு காட்சியாகவே இவைகளை சிருஷ்டித்தேன்."

"என்ன சொன்னாய்? காதல்! பாண்டிய குலப் பெண்கள் அரசகுலத்தினரைத் தவிர வேறு யார் மீதும் காதல் கொண்டதில்லை என்பது உனக்குத் தெரியாதா?"

"அரசே மன்னிக்க வேண்டும். காதலுக்கு, குலம், இனம் ஆகிய வேற்றுமை கிடையாதே!"

"மாதவா, பிதற்றுதே! என் மானம் போகிறது. வேறு யாரேனும் இத்தகைய குற்றம் செய்திருந்தால், இந்த வாள்தான் அவர்களுக்குப் பதில் சொல்லும்! கலா தெய்வம்தான் இப்பொழுது உன்னைக் காத்து நிற்கிறதென்பதை உணர்ந்துகொள்."

"மன்னவா, என் மீது கோபிக்க வேண்டாம்! இனித் தங்கள் ஆக்ஞைப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேன்"

"அந்தச் சிலைகள் இரண்டையும் அங்கிருந்து அகற்றிவிட வேண்டும்"

"அரசே, அது முடியாத காரியம்! கோவில் முகட்டின் பாரம் முழுவதும், அந்தச் சிலைகளோடுள்ள தூண்களின்மீது தான் அழுத்திக் கொண்டிருக்கிறது."

"சிற்பி, என் குலப் பெருமை இத்துடன் அழிவதற்கு வழிதேடி விட்டாய்! பாண்டியனுக்குக் கலைப் பெருமையைக் கொடுத்துக் குலப் பெருமையை ஒழித்து விட்டாய்!"

"அரசே, உங்கள் குற்றச்சாட்டு விபரீதமாகவே இருக்கிறது. ரதியின் சிலையை இவ்வளவு அற்புதமாகவும் திருப்திகரமாகவும் முடிப்பதற்குக் கனகவல்லியின் அழகிய உருவம்தான் எனக்கு உற்ற சமயத்தில் கை கொடுத்து உதவியது. மன்மதன் சிலையை என் உருவாக அமைத்ததற்கு நான் பொறுப்பாளி அல்ல! அது கனகவல்லியின் வேண்டுகோள்."

"வேண்டுகோளா, அவளுக்குத் தகுந்த தண்டனை நான் விதிக்கிறேன்!"

"அந்த தண்டனையை நானே ஏற்றுக் கொள்கிறேன். விருப்பம் தான் அவளுடையது. அதை நிறைவேற்றியது நான்தான். ஆகையால் நானே தண்டனைக் குரியவன்."

"மாதவா, நீ இனிமேல் அரசகுமாரியைப்பற்றிப் பேசவோ சிந்திக்கவோ கூடாது. சிலைகளைச் செதுக்குவதே உனது தொழில்!" என்று கூறி விட்டு அரசன் அங்கிருந்து மாறு வேஷத்தில் மறைந்து விட்டான். அன்று முதல் நாலைந்து நாட்களாக மாதவன் தன்வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை. பின்பு கடமை அவனைக் கோவிலுக்கு இழுத்துச் சென்றது.

கோவிலின் உள் பிரகாரத்தில், தேவ கன்னிகைகளின் நடன பாவங்களைக் கற்களில் சித்திரிக்க வேண்டுமென்று முன்னமே திட்டம் போடப் பட்டிருந்தது.

அதன்படியே பல்வேறு நாட்டிய முத்திரைகளுடன், ரம்பை, திலோத்தமை, மேனகை, ஊர்வசி ஆகிய தேவ மாதர்களைச் செதுக்கினன் மாதவன். பிரகாரத்தின் பாதியளவிற்குச் சிற்ப வேலைகள் முடிந்தவுடன், அரசன் அவைகளைப் பார்வையிட வந்தான். தேவமாதர்களின் சிலைகளைக் கண்டவுடன், மலர்ந்திருந்த அரசனுடைய முகம் சிவந்தது. புருவங்கள் நெற்றிக் கேறின, மீசை துடித்தது, கண்கள் அனலைக் கக்குவதுபோல விழித்தன. அருகில் நின்ற மாதவனைக் கரகரவென்று இழுத்துக்கொண்டு ஒரு தனியிடத்திற்குச் சென்றான் அரசன்.

மிகுந்த கோபத்துடன், "ரம்பை ஊர்வசி, மேனகை, திலோத்தமை எல்லோருமே கனகவல்லியின் உருவத்தோடு தானிருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"அரசே, மன்னிக்க வேண்டும். நான் எவ்வளவுதான் முயன்றாலும் கனகவல்லியின் உருவத்தைத் தவிர வேறு உருவத்தையே என்னால் செதுக்க முடியவில்லை. வேறு உருவம் என் மனதில் பதிய மறுக்கிறது. மனதில் பதிந்ததைத் தான் என் உளி செதுக்குகிறது."

"மாதவா, யாரிடம் நீ வார்த்தையாடுகிறாய் என்பதை மறந்து விட்டாய்! மனமாம் உருவமாம்! நன்றாயிருக்கிறது. உன் மனதைத் திருப்ப நான் வழி காட்டுகிறேன்"

"அந்த வழியை நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன், அரசே!"

"இது முதல் நீ செதுக்கும் சிலைகளில் கனகவல்லியின் சாயல் சிறிதேனும் காணப்பட்டால், உன் தலை இவ்வாளுக்கு இரையாகும். இதுவே நான் காட்டும் வழி!"

"அப்படியானால் கனகவல்லியின் உருவத்தை என் மனதிலிருந்து அகற்றுவதற்குப் போதிய அவகாசம் கொடுங்கள். அதன் பின்பு சிற்பங்களைச் செதுக்க ஆரம்பிக்கிறேன்."

"மாதவா, முழு மனதுடன் முயற்சித்தால், எத்தகைய ஆசையையும் மனதிலிருந்து அகற்றி விடலாம்! அதற்கு வேண்டிய மனோவலிமையைக் கடவுள் உனக்கு அளிப்பார்."

மாதவன் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான். அதன் பின்பு ஆறுமாத காலமாக மாதவனை யாருமே பார்க்கவில்லை. மாதவனைக் காண வேண்டுமென்று அரசன் துடித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டு பிடிப்பதற்காக அரசன் பல ஒற்றர்களை அனுப்பி வைத்தான். சென்ற ஒற்றர்களின் முயற்சி எல்லாம் வீணாயிற்று. கிருஷ்ணபுரத்தைச் சிலா பொக்கிஷமாக ஆக்க நினைத்த விமலாதித்யனது மனக்கோட்டை முற்றும் உருப் பெறாமல் நின்றது. உள் பிரகாரச் சிற்பங்கள் முடியாததால், வெளிப் பிரகாரச் சிற்ப வேலைகளும் அப்படியப்படியே நிறுத்தப்பட்டன. அரசனது உள்ளம், கலாதேவனது அம்சம் பெற்ற மாதவனையே நினைத்து நினைத்துப் புண்பட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று மாதவன் ஆதிச்சநல்லூர்ப்பரும்பிலுள்ள குகை ஒன்றில் இருப்பதாக ஒரு ஒற்றன் அரசனிடம் வந்து கூறினான். ஒற்றன் கூறிய செய்தி விமலாதித்யனுடைய காதுகளுக்கு அமிர்தகானமாகவே இருந்தது. தன் குமாரி கனகவல்லியுடன் மாதவனைக் காண்பதற்காகப் புறப்பட்டு விட்டான் அரசன். மூவரும் குகைக்குள் நுழைந்தனர். மாதவன் அங்கு காணப்படவில்லை. ஆனால் அவர்கள் மாதவனுடைய சுதந்திரக் கைகள் செதுக்கிய கனகவல்லியின் சிலைகளை குகைச் சுவர் முழுதிலும் கண்டார்கள். அந்தச் சிலைகள், தன்னைக் கண்டு நகைப்பது போலிருந்தது அரசனுக்கு. குகை உடனே மூடப்பட்டது.

சிற்பியின் லட்சியம்—அரசனுடைய பாழ்பட்ட லட்சியச் சின்னங்களையும் கிருஷ்ணபுரம் கோவில் உலகத்திற்கு இன்னும் பறையடித்துத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

★

கிராம்யக்காட்சி:

இயற்கையின் இன்பத்தையும் இளம் பெண்களுடைய உல்லாசத்தையும் ஒருவிதமாக வர்ணித்தாகி விட்டது. இனி, அவர்களுக்கு வரப்போகும் மாப் பிள்ளைகளைப் பற்றி பேசத் தொடங்குகிறள்.

பொழுது போக்கு

"ரதி"

நாகரிக நங்கையருக்குப் பொழுது போகா விட்டால், என்னவாவது வீண் வம்பு பேசிக் கொண்டிருப்பார்கள். இல்லாவிட்டால் என்னத்தை யாவது அபத்தத்தை படித்துக் கொண்டிருப்பார்கள். ஆனல், நாட்டுப் புறத்திலே பொழுது போகவில்லையே என்ற கவலை யாருக்கும்—முக்கிய மாக இளம் பெண்களுக்குக் கிடையாது. ஏட்டுப் படிப்புக் குப் பதிலாக காட்டுப் படிப்பு (இயற்கை) அவர்களுக்குக் கண் எதிரே அழகுடன் கட்டோடு விரிந்து கிடக்கிறது. இயற்கையில் காணும் எவ்வளவோ காட்சிகள் அவர்கள் உள்ளத்திலே இடம் பெற்று விடுகிறது. பாடுபரப்பிலே நேரம் போக்குவதைத் தவிர, சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தாலே—அதில் கூட ஒரு தனி ஆனந்தத்தை அனுபவிக் கிறார்கள்.

சில வேளைகளில் இந்தக் கன்னியர்களைத் தேடி குறி சொல்லும் குறத்திகள் வருவதுண்டு. அவர்கள் கூடை முறம் கட்டித் தருவதோடு உல்லாசமாகப் பொழுதைப் போக்க வேடிக்கையான கதைகளையும், காட்சிகளையும் பாமரப் பாடல்களிலே இனிமையாக இசை ததும்பப் பாடுவார்கள். தாங்கள் போன இடங்களில் அனுபவித்த அனுபவங்களை இளம் பெண்கள் ஆசையுடன் கேட்கும் முறையில் சொல்வதற்கு ரொம்ப நன்ருக அவர்களுக் குத் தெரியும். அதிலே ஒன்று இது:

ஊசி போலே மின்னி மின்னி
ஊரடங்கிப் பெய்யும் மழை
பாசி போலே மின்னி மின்னி
பட்டண மெங்கும் பெய்யும் மழை
சந்து சந்தா மின்னி மின்னி
சலமூலை காலிறங்கி
சடுதியிலே பெய்யும் மழை

* * *

இடி இடிக்க மழை பொழிய
இரு கரையும் வெள்ளம் பெருகி வர
பெருகிவரும் சலத்தினிலே
பெண்க ளெல்லாம் நீராட
நீராடி நீர் குளிச்சு
நீல வர்ணப் பட்டுடுத்தி
பட்டு நெலம் தூர்க்க
பவளக்கால் தேரோட
தேரோட தேரோடத்
தெப்பலமே தேரோட.

இந்தப் பாட்டுக்குப் பொருள் சொல்ல வேண்டிய அவசிய

மில்லே. ரொம்பவும் சாதாரண மாக இருப்பதால் கேட்கும் பெண்களே புரிந்து கொள் வார்கள். பிறகு அந்த வம்புக் காரப் பெண்கள் குறத்தியின் வாயைக் கிளறுவார்கள். அவ ளும் வேடிக்கையாகப் பேசத்தானே வந்திருக்கிருள். இயற்கையின் இன்பத்தையும், இந்தப் பெண்களுடைய உல் லாசத்தையும் ஒருவிதமாக வர்ணித்தாகி விட்டது. இனி. அவர்களுக்கு வரப் போகும் மாப்பிள்ளேகளேப் பற்றி பேசத் தொடங்குகிருள். அதற்கு முன்பு இந்தச் சுந்தரி களின் ரூபலாவண்யத்தையும் விவரிக்க ஆரம்பிக்கிருள்.

பூப்பட்டாக் கொப்புளிக்கும்
பொன்னுந் திருமேனி
தண்ணி பட்டாக் கொப்புளிக்கும்
தங்கத் திருமேனி.

அடேயப்பா! 'பூவால் அடிப்பதைப் போல்' என்று விளேயாட்டுக்குச் சொல்வார் கள். ஆனல், பூப்பட்டாலும் கொப்புளித்து விடுகிற அந்தத் 'தங்கத் திருமேனி'யின் வன ப்பை என்ன வென்றுதான் சொல்வது! அதற்காக மேலே ஒன்றும் சொல்லாமல் சும்மா நிறுத்தி விடுவாள். அந்தப் பெண்களா சும்மா விட்டுவிடு கிறவர்கள்? மேலே சொல் லும்படி தொந்தரவு செய்வார் கள். பிறகு குறத்தி இந்த ரதி களுக்கு ஏற்ற மன்மத வர்ண னேயை ஆரம்பிப்பாள்.

சாமி நடையைப் போல்
சாயலிலும் கண்ட தில்லே.

என்று சொல்லி நிறுத்திக் கொள்வாள். அப்புறம் சுக மாகப் பொழுது போவதைப் பற்றிச் சொல்லவா வேணும்?

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே.சண்முகம் செட்டியார்

மங்கல வாழ்த்துப் பாடல்

(தொடர்ச்சி)

(40—53) மாநாய்கனும், மாசாத்துவானும் புகார் நகரத்தில் பெரிய பணக்காரர்கள். இருவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு வீட்டில் லட்சுமி போன்ற பெண் இருக்கிறாள். மற்ற வீட்டில் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளை இருக்கிறான். கலியாணத்தைப் பற்றிக் கேட்பானேன்? கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் செய்துவிட வேண்டுமென்று அவர்களுடைய தாய் தந்தையர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

முடிவு செய்தால், உடனே காரியத்தை நிறைவேற்ற வேண்டியது தானே: முதலில் திருமணத்தைப் பற்றி ஊராருக்குச் செய்தி சொல்லி அவர்களை அழைக்க வேண்டும். யானையின் மேல் அழகிய பெண்களை ஏற்றினார்கள். இந்தப் பெண்கள் சந்தனம், குங்குமம், மஞ்சள் முதலியவைகளை எடுத்துக் கொண்டு வீடுகள் தோறும் போய் எல்லோரையும் கல்யாணத்திற்கு வரவேண்டுமென்று அழைத்தார்கள்.

ஊரார் எல்லோரும் வாழ்த்துவதற்காகத் தாலியை (திருமாங்கல்யம்) வாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்துப் போனார்கள். ஒரு புறம் முரசு ஒலித்தது; மத்தளத்தின் ஒலி ஒரு புறம்; சங்கொலி ஒரு பக்கம். வெண்பட்டுக் குடைகள் ஓங்கி நிறைந்திருக்கின்றன. இந்த விமரிசையுடன் தாலியை ஒரு பொன் தட்டில் வைத்து ஊர் வீதிகளில் எடுத்துச் சென்றார்கள்.

இனிக் கல்யாண வீட்டில் வைபவத்தைப் பார்ப்போம். கல்யாண மண்டபமோ வயிர மணி பதித்த தூண்களையுடையது. மேலே பூமாலைகள் கணக்கில்லாமல் தொங்க விடப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்தின் மத்தியில் திருமணப் பந்தல் அமைக்கப் பட்டிருக்கிறது. பந்தலுக்கு மேல் நீலவர்ணப் பட்டு; பட்டின் கீழ் வெண் முத்தாரங்கள்.

பந்தலில் பெண்ணும் மாப்பிள்ளையும் உட்கார்ந்திருக்கிறார்கள். சந்திரன் ரோகிணியைச் சேரும் தருணம். அதாவது, அப்போது ரோகிணி நட்சத்திரம். நல்ல அனுபவமுள்ள பார்ப்பான் சடங்குகளை நடத்து

கின்றான். "அம்மி மிதித்து அருந்ததியைப் பார்த்தேன்" என்று சொல்லிக் கோவலன் கண்ணகியின் முகத்தைப் பார்க்கின்றான். பின் இருவரும் தீயை வலம் சுற்றி வருகின்றார்கள். என்ன இன்பமான காட்சி! இந்தக் காட்சியைக் கண்டவர்கள் தங்கள் முன் பிறப்பில் புண்ணியம் செய்தவர்களாயிருக்க வேண்டும்.

அவரை,
இரு பெருங் குரவரும் ஒரு பெரும் நாளான்
மண அணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி,
யானை எருத்தத்து அணி இழையார் மேல் இரீஇ,
மாநகர்க்கு ஈந்தார் மணம்.

அவ்வழி,
முரசு இயம்பின; முருடு அதிர்த்தன; முறை
எழுந்தன பணிலம்; வெண்குடை
அரசு எழுந்ததோர் படி எழுந்தன; அகலுள்
மங்கல அணி எழுந்தது.
மாலை தாழ் சென்னி வயிரமணித் தூணகத்து,
நீல விதானத்து, நித்திலம் பூம் பந்தர்க்கீழ்,
வான் ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழிக்காட்டிடத்
தீவலம் செய்து காண்பார்கள் நோன்பு என்னை!

பதவுரை

[அவரை — கண்ணகி, கோவலன் இருவரையும்; இரு பெருங் குரவரும் — அவர்களுடைய இரு பெரியோராகிய தாய் தந்தையர்கள்; ஒரு பெரும் நாளான் — ஒரு நல்ல நாளிலே; மண அணி காண — திருமணக் கோலத்தைச் செய்து காண விரும்பி; மகிழ்ந்தனர்;—மகிழ்துழி— அப்படி மகிழ்ச்சியடைந்ததும்; யானை எருத்தத்து — யானையின் மத்தகத்தில்; அணி இழையார் — அணிகலங்களையுடைய பெண்களை; மேல் இரீஇ — மேலே இருத்தி; மாநகர்க்கு ஈந்தார் மணம் — அந்நகரத்திற்குத் திருமணச் செய்தியைத் தெரிவித்தார்கள்.

அவ்வழி — அவ்விடத்தில்; முரசு இயம்பின — முரசுகள் ஒலித்தன; முருடு அதிர்ந்தன — மத்தளங்கள் அதிர்ந்தன; பணிலம் முறை எழுந்தன — சங்கு முதலியன முறையாக எழுந்து ஒலித்தன; வெண்குடை—; அரசு எழுந்ததோர்படி — அரசன் புறப்பட்ட காலத்தில் குடைகள் எழுந்தது போல; எழுந்தன — உயர்ந்தன; அகலுள் — ஊரெங்கும்; மங்கல அணி எழுந்தது — தாலியை ஊரார் வாழ்த்தும்படி எடுத்துச் சென்றார்கள்.

மாலைதாழ் சென்னி — மாலைகள் தொங்குகிற உச்சியையுடைய; வயிர மணித் தூணகத்து — வயிரமணி பதித்த தூண்களையுடைய மண்டபத்தில்; நீல விதானத்து — நீலப்பட்டினாலுள்ள மேற்கட்டியின் கீழ் உள்ள; நித்திலம் பூம் பந்தர் கீழ் — முத்துகள் தொங்க விடப்பட்டு அழகு நிறைந்த பந்தலில்.

வான் ஊர் மதியம் — வானத்தில் செல்லும் நிலா ; சகடு அணைய — உரோகிணி நட்சத்திரத்தில் சேர ; (அப்படிப்பட்ட ஒரு நாளில்) ; வானத்துச் சாலி — வானத்தில் உள்ள அருந்ததியாகிய ; ஒரு மீன் தகையாளை — விண் மீன் போன்ற கற்புடையவளை ; கோவலன் — கோவலனுடன் ; மாமுது பார்ப்பான் — சிறந்த முதிய பார்ப்பான் ; மறை வழி காட்டிட — நூல் முறைப்படி சடங்குகளைச் செய்து காட்ட ; தீவலம் செய்து — மணமக்கள் தீயைச் சுற்றிவர ; காண்பார்கள் — அந்தக் காட்சியைக் கண்டவர்களுடைய ; நோன்பு என்னை — நல்வினைதான் என்ன ?

எருத்தம் — மத்தகம் ; பணிலம் — சங்கு ; சென்னி — உச்சி ; விதானம் — மேற்கட்டி ; சாலி — அருந்ததி ; நோன்பு — நல்வினை.]

(54—67) தமிழ் மக்களுடைய கலியாணங்களில் பெண்களுக்குத் தான் முதன்மையான இடம். மங்களகரமான சடங்குகளைச் செய்ய வேண்டியது பெண்களுடைய வேலைதான். பார்ப்பான் தான் செய்ய வேண்டிய சடங்குகளை முடித்த பின், மற்ற சடங்குகளைச் செய்ய பெண்கள் வந்தார்கள். கண்ணைக் கவரும் அழகு விளங்கும் மேனியையுடைய பெண்கள் ; எடுப்பான இளமுலைகளையுடைய பெண்கள் ; முத்துப் போன்ற வெண்மையான பற்களையுடைய பெண்கள், பொற்கொடி போன்ற பெண்கள் — இவர்கள் வாசனைப் பொருள்களையும், மலர்களையும், சந்தனத்தையும், மங்கல விளக்குகளையும், முளைவிட்டிருக்கும் பாலிகைக் குடங்களையும், கைகளில் ஏந்தி புகழ் உரைகளையும் இசைப் பாட்டுகளையும் பாடிக்கொண்டு கலியாணப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் மங்கலப் படுக்கையில் இருத்தினர்கள். "உன் காதலனை விட்டுப் பிரியாமல், அவனை அணைந்த கைகள் நெகிழாமல், தீங்கில்லாத வாழ்க்கையாய் வாழ்வாயாக" என்று கண்ணகியையும், கோவலனையும் வாழ்த்தி அவர்கள் மேல் மலர்களைத் தூவினர்கள். பள்ளியறையில் இவ்விதம் மணமக்களை வாழ்த்தும் போது செங்கோல் செலுத்தும் அரசனை மறக்க முடியுமா? "இமய மலையில் எங்கள் சோழ மன்னன் நாட்டிய புலிக்கொடி பொன் மலையாகிய மேரு மலையிலும் நிற்பதாக! எல்லாத் திக்குகளிலும் போரில் வெற்றி பெற்ற எங்கள் செம்பியன் தனது ஆணைச் சக்கரத்தை ஒழுங்காகச் செலுத்துவோனாக!" என்று அரசனுக்கும் வாழ்த்தெடுத்தனர்.

விரை யினர், மலரினர், விளங்கு மேனியர்,
உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்;
சாந்தினர், புகையினர், தயங்கு கோதையர்,
ஏந்திள முலையினர், இடித்த சுண்ணத்தர்;
விளக்கினர், கலத்தினர், விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர், முகிழ்ந்த மூரலர்;

போதொடு விரி கூந்தல் பொலன் நறுங் கொடி அன்னர்,
"காதலன் பிரியாமல், கவவுக்கை ஞெகிழாமல்,
தீது அறுக," என ஏத்திச் சின்மலர் தொடு தூவி,
அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி ஏற்றினர்; தங்கிய
இப்பால் இமயத்து இருத்திய வாள் வேங்கை

**65. உப்பாலைப் பொற்கோட்டு உழையதா, எப்பாலும்
செருமிகு சினவேல் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே.**

பதவுரை

[விளங்கு மேனியர் — அழகு விளங்கும் மேனியையுடைய பெண்கள்; விரையினர் — வாசனைப் பொருள்களை உடையவராய்; மலரினர் — மலர்களை உடையவராய்; உரையினர் பாட்டினர் — புகழ் உரைகளையும் இசைப் பாட்டுக்களையும் பாடினவராய்; ஒசிந்த நோக்கினர் — ஒதுங்கிப் பார்த்த பார்வையினராயும்;

ஏந்து இள முலையினர் — எடுப்புற்ற இள முலைகளையுடைய பெண்கள்; சாந்தினர் புகையினர் — சந்தனத்தையும் வாசனைப் புகைப் பொருள்களையும் உடையவராய்; தயங்கு கோதையர் — விளக்கமுடைய கூந்தலையுடையவராய்; இடித்த சுண்ணத்தார் — இடித்த வாசனைப் பொடியையுடையவராயும்;

முகிழ்த்த மூரலர் — அரும்பிய வெள்ளைப் பற்களையுடைய பெண்கள்; விளக்கினர் கலத்தினர் — மங்கல விளக்குகளையும் அணிகலன்களையும் ஏந்தினவராய்; விரிந்த பாலிகை — விரிந்த பாலிகைப்பொருள்கள்; முளைக்குடம் நிரையினர் — முளைவிட்டிருக்கும் குடங்களை எடுத்தவராயும்.

போதொடு விரி கூந்தல் — பூக்கள் விரிந்த கூந்தலையுடையவரான; பொலன் நறும் கொடி அன்னார் — பொன்னால் செய்த நறு மணமுள்ள கொடி போன்ற (மேலே சொல்லப்பட்ட) பெண்கள்; காதலன் பிரியாமல் — தன் காதலனை விட்டு எப்போதும் பிரியாமல்; கவவுக்கை ஞெகிழாமல் — காதலனும் இவளைத் தழுவிய கைகள் நெகிழாமல்; தீது அறுக என ஏத்தி — தீங்கில்லாமல் வாழ்வாயாக! என்று வாழ்த்தி; சின் மலர் தொடு தூவி — சில மலர்களைத் தூவி; அங்கண் உலகின் — அழகிய இவ்வுலகத்தில் தோன்றிய; அருந்ததி அன்னாளை — அருந்ததி போன்ற கண்ணகியை; மங்கல நல் அமளி ஏற்றினார் — மங்கலப் படுக்கையிலே இருத்தினார்கள்;

தங்கிய இப்பால் இமயத்து — நிலை பெற்ற இமய மலையின் இப் பக்கத்தில் நாட்டிய; வாள் வேங்கை — ஒளி பொருந்திய புலிக் கொடியானது; உப்பாலைப் பொற்கோட்டு உழையதா — அப்பகுதியிலேயே அப் பொன்மலையிலேயே நிற்பதாக!; எப்பாலும் — எல்லாத் திசைகளிலும்; செருமிகு — போர்த் தொழிலில் மேம்பட்ட; சினவேல் செம்பியன் — சினம் மிகுந்த வேலையுடைய சோழன்; ஒரு தனி ஆழி— தனது ஒப்பற்ற ஆணைச் சக்கரத்தை; உருட்டுவோன் என — ஒழுங்காகச் செலுத்துவோனாக என்று (மேலே சொன்ன பெண்கள் வாழ்த்தினார்கள்)

விளங்கு மேனியர், ஏந்து இள முலையினர், முகிழ்த்த மூரலர் என்ற மூன்று வகைப் பெண்கள் மங்கலப் பொருள்களையும் வாசனைப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு கண்ணகியை மங்கலப் படுக்கையில் இருத்தி மணமக்களையும், சோழ மன்னனையும் வாழ்த்தினார்கள்.

விரை — நறுமணம்; உரை — புகழ்; கவவுதல் — தழுவல்; ஆழி — ஆணைச்சக்கரம்;]

(மங்கல வாழ்த்துப் பாடல் முற்றிற்று.)

குழந்தையின் மழலைச் சொற்கள் ஒவ்வொன்றும் என் உள்ளத்தை மெழுகுபோல் உருக்கிற்று. சின்னஞ் சிறு குழந்தையிடம் எத்தனை அன்பும், ஆதரவும், தயவும் நிரம்பிக் கிடக்கிறது. நானோ? சொல்லவே வேண்டாம்!

பச்சைப் பாவாடை

[ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்]

எங்கள் ஊர் பெண்கள் சங்கத்தின் வருஷ விழா முதல் நாள் தான் நடைபெற்றிருந்தது. அச் சங்கத்தில் நானும் ஒரு முக்கிய அங்கம் வகிப்பவள் ஆதலால் பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பிருந்தே எனக்கு அசாத்தியமான வேலையிருந்தது. வீட்டிலே ஒரு கலியாணமாகி சம்பந்திகளை ஊருக்கு அனுப்பி வைத்தால் அன்று எப்படி அமைதியும் அலுப்பும் ஏற்படுமோ அப்படியே இருந்தது எனக்கு. குழந்தை பத்மா பள்ளிக் கூடத்திற்கும் அவர் கச்சேரிக்கும் போன பிறகு போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு படுக்கையில் படுத்தேன். மறுபடி சாயங்காலம் நாலுமணிக்குத்தான் கண் விழித்தேன் என்றால் என்னுடைய அலுப்பு எவ்வளவு என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்.

சமையல்க்காரன் கொண்டுவந்து கொடுத்த காப்பியை மட மட வென்று வாயில் ஊற்றிக் கொண்டு சுருண்ட கூந்தலை ஒழுங்கு படுத்த ஆரம்பித்தேன். அரை நொடியில் முகம் கழுவி பொட்டிட்டு பூவும் வைத்துக் கொண்டேன். ஏன் இவ்வளவு அவசரம் என்றால் நான் ஒரு நாளும் மத்தியானத்தில் தூங்குவது இல்லை. இன்றைக்கு எனக்கே வெட்கம் பிடுங்கித் தின்றது. அவரும் பத்மாவும் வருவதற்குள்ளாக அலங்கரித்துக் கொண்டு என் தூங்கு மூஞ்சியை சீர் படுத்திக் கொள்ளவே இத்தனை அவசரம்.

“அம்மா, அம்மா, ஆ ஆ, அம்மா ஆ, ஆவ்......” என்று குதித்துக் கொண்டே என் தங்கம் பத்மா ஓடோடியும் வந்து கையிலிருந்த புத்தகப் பையை மேஜை மீது வீசியெறிந்து விட்டு என்னை வந்து கட்டிக் கொண்டாள்.

“வாடா, கண்ணே, சீக்கிரம் காப்பி பலகாரம் சாப்பிடலாம் வா” என்று குழந்தையை சமயல் அறைக்கு அனுப்பிவிட்டு முன் வாசல்ப் பக்கத்திற்கு வந்தேன்.

கொஞ்ச நேரத்தில் பத்மாவும் ஓடி வந்தாள். தலைவாரி விடலாம் என சீப்பை எடுத்துக் கொண்டு வந்தேன். அப்போது வேலைக்காரி கருப்பாயி வந்து, “தாயி தாயி” என்று கெஞ்சும் குரலில் சொல்லிக் கொண்டு புடவைத் தலைப்பில் போட்டிருந்த சிறு முடிச்சை அவிழ்க்க ஆரம்பித்தாள்.

“தாயுக்கு என்னவாம்?”

“இல்லை தாயி......மூணாவது ஊட்டு அம்மாங்கோ இப்பொ தானுங்க ரண்டு மாச சம்பளம் அஞ்சு ரூவாயும் கொடுத்தாங்க...”

“செரி, உன் கடனைத் தீர்த்து விட்டு போயேன். இந்தா, இப்படி அந்த ரூபாயைக் கொடு......”

"இல்லையம்மணீ......கொளந்தை காயலா கிடக்கரப்பொ நீங்க உவ காரம் செய்யாங் காட்டீ என் கொளந்தை உசுரோடே பொளெச்சிருக்குமா. எங்க ஊட்டு குலம் விளங்க செஞ்சீங்க. அம்மணீ! ஒங்க கிட்டே இன்னும் ஒரே ஒரு உவகாரம் ஆக வேண்டி இருக்குது. அதை செஞ்சு......"

"என்னடீ, அந்த எழவு? மறு படியும் கழுத்தை அறுக்க வந்திட்டாயா, என்ன? எனக்கு பேச இப்பொழுது நேரமில்லே. பேசாமே அந்த ரூபாயை இப்படிக் கொடுத்திட்டு போ" என்று அதட்டினேன்.

"அம்மணீ, இந்த ஒரு வாட்டியும் பொறுத்துக்குங்க. அடுத்த மாசம் ஒங்க அஞ்சு ரூவாயையும் கட்டாயம் கொணாந்து கட்டிடறேன். கொளந்தை காச்சலிலே, "சின்னம்மாங்க கட்டிக்கிற பச்சைப் பாவாடையாட்டமா எனக் கொண்ணு வேணும், வேணும்" ணாட்டு கத்திக் கிட்டே கிடந்துங்க. காய்லா வாசியானதும் வாங்கிதாரேனு சொல்லிட்டேங்க. அதையே பிடுச்சு கிட்டு என்னை சும்மா தொந்தரவு செய்யுதுங்க. தயவு செஞ்சு என்ளை மேலே மனசு வச்சு இந்த ரூவாய்க்கு அதே மாதிரி ஒரு பச்சைப் பாவாடை வாங்கி குடுத்திடுங்க அம்மணீ, கோடி புண்ணியமுங்க. எங்கிட்டே கடைக்காரன் ஏமாத்தியிடறான். ஒங்க பணத்தை வரமாசம் கட்டாயம் கொணாந்து கட்டிடறேன்......"

"அதெல்லாம் முடியாதகாரியம். இப்படி பணத்தை கொடுக்கிறாயா இல்லையா?" என்று அதட்டிவிட்டு பின்னலையும் பின்னி முடித்தேன்.

"கொடுக்கத்தான் வந்தேனுங்க......என்னை மேலே தயவு வச்சு......" என்று கண் கலங்க, கை நடுங்க, முடிச்சை அவிழ்த்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து, என் முன்னிலையில் வைத்துவிட்டு, பிறகு என் மனது ஒரு வேளை திரும்புமோ வென்ற ஆவலுடன் திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்றாள் கருப்பாயி.

நான் ரூபாய் நோட்டை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டேன். பத்மா "அம்மா" என்று ஏதோ சொல்வதற்கு வாய் திறந்தாள். அவளையும் அதட்டிவிட்டு வாயை அடக்கினேன். அதற்குமேல் அவளும் வாயைத் திறவாமல் 'கப் சிப்' என்று அவ்விடத்திலிருந்து எழுந்து போய் விட்டாள். அச்சமயம் சேவகன் முனியன் தினசரி பத்திரிகையை கொண்டு வந்து கொடுத்தான். அப்படியே தினசரியைக் கையிலெடுத்து மேலோட்டமாக தலைப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். உடனே கொட்டை எழுத்தில் பின் வருமாறு பிரசுரித்திருக்கும் விஷயம் என் கண்ணில் பட்டது.

எளியாரை வலியார்

வாட்டினால்?

வலியாரைத் தெய்வம்

வாட்டும்!

கொட்டப் பாளயம் போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீமான்.........அவர்கள் ஏதோ அலுவலாக வெளியூர் போய்த் திரும்பியவர் நேற்று கொட்டப் பாளயம் ஸ்டேஷனில் ரயிலிலிருந்து இறங்குகையில், ஒரு பிச்சைக்காரப் பெண் அவரை அணுகி பிச்சை கேட்டாள். அவர் அவளை அப்பால் போகும்படி அதட்டினார். மறுபடியும் அந்தப் பிச்சைக்காரி, அவரை விடாமல் தொடரவே கோபத்தால் ஓங்கி உதைத்து விட்டார்.

அவருடைய பூட்ஸ் கால் அந்தப் பெண்ணின் அடி வயிற்றில் பட்டு, பெண் மூர்ச்சை போட்டு கீழே விழுந்து விட்டாள். 'பூட்ஸ்' கால் பட்ட இடத்தில், கன்னிப்போய் வயிற்றின் உள்ப்புரம் ஒரே ரண மாகி, அன்றைக்கு பதினைந்தாம் நாள் அந்த சிறுமி இறந்து விட்டாள். அதிசயம் என்னவென்றால் அதேபோல், அந்த போஸ்ட் மாஸ்டரின் அதே வயது பெண்ணுக்கும் அடிவயிற்றில் ரணம் கண்டு பதினைந்தே நாளில் மரண மடைந்தாள்.

இதைப் படித்ததும் என் உடம்பு நடுங்கிற்று. என் செல்வம் பத்மா விற்கு பத்து நாட்களாக கடுமை யான ஜுரம். டாக்டர் அப்பொழுதுதான் வந்து பார்த்துவிட்டு குழந்தை பிழைப்பது கஷ்டம் **என்று** சொல்லி விட்டு ஏதோ மருந்து எழுதிக் கொடுத்து விட்டு போனார்.

கண்மணி பத்மா கண்ணைத் திறந்தாள். "அம்மா," என்று மெதுவாக அழைக்கவே "என்ன செல்லம்" என்று குழந்தை நெற்றியை தொட்டுப் பார்த்தேன். நெருப்பாய்க் கொதித்துக் கொண்டிருந்தது. "அ...ம்...மா! எனக்கேன் இத்தனை ஜுரம், தெரியுமோ? நீ அண்ணைக்கு வள்ளிக்கு (கருப்பாயி பெண்) பச்சைப் பாவாடை வாங்கித் தரமாட்டேன் என்றயோ இல்லையோ, அதனால் தானே. அம்மா, இதோ, என்னை யாரோ கூப்பிடறுங்க. அம்மா .... அம்மா நான் போரேன்',

குழந்தை துடித்துக் கொண்டிருந்தது. "என் கண்ணே பத்மா.....பத்மா!" என்று அலறிய வண்ணம் நான் குழந்தையை வாறி அணைத்துக் கொள்ளப் போனேன்.

அப்பொழுதுதான் எனக்கு சுய புத்தி வந்தது. வாயில்புறத்திலிருந்து கண்மணி பத்மா, "என் அம்மா? என் கூப்பிட்டாய்? என் அப்படிக் கத்தினாய்?" என்று ஓடி வந்து என் எதிரில் நின்றாள். என் கண்களை நானே நம்ப முடியவில்லை. கையை விரித்தபடி நிஜமாக குழந்தை என் எதிரில் நிற்கிறாளோ என்று அவளையே வெறிக்க வெறிக்கப் பார்த்தேன்.

"அம்மா, அப்படி என்னை பார்க்காதேம்மா. பயமா இருக்குது" என்று ஓடி வந்து என் மடிமேல் உட்கார்ந்தாள். அதற்கப்புறம் ஒரு வாறாக சமாளித்துக் கொண்டு குழந்தையை முத்தமிட்டு "செல்லம், ஓடிப்போய் முனியனிடம் கருப்பாயியை கூட்டிவரச்சொல். வள்ளிக்கு ஒரு பச்சைப் பாவாடை வாங்கித் தரலாம். ட்ரைவர் வந்தானா பார்." தடுமாறிக் கொண்டே சொன்னேன்.

"அம்மா.....வந்து.....வந்து...' நீ கோவிச்சுக்க மாட்டாயே.....'. என்று தயங்கித் தயங்கி குழந்தை பயம் நிறைந்த பார்வையுடன் என்னைப் பார்த்தாள்.

"கோவம் எதுக்கு கண்ணே" என்றேன்.

"பின்னே.....வந்து.....என் பச்சைப் பாவாடையைக் கொடுத்து விட்டேன் வள்ளிக்கு. பாவம் வள்ளிக்கு அந்தப் பாவாடைனா ரொம்ப ஆசைம்மா. அதை நான் கட்டிக்கிற பொழுதெல்லாம், அதை வந்து தொட்டுத் தொட்டு பாப்பாள். "சின்னம்மா! இது எம்முட்டு நல்லா இருக்குது! எனக்கும் ஒண்ணு இதுபோல் வேணும்னு ஆசையா இருக்குது" என்பாள். அம்மா, பாவம், வள்ளிக்கு ரொம்ப காச்சல் இருந்து தாமே. அதை அவளே வச்சுக் கட்டும். எனக்கு வேறொண்ணு தெச்சு கொடுத்திடு"

குழந்தையின் மழலைச் சொற்கள் ஒவ்வொன்றும் என் உள்ளத்தை மெழுகுபோல் உருக்கிற்று. சின்னஞ்சிறு குழந்தையிடம் எத்தனை அன்பும், ஆதரவும், தயவும் நிரம்பிக் கிடக்கிறது. நானே சொல்லவே வேண்டாம்!

"செல்லம், அப்படியே ஆகட்டும். அதுதான் பழசா போச்சே. அது போலவே இன்னும் இரண்டு பாவாடைத் துண்டுகள் வாங்கி உனக் கொன்றும், வள்ளிக் கொன்றும் தைத்துக் கொடுக்கிறேன். ஆகட்டும்" என்றேன்.

குழந்தை ஆச்சரியத்தாலும், ஆனந்தத்தினாலும் கண்களை மலர விழித்து ஆகட்டுமென்று தலையை அழகாக அசைத்தாள்.

அப்பொழுது கருப்பாயி பத்மாவின் பச்சைப் பாவாடையும் கையுமாகக் காட்சியளித்தாள்.

"அம்மணீ, கொளந்தை இதை கொணாந்து குடுத்திருக்குதுங்க" என்று மேலே சொல்ல தயங்கிய படி என்னைப் பார்த்தாள்.

நான் இடுப்பில் செருகி யிருந்த அந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அந்தப் பாவாடை மீது வைத்து, "இந்தா கருப்பாயீ! ரூபாய், பாவாடை இரண்டையும் எடுத்துக்கோ. நீ உன் கடனை ஒண்ணும் அடைக்க வேண்டாம். நீயே வைத்துக்கொள் அந்தபணத்தையும்" என்றேன்.

அவள் ஆச்சர்யத்தாலும், ஆனந்தத்தாலும் சொக்கிப் போனதில் அதிசயமொன்றும் இல்லையே!

[லட்சுமி கடாட்சம்: முதலிய கதைகள். ஆசிரியை: ஸ்ரீமதி ஜெயலட்சுமி ஆர். சீனிவாசன் பிரசுரம்: அலயன்ஸ் கம்பனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ: 1-8-0.]

எத்தனையோ சிறுகதைகள் தமிழில் வெளி வந்திருக்கின்றன. வாழ்வை அப்படியே சித்திரிக்கும் சிறுகதைகள், கற்பனையின் எல்லையைக்காண முயலும் சிறுகதைகள், வாழ்வும் கற்பனையும் கலந்த கதைகள்—இப்படியாக வித விதமான கதைகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன.

உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில் எங்கும், எல்லாத் தேசத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. நவ ரசங்களையும் எழுத்தில் கொண்டு வர பிரயத்தனம் செய்யும்போது, முயற்சியின் பலனைப் பற்றியும் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். சோக பாவம் பொங்க வேண்டிய கட்டத்தில் சிரிப்பையும் நுழைத்துத்தான் தீர வேணும் என்று ஆரம்பித்தால், படிப்பவர்கள் எமாற்றத்துக்கு உள்ளாவார்கள்.

இந்த இலக்கணங்கள் எல்லாம் எந்தக் கதையையும் கட்டுப் படுத்த மாட்டாது. நல்ல கதையாக, நன்றாயிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் எல்லாரும் எழுதுகிறார்கள்.

'லட்சுமி கடாட்சம்' புத்தகத்தில் வந்துள்ள ஸ்ரீமதி ஜெய லட்சுமி அவர்களின் கதைகள் ரசங்களை தெளிவாக எடுத்துச் சொல்லுகின்றன. சாந்தம் இனிமை, முதலிய ஒவ்வொன்றும் அந்த அந்த உணர்ச்சிகளை அப்படியே தரக் காண்கிறோம். சாமான்ய சம்பவங்களையும் மிக அழகாக விவரிக்கிறார். படிக்கும் போது சலிப்பே ஏற்படுவதில்லை. கதை அமைப்பும் ரொம்ப நன்றாக அமைந்திருக்கிறது.

ஆசிரியை தந்துள்ள ஒவ்வொரு கதையும் நாம் தினசரி காணுகிற—அனுபவிக்கிற நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்தே நிர்மாணிக்கப்பட்டவைதான். கோமளமான பெண் உள்ளத்தின் போக்கை இக்கதைகளில் காணலாம்.

சமீப காலத்தில் கதை எழுதும் பெண் மணிகள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. நவ நவக் கதைகள் எழுதும் பெண் எழுத்தாளர்களிடையே மிக முக்கிய ஸ்தானம் ஸ்ரீமதி ஜெயலட்சுமிக்கு உண்டு. திறம்பட எழுத்துச் சக்தி உள்ள இவர் வாழ்வின் பல துறைகளையும் வருணித்து, இன்னும் பல அரிய நூல்களை தமிழ் உலகுக்கு அளிக்க வேண்டும். அந்த முயற்சிக்கு ரசிகர் உலகம் ஆதரவு அளிக்கும் என்று நம்புகிறோம். புதுப்புது பெண்மணிகளைத் தேடி ஆதரவு தரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் முயற்சியை பாராட்ட வேண்டும்.

ஆர். டி.

சுபா

ஆசிரியர்:
ரவீந்திரநாத் டாகூர்]

மொழிபெயர்ப்பு:
[ஆர். சண்முகசுந்தரம்

சுபாஷிணி என்று பெயர் வைக்கும் போது- பெண் ஊமையாகி விடுவாளென்று யார் கண்டார்கள்? அவளுக்கு மூத்த இரு பெண்களுக்கு சுகேஷிணி, சுஹாஷிணி என்று பெயர் வைத்தார்கள். ஆகையால் இளைய பெண்ணுக்கும் சுபாஷிணி என்ற பெயர் தான் பொருத்தமாக இருக்குமெனக் கருதி அவளுக்கு அந்தப் பெயரை வைத்தார்கள். இப்போது எல்லோரும் அவளைச் சுபா என்றே அழைக்கிறார்கள்.

எவ்வளவோ சிரமப்பட்டு மூத்த இரண்டு பெண்களையும் விவாகம் செய்து கொடுத்து விட்டார்கள். இப்போது கடைசிப் பெண்ணான சுபா மட்டும் தாய் தந்தையர்களுக்கு அந்தரங்கமான வேதனையைத் தந்துகொண்டு வீட்டிலிருக்கிறாள்.

அவளால் பேச முடியாது. ஆனால் எதையும் உணர்ந்து கொள்வாள். எல்லோருக்கும் இது ரொம்ப ஆச்சரியமாயிருந்தது. அவள் எதிரிலேயே அனைவரும் அவளுடைய எதிர் காலத்தைப் பற்றித் துக்கப்படுவார்கள். தெய்வக் குற்றமாக இந்த வீட்டில் தான் வந்து பிறந் திருப்பதாகக் குழந்தையிலிருந்தே அவளெண்ணி வந்தாள். ஆகையால் மற்றவர் கண்ணில் படாமல் இருக்கவே எப்போதும் அவள் விரும்பினாள். 'என்னை எல்லோரும் மறந்து விட்டால் ரொம்ப நல்லது' என்று அவள் நினைப்பாள். ஆனால், வேதனையை யாரால் தான் மறந்துவிட முடிகிறது? பெற்றோர்களின் மனதில் இடைவிடாது இது அழுந்திக் கொண்டே யிருந்தது.

முக்கியமாக அவளது தாய் இதைத் தன்னுடைய ஒரு களங்கமாகவே கருதினாள். ஏனென்றால், தாய்க்குப் புத்திரனைவிட புத்திரி தான் தன்னுடைய அம்சமாகவே தோன்றும். மகளிடம் ஏதாகிலும் 'குறைவு' உண்டாகி விட்டால் தங்களுடைய மானக் கேடாகவே அதைத் தாய்மார்கள் எண்ணுகிறார்கள். தந்தை வாணீகண்டன் சுபாவை மற்ற புதல்விகளைக் காட்டிலும் அதிகமாக நேசித்தார். ஆனால் தாயார் அவளைத் தன் கர்ப்பக் களங்கமாகக் கருதி அவளிடம் பற்றற்று இருந்தாள்.

சுபாவுக்குப் பேசும் சக்திதான் இல்லை. ஆனால் நீண்ட இரு பெரும் கரு விழிகள் இருந்தன. கருத்தை வெளியிட தாமரை போன்ற அவள் அதரங்கள் துடித்தன. வார்த்தை மூலம் நாம் பாவத்தை வெளிப்படுத்த எவ்வளவோ சிரமப்பட வேண்டியதாய் இருக்கிறது. மொழி பெயர்ப்பு செய்வது போல என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். சில சமயம் சரியாக இருப்பதே யில்லை. சக்திக் குறைவால் எவ்வளவோ தப்பு நேர்ந்து விடுகிறது. ஆனால் கரு விழிகள் விஷயத்தில் கொஞ்சம் கூட 'மொழி பெயர்க்க' வேண்டி இருப்பதில்லை. உள்ளம் அதில் பிரதி பலிக்கிறது. பாவம் தானகப் பரவி விடுகிறது. சில சமயம் ஆனந்தம் உண்டாகிறது. மற்றும் சில வேளைகளில் ஜாஜ்வல்யம் ஜ்வலிக்கிறது. இன்னும் சில

சமயங்களில் இருண்டு அணையப் போகிறது. ஒவ்வோர் சமயம் மறையப்போகும் சந்திரனே போல் அசையாது காணப்படுகிறது. மின்னல்போல் பளிச்சிடுவதையும் அங்குப் பார்க்கலாம். பிறந்ததி லிருந்தே முக பாவத்தைத் தவிர பாஷை அவளுக்கு இல்லாவிட்டா லும் அவளுடைய 'கண்பாஷை' யின் சக்தி ஆழமுடையதாக இருந் தது. அவள் கண்கள் துல்லிய மான ஆகாயத்தைப் போல, உத யாஸ்தமானத்தின் நடன அரங்க மாக விளங்கியது. இந்தக் காவ்ய ரசனையற்ற மனிதர்களுக்கு மத்தி யில் இயற்கை அன்னையே தோன் றியது போலிருக்கிருள் அவள். ஆகையால் சிறுவர் சிறுமிகள் அவ ளைக் கண்டு பயந்தார்கள். யாரும் அவளிடத்தில் விளையாடுவ தில்லை. அவள் ஆழ்ந்த மௌனத்தைப் போல் சந்தடியற்று தோழர்க ளற்று இருந்தாள்.

(2)

அந்தக்கிராமத்தின் பெயர் சண் டீபூர். அதன் ஓரத்தில் ஓடும் ஆறு வங்காளத்திலே சின்னஞ்சிறியது, குடும்பத்தின் சின்னப் பெண்ணைப் போல; வெகுதூரம் வரையிலும் அது போவதில்லை. இந்த இளம் வனிதை இரு கரைகளையும் வளப் படுத்திக்கொண்டே தன் வேலையை செய்து வருகிருள். இரு கரைக ளிலும் உள்ள கிராமங்களுக்கும இவளுக்கும் என்னவோ சம்பந் தம் ஏற்பட்டு விட்டதுபோலிருக்கி றது. சதா நிழல் படிந்த வண்ணம் இரண்டு பக்கத்தி லுள்ள கிராமங் களிலும் உயர்ந்த விருட்சங்களிருக் கின்றன. இதற் கிடையில்தான் கிராம்மிய லக்ஷ்மி பெருக் கெடுத் துத் தன்னை மறந்து அவசர அவ சரமாக அடி எடுத்து வைத்துக் கனிந்த உள்ளத்தோடு ஓடிக் கொண்டிருக்கிருள்.

வாணீகண்டருடைய வீடு இந்த ஜன் நதிக் கரையில்தான். இருக் கிறது. மூங்கில் வேலியும், உயர்ந்த கூரையும், மாட்டுத் தொழுவமும், ஏற்று மரமும், மா, பலா, வாழை முதலிய தோட்டங்களும் ஒவ் வொரு படகுக்காரர்களின் கவ னத்தையும் கவரும். இப்படிக் கவ னிப்பவர்களின் பார்வைக்கு அந்த ஊமைப் பெண் தென்படுவாளோ என்னவோ தெரியாது. ஆனல் வேலை வெட்டிகளிலிருந்து ஓய்வு கிடைத்தவுடனே அவள் இந்த ஆற்றங்கரையில் வந்து உட் கார்ந்து கொள்வாள்.

இயற்கைத் தேவி அவளுடைய பேச்சைப் பூர்த்தி செய்தாள். அதாவது இயற்கையே அவளுக் காகப் பேசியது. ஆற்றின் கலகல கீதமும், ஜன சந்தடியும், பட கோட்டிகளின் பரவசப் பாட்டும், பட்சி ஜாலங்கள் இன்னிசையும், விருட்சங்களின் 'மர் மர்' ஓசை யும்—எல்லாமாகச் சேர்ந்து இந்த யுவதியின் சந்தடியற்ற இதயத்தில் சமுத்திர அலைபோல் வந்து மோதி யது. பிரகிருதியின் விதம் வித மான இந்த விந்தையும், வர்ண விசித்திரங்களும்—இதுவும் ஊமை யின் பாஷைதான்—இந்த நீண்ட பெரிய விழிகளையுடைய பருவம் அடைந்த சுபாவுக்கு ஒரே அற்புத மாயிருந்தது. கேவலம் புழு பூச்சி கள் நெளியும் இந்த அற்ப உலகத் திலிருந்து மிக மேலான நட்சத்திர மண்டலம் வரையிலும் பாவ மற்ற பொருமலும், துக்கமும் துடிப் புமே நிறைந்திருந்தது.

மத்தியானம் செம்படவர்கள் சாப்பிடச் சென்று விடுவார்கள். வீட்டிலிருப்பவர்கள் தூங்குவார் கள். பறவைகளும் அமைதியாக இருக்கும். அக்கரை செல்லும் படகும் நின்று விடும். ஜனம் நிறைந்த பூமி தன்னுடைய சகல வேலைகளையும் நிறுத்திக் கொண்டு மௌன பிரதேசம் போல் மாறி

விடும். அப்போது இம்மௌனத் துக்கடியில் ஒரே ஒரு பிரகிருதிப் பெண்ணும், ஒரே ஒரு ஊமைப் பெண்ணும் எதிரும் புதிருமாக உட்கார்ந் திருப்பார்கள். ஒருவர், கண்ணுக் கெட்டியதூரம் வரை பரவி யிருக்கும் சூரிய ஒளியிலும், மற்றவர், சின்னஞ் சிறிய மரத்துநிழலிலும்தான்.

சுபாவுக்கு அந்தரங்கமான தோழிகள் யாரும் இல்லாமலும் இல்லை. இரண்டு பசுக்கள் இருந்தன. ஒன்றின் பெயர் சர்வஷி. இன்னொன்றின் பெயர் பாங்குலி. ஆனால், இந்தப் பெயரைச் சொல்லி அந்தப் பெண் தங்களை அழைத்ததை அவை ஒரு நாளும் கேட்டதில்லை! ஆனாலும் அவளுடைய காலடி ஓசையை அவை அறிந்திருந்தன --அவளுடைய வார்த்தையையும் ஒரு கருணைக் குரலையும், அதனுடைய மர்மத்தையும் சகஜமாக அறிந்து கொண்டன. சுபா அவைகளிடம் சில சமயம் அன்பு காட்டுவாள், அதட்டுவாள், வேண்டிக் கொள்வாள். இவைகளை எல்லாம் மனிதர்களை விட அதிகமாக அவை புரிந்து கொண்டன.

சுபா இரண்டு கைகளாலும் சர்வஷியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, முகத்தோடு முகம் சேர்த்துக் கொள்வாள். பாங்குலி ஆசையுடன் அவளையே பார்த்துக் கொண்டு நாவினால் நக்கும். அவள் தினசரி மூன்று வேளையும் தவறாமல் அவைகளிடம் வருவாள். இன்னும் அதிகமாயும் வருவதுண்டு. எப்போதாவது வீட்டில் ஏதாவது கடுஞ் சொல்லைக் கேட்க நேர்ந்தால், சுபா தன் 'தோழி' களைத் தேடி வந்து விடுவாள். அவளுடைய சாந்தம் நிறைந்த சரள முகத்தைக் கண்டதுமே எப்படியோ அவைகளும் அந்த அழகியின் மர்ம வேதனையைக் கண்டு கொள்ளும். சுபாவின் உடம்போடு உராய்ந்து கொண்டு, மெள்ள மெள்ள தங்கள் கொம்புகளை அசைத்து மிகுந்த துக்கத்துடன் அவளுக்கு ஆறுதலளிக்க முயற்சிக்கும்.

இந்தத் 'தோழி'களைத் தவிர ஆடு பூனைக்குட்டி முதலியவைகளும் இருந்தன. அவைகளுடன் சுபாவுக்கு அவ்வளவாக ஆழ்ந்த நட்பு இல்லை. இருந்தாலும் அவைகளும் சுபாவின் தோழர்கள்தான். பூனைக்குட்டி, பகல் இரவு எந்த நேரமாயிருந்தாலும் சரி, சுபாவின் மடியில் வந்து படுத்துக் கொண்டு தூங்கத் தொடங்கும். சுபா அதனுடைய முதுகில் கோமளமான சிறு விரல்களால் தடவிக் கொடுத்து, அதனுடைய சுகமான நித்திரைக்கு உதவி செய்யட்டும் என அது விரும்பும்.

(4)

உயர்ந்த ஜீவன்களில்கூட சுபாவுக்கு ஒரு துணை கிடைத்திருந்தது. ஆனாலும் அதனுடன் அந்தப் பெண்மணிக்கு எத்தகைய தொடர்பு இருந்த தென்பதை நிர்ணயிப்பது கடினம். ஏனென்றால் அது ஒரு பேசும் பிராணி! ஆகையால் இருவருக்கும் போதிய வார்த்தை கிடையாது!

அவன்தான் கோஸ்வாமி வீட்டு இளைய பிள்ளை பிரதாபன். பையன் வேலையற்ற சோம்பேறி. அவன் பாடுபட்டு குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வருவான் என்ற நம்பிக்கையைப் பெற்றோர்கள் மிகுந்த சிரமத்தோடு விட்டு விட்டார்கள். வீட்டிலுள்ளவர்கள் கோபமடைந்தாலும், இந்தத் துஷ்டப் பிள்ளைகள் அண்டை அயலார்களின் அன்புக்கு எப்படியோ பாத்திரமாகி விடுகிறார்கள். ஏனென்றால் எந்த வேலையிலும் நிலைத்திராததால் அவர்கள் 'தர்மக் குந்தாணி' ஆகி விடுகிறார்கள்.

எப்படி ஒரு நகரை யடுத்து ஒரு பூங்காவனம் இருக்க வேண்டிய தவசியமோ அதே போல் கிராமங்களிலும் இத்தகைய மனிதர்கள் இரண்டொருவர் இருக்க வேண்டியது அவசியமாகும். வேலை வெட்டியிலோ அல்லது களியாட்டங்களிலோ எங்கேயாவது ஒரு ஆளுக்குத் தேவை ஏற்படுமானால் அங்கே இவர்கள் 'ஆஜ்'ராகி விடுவார்கள்.

பிரதாபனுக்குத் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதில் ரொம்ப ஆசை. இந்தக் காரியத்திலேயே பெரும்பாலான நேரத்தைக் கழித்தான். மத்தியானம் ஆற்றோரத்தில் இவன் அடிக்கடி இவ்வேலையில் மூழ்கி இருப்பதைக் காணலாம். இதனால்தான் சுபாவை அடிக்கடி இவன் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்பட்டு வந்தது. எந்த வேலையாகட்டும், பிரதாபனுக்குத் துணை ஒருவர் கிடைத்து விட்டால் அவன் பாடு கொண்டாட்டம்தான். மீன் பிடிக்கும் போது பேச்சற்ற இந்தத் தோழிதான் ரொம்ப பொருத்தமா யிருந்தாள். சுபாவின் சைகைகள் அவனுக்குத் தெரியும். எல்லோரும் சுபாவை 'சுபா' என்றுதான் அழைத்தார்கள். ஆனால் பிரதாபன் இன்னும் கொஞ்சம் அன்பைச் சேர்த்து 'சூ' என்று அழைத்ததிற்கு இதுதான் காரணம்.

சுபா புளியமரத் தடியில் உட்கார்ந்து கொண்டிருப்பாள். பிரதாபன் அருகிலுட்கார்ந்து, தண்ணீரில் தூண்டிலைப் போட்டு அதையே பார்த்துக் கொண்டிருப்பான். பிரதாபனுக்குத் தினம் ஒரு வெற்றிலைச் சுருள் கொண்டு வருவாள். தூரத்தில் உட்கார்ந்து கொண்டு பார்க்கப் பார்க்க ஏதாவது உதவி பிரதாபனுக்குச் செய்ய வேண்டுமென்று அவளுக்கு இச்சை எழும்,. இந்த உலகத்தில், தானும் கூட ஒரு அவசிய மற்ற பொருள் அல்ல என்பதை அவள் எந்த விதத்தில் தெரியப் படுத்துவது? செய்வதற்கும் ஒன்றும் இல்லை. அதற்காக கடவுளிடம் ஒரு அசாதாரண சக்திக்காகப் பிரார்த்தனை செய்வாள். மந்திர பலத்தால் ஒரு அதி அற்புதத்தை விளைவித்துவிட ஆசைப் படுவாள். அதைக் கண்டு பிரதாபன், 'அடே! சுபாவா இதைச் செய்தது! எனக்குத் தெரியாமல் போச்சே'! என்று சொல்ல வேண்டும்.

சுபா ஒரு நாக கன்னிகையாக இருந்தால், மெள்ள மெள்ள நீரிலிருந்து வெளிவந்து மாணிக்கக் கல்லை படிக்கட்டில் வைத்து விடுவாள். பிரதாபன் மீன் பிடிப்பதை விட்டு அந்த மாணிக்கத்தோடு நீரில் மூழ்கி விடுவான். அதல பாதாளத்தில் சென்று பார்த்தால், அழகிய நவரத்ன மாளிகையிலே பொன்னூசலில்—யார் உட்கார்ந்திருப்பது? அதே பணிகண்டன் வீட்டு ஊமைப்பெண் 'சூ' தான்! அவனுடைய 'சூ' தான் நவரத்னங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த அமைதியான பாதாள லோகத்தின் ராஜகுமாரி!

என்ன இது? ஒருக்காலுமே நடக்க முடியாத இந்திர ஜாலமா என்ன? இல்லை, உண்மையில் இது ஜாலம் மாலம் அல்ல. ஆனபோதிலும், 'சூ' அந்த அமைதியான பாதாள உலகில் ராஜ வம்சத்தில் ஜன்ம மெடுக்காது, வாணீகண்டன் வீட்டில் பிறந் திருக்கிறாள். அதோடு, கோஸ்வாமி வீட்டுப் பிரதாபனை எந்த விதத்திலும் ஆச்சரியத்தில் மூழ்கடிக்க முடியாது!

(4)

சுபாவுக்கு வயது அதிகமாகிக் கொண்டே வந்தது. அவளும் தன்னை உணரத் தலைப்பட்டாள். ஏதோ ஒரு பௌர்ணமியில் எங்கோ ஒரு சமுத்திரத்திலிருந்து

கிளம்பிய தாபத்தின் அலை, அவளுடைய இதயத்தில் தாக்கி, வார்த்தைக் கெட்டாத உணர்ச்சியை உள்ளத்தில் நிறைத்தது. அவள் தனக்குள்ளே இதை அறிந்தாள், யோசித்தாள், கேள்வி கேட்டுப் பார்த்தாள். ஆனால் ஒன்றும் புரியவில்லை.

பௌர்ணமியின் ஆழ்ந்த இரவில் அவள் ஒரு நாள் படுக்கை அறைக் கதவை திறந்து பயத்துடன் வெளியே எட்டிப் பார்த்தாள். பூர்ணசந்திரன் கூட சுபாவைப் போலத் தான் உறங்கும் உலகிற்கு மேல், தனியாக உட்கார்ந்து விழித்துக் கொண்டிருக்கிறது; யௌவனத்தின் ரகஸ்யத்திலிருந்து, ஆனந்தம் சோகம்—என் சூன்யத்தின் எல்லை வரையில் எங்குமே மௌனம் தான். கலவரமடைந்த இப்பாலிகை நின்று கொண்டிருக்கிறாள்.

பெண்ணின் கலியாண விஷயமாக யோசித்து யோசித்து பெற்றோர்கள் அதிக துக்கமடைந்தார்கள். மற்றவர்களும் நிந்தித்தார்கள். சாதியிலிருந்து தள்ளி வைத்து விடவேண்டுமென்றுகூட பேசிக் கொண்டார்கள். வாணீகண்டன் நல்ல நிலைமையிலிருந்தான். உண்ண உடுக்கக் குறைச்சவில்லை. இதனால் அவனுக்கு விரோதிகளும் இருந்தார்கள்.

கணவனும் மனைவியும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். மணிகண்டன் எங்கோ ஒரு ஊருக்குப் புறப்பட்டான்.

ஒரு நாள் திரும்பி வந்து, 'கல்கத்தாவுக்குப்போவோம் புறப்படு' என்றான்.

பிரயாணத்துக்காக ஏற்பாடுகள் நடக்கலாயின. பனிப் படலத்தால் மூடப்பட்ட உதயத்தைப் போல சுபாவின் இதயமும் கண்ணீர்த் துளிகளால் மூடுண்டது. ஒரு நம்பிக்கை யற்ற ஆசையால், வாய் பேசா விலங்குகள் போல் பெற்றோர்களுடன் இது வரையில் அவள் வாழ்ந்து வந்தாள். தன் நீண்ட விழிகளால் அவர்களது முகத்தை உற்று நோக்கி என்னவாவது கண்டு கொள்ள முயன்றாள். ஆனால், அறிந்து கொள்ளும்படியாக அவர்கள் பேசவில்லை.

இதற்கிடையில் ஒரு நாள் மத்தியானம் பிரதாபன் தூண்டிலை நீரில் போட்டு விட்டு, 'ஏண்டீ 'சூ' உனக்கு மாப்பிள்ளை கிடைத்து விட்டானாம். நீ கலியாணம் பண்ணிக்கப் போகிறாயாம். எங்களையெல்லாம் இனி மறந்து விடாதே' என்று கூறிவிட்டு மீண்டும் அவன் மீன் பிடிப்பதிலே கவனம் செலுத்தினான்.

அம்பு பட்ட மான், 'நான் என்ன குற்றம் செய்து விட்டேன்' என்ற பாவனையில் வேடனையே பார்த்துக் கொண்டிருப்பது போல, சுபாவும் பிரதாபனைப் பார்த்தாள்.

அன்று மரத்தடியில் அவள் உட்காரவில்லை. வாணீகண்டன் தூங்கி எழுந்து படுக்கையறையில் உட்கார்ந்தபடி புகை குடித்துக் கொண்டிருந்தான். சுபா அவனுடைய காலடியில் வந்து உட்கார்ந்து அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு அழத் தொடங்கினாள். கடைசியாக அவளைச் சமாதானப் படுத்தினான். வாணீகண்டன் கன்னங்களிலும் கண்ணீர்த் துளிகள் உருண்டன.

அன்று சுக்கில பட்சத்துத் துவாதசி இரவு. சுபா படுக்கையிலிருந்து எழுந்து போய், தன்னுடைய அந்தப் பழகிய ஆற்றங் கரைப் புல் படுக்கையில் படுத்துக் கொண்டாள். அப் பாலிகைக்கு

பூமிதேவியை இரு கைகளாலும் தழுவிக்கொண்டு; 'தாயே, என்னைப் போகவிடாதே. உன் இரு கரங்களாலும் நீயும் என்னைப் போலவே தழுவிக்கொள்' என்று சொல்ல வேண்டுமென்றிருந்தது.

கல்கத்தாவில் ஒரு வாடகை வீட்டில் சுபாவின் தாய் அவளை ஒரு நாள் ஆடை அணிவித்து நன்றாக அலங்கரித்தாள். அழகாகத் தலை வாரி ஜடைபில்லை வைத்தாள். நகைகளைச் சுமத்தி அவளுடைய இயற்கையான அழகைக் கூடுமான வரையிலும் மறைத்தாள். சுபாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. அழுத அறிகுறி தென்பட்டு விடப்போகிறதே யென்று அம்மா ரொம்பவும் மிரட்டினாள். ஆனால் கண்ணீர் அந்த மிரட்டலைப் பொருட்படுத்த வில்லை.

தனக்கு வேண்டியவர்களுடன் மாப்பிள்ளை நேரிலேயே பெண்ணைப் பார்க்க வந்தான். பெண்ணின் பெற்றோர் துக்கத்தால் பீதியடைந்தார்கள். தேவதையே பலிகொள்ள நேரில் வந்திருப்பது போலிருந்தது. அழகாகச் சிங்காரித்து, அதட்டி மிரட்டி, பெண்ணின் கண்ணீரை இரு மடங்கு அதிகமாக்கி, பரீட்சைகளுக்கு அவளைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். வெகு நேரம் வரையிலும் பார்த்து விட்டு, 'மோசமில்லை' என்றார் அவர். முக்கியமாக அவள் அழுவதைக் கண்டு, 'இவளுக்கு இதயம் இருக்கிறது. இன்று தாய் தந்தையர் பிரிவுக்காக துக்கப்படும் இதயம், நாளை நமக்கும் நல்லதுதான், என்று மாப்பிள்ளை அனுமானித்துக்கொண்டார். சிப்பி முத்துப் போல் பெண்ணின் கண்ணீர் முத்தே பெண்ணின் மதிப்பை உயர்த்தியது. வேறு ஒன்றும் அவளுக்காகச் சொல்லப்பட வில்லை.

பஞ்சாங்கம் பார்த்து ஒரு சுப முகூர்த்தத்திலே சுபாவுக்குக் கலியாணம் நடந்தேறியது.

ஊமைப் பெண்ணை மற்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு தாய் தந்தையர் தங்கள் சொந்த ஊருக்குப் புறப்பட்டார்கள். அவர்களுடைய சாதியும் தப்பித்தது!

மாப்பிள்ளை, மேற்குப் பக்கம் எங்கேயோ வேலையிலிருந்தான். விவாகத்துக்குப் பிறகு உடனே மனைவியை அழைத்துக்கொண்டு, தன் வேலைக்குச் சென்று விட்டான்.

ஒரு வாரத்திற்குள்ளாகவே புது மணப் பெண் ஊமை என்பதை அனைவரும் அறிந்து கொண்டு விட்டார்கள். இதில், இவள் பேரில் ஒரு குற்றமும் இல்லை. இவள் யாரையும் ஏமாற்றவில்லை என்பதை யாரும் உணரவில்லை. அவளுடைய இரண்டு கண்களும் எல்லா விஷயத்தையும் சொல்லிக் கொண்டு தானிருந்தன. ஆனால் அதை அறிந்துகொள்ள முடியவில்லையே.

அவள் நாற்புறமும் பார்த்தாள். அவளுக்குப் பாஷை தெரியவில்லை. ஊமைப் பாஷை தெரிந்த அந்தப் பழக்கப்பட்ட 'முகங்கள்' அவள் கண்ணுக்குத் தென்பட வில்லை. அவளுடைய அமைதியான இதயத்தினுள்ளே ஒரு பெரிய கொந்தளிப்பு ஆரம்பமாகிவிட்டது. கடவுளைத் தவிர வேறு யாராலும் அதைக் கேட்க முடியாது.

* * *

இந்தத் தடவை, அவள் கணவன் தன்னுடைய கண் காதுகளை எல்லாம் நன்கு உபயோகித்து நன்றாகப் பேசும் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான்.

மலர் மணம்

வசந்தப் பூங்காவின் முகப்பில் இந்த இதழில் தமிழ் மணம் கமழ காட்சி தருபவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள். முதலியார் அவர்களின் அறுபதாவது ஆண்டு விழாவை யொட்டி இன்னும் பல இலக்கிய விழாக்கள் நடைபெறும் என்று நம்புகிறோம்.

மனோசக்தியின் நுட்பங்களை விவரித்து அபூர்வமான கதை ஒன்றை சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் உதவியிருக்கிறார்கள்.

உலகின் மிகச்சிறந்த பொருளாதார நிபுணரென போற்றப்படும் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் பணமும் பஞ்சமும் என்னும் விஷயமாக நாடகப் பாணியில் கட்டுரை தந்திருக்கிறார்கள். அறிஞர்களையும் குழப்பி வரும் பல சிக்கலான பிரச்சனைகள் அதில் தெளிவாக்கப் பட்டிருக்கிறது. தற்காலத் தேவைகளை விளக்கி அந்தத் தொடரில் மேலும் ஆர். கே. எஸ் அவர்கள் எழுதி வருவார்கள்.

"அழகியின் ஆசை" யைச் சித்திரிக்கின்ற ஸ்ரீமதி ஆர். சரஸ்வதி கற்பனைப் பெருக்கில் ரசிகர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருக்கிறார். வீணை கானம் போன்று ஒரு மதுரம் இவருடைய கதைப்போக்கிலே நிறைந்திருக்கிறது.

தமிழ் இலக்கியத்தில் தம் உள்ளம் கண்டுகளித்ததை, இனிமையாக இளம் வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விவரித்துள்ளார். பழமைக்கும் புதுமைக்கும் மையமாக ஒரு புதுத் திட்டத்தை உண்டாக்க அவர் காணும் கனவு பலித்து வருகிறது--பலிக்கும் என்பதில் சந்தேகம் தோன்ற முடியாது.

சிற்பி ஒருவனுடைய இதயத்திலெழுந்த லட்சிய வடிவங்களை இளம் சொற் சிற்பி கே. பி. கணபதி அவர்கள் அருமையாகத் தீட்டி யிருக்கிறார். கலைக் கதைகளின் லட்சியங்களுக்கு இலக்கணமாக விளங்குகிறது இவருடைய இலட்சிய வடிவு.

இந்த இதழில் வெளியாகும் சில வர்ணப்படங்களின் விளக்கமாகப் பாமரப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இந்த மாதிரியே ஒவ்வொரு இதழிலும் கவர்ச்சி மிக்க அம்சங்களை எதிர்பார்க்கலாம்.

அடுத்த இதழில் எவ்வளவோ ருசிகரமான விஷயங்கள் வெளி வருகின்றன. ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறோம். பதின்மூன்று வருஷங்களாக மோனத் தனித் தவத்தில் நின்று, பல பேருண்மைகளை நெஞ்சத்தே கண்ட சுவாமி சுத்தானந்த பாரதியார் "வாழ்க்கை லட்சியம்" தொடரில் எழுதுகிறார்கள். சுவாமிகளுடைய வாழ்வின் லட்சியம் வாழ்விற்கே வழி காட்டியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

—ஆசிரியர்

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ், தர்ம ஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

கந்தன் & கம்பெனி.

கோயமுத்தூர்.

இப்போது தயாரிலுள்ள படங்கள்.

தமிழ்.

காமடியன் சாரங்கபாணி
காளி என். ரத்தினம்
பி. சரஸ்வதி, ஜெயா
முதலியோர் நடித்த
காரைக்காலம்மையார்

★

P. B. ரங்காச்சாரி
M. R. சந்தானலக்ஷ்மி நடித்த
ஆராய்ச்சிமணி
அல்லது
மநுநீதிகண்ட சோழன்

தெலுங்கு.

'வாஹினி'யாரின் உன்னத படம்
நாகையா நடித்தது
பக்தபோதனு

★

ராஜராஜேஸ்வரியாரின்
உன்னதப்படம்
கண்ணாம்பா
நடித்தது
சுமதி

எதிர்பாருங்கள்!

தமிழ்ப்பெரியார் திருஞானசம்பந்தர் பெருமையை விளக்கும்

★ **பூம்பாவை** ★

தயாராகிறது.

மற்றும் உங்களுக்கு வேண்டிய நமது படங்களுக்கும் எழுதுங்கள்!

கந்தன் & கம்பெனி, கோவை & மதுரை.



கோதாவரீ நதி—நாஸிக்

பிரதி தினமும் நூற்றுக்கணக்கான யாத்திரீகர்கள் தங்கள் பாபங்களைப் போக்கி புனிதமடைய நாஸிக்கிலுள்ள கோதாவரீ புண்ணிய தீர்த்தங்களில் வந்து ஸ்நானம் செய்கிறார்கள்.

பாரத நாட்டிலெங்கும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினசரி தங்கள் தேக சுத்தத்திற்காக ஹமாம் ஸோப்புத் தேய்த்து ஸ்நானம் பண்ணுகிறார்கள். ஹமாமின் திரண்ட குளிர்ந்த நுரையானது வெகு சுகமும் ஆசுவாசமும் அளிக்கத்தான் செய்கிறது.



ஹமாமின் புது வடிவத்தைக் கவனிக்கவும். அதன் எடை முன்போலவேதான் இருக்கிறது.

டாம்கோ விற்பனை இலாகா பெரியகடை வீதி, பாலக்காடு

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்-டாடாபுரம் & பம்பாய்.

ரோஜா மார்க் நெய்யின் மேன்மைக் கணிக்கப் பட்டுள்ள அத்தாக்ஷிகளில் ஒன்று

Public Health Laboratories.

PATNA.

No. 6 of 1942. Date 30.9.42.

Received a sample of Ghee.

Marked ____ from The Proprietor, Lingam &Cp., Coimbatore.

for Chemical ~~Bacteriological~~ analysis on the 18th September, 1942

Butyro-Refractometer Reading at 40°C	--	43.6
Reichert Wollny value	-- -- --	24.2
Phytosteryl acetate test	-- -- --	Negative

Opinion:- The sample of ghee is genuine.

Date. The 30th September 1942. *Chemical Analyst to Government*

Agrawal Printing Works, Patna.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

விளம்பரதாரர்களுக்கு

விளம்பரத்தில் உபயோகிக்கும் பிளாக்குகளையும், விளம்பர மேட்டர்களையும் பிரதி ஆங்கில முதல் தேதிக்குள் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

ஏஜண்டுகளுக்கு

வசந்தத்திற்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை. டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்:
வசந்தம் காரியாலயம்
கோயமுத்தூர்.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

வசந்தம் சந்தா விவரம்

ஒரு வருஷத்துக்கு ரூ	9	0	0
தனிப் பிரதி விலை அணு	0	12	0

நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டால் பிரதி தமிழ் மாதம் முதல் தேதிகளில் 'வசந்தம்' உங்களைத் தேடி வந்து விடும். விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்:
வசந்தம் காரியாலயம்
4/12 A. திருச்சி ரோடு
கோயமுத்தூர்.

199288

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor; R. Thirugnanasambandam.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

**1934-ஷு கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில்
நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி
பத்திரம் பெற்றிருக்கிறோம்.**

நூற்றல்:
**20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை
நூல் தயாரிக்கிறோம்.**

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல் சர்டிங்
லாங்கிளாத் சதர்
வேஷ்டிகள் டவல்
தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டுடியோஸ்

வால்மீகி

டைரக்ஷன் – S. M. ஸ்ரீராமுலு நாயடு
வசனம் – இளங்கோவன் + பாபநாசம் சிவன் – பாட்டு

தியாகராஜ பாகவதர் * ராஜகுமாரி
ரங்காச்சாரி - கிருஷ்ணன் - மதுரம்